கவிதை அலைவரிசை

பேராசிரியர் இரா.மோகன்

கவிதை அலைவரிசை

சுரதா முதல் இறையன்பு வரை

பேராசிரியர் இரா. மோகன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

வெளியீடு:
'அறிவகம்'
7/705, ஆழ்வார் நகர்
நாகமலை
மதுரை - 625 019

முதற்பதிப்பு : ஏப்ரல், 2007
திருவள்ளுவர் ஆண்டு : 2037
உரிமை : ஆசிரியருக்கு

நூலின் பெயர் : கவிதை அலைவரிசை
ஆசிரியர் பெயர் : இரா. மோகன்
நூலின் தன்மை : கட்டுரைகள்
முதற் பதிப்பு : ஏப்ரல், 2007
தாளின் தன்மை : வெள்ளைத் தாள்
நூலின் அளவு : கிரவுன்
அச்சு எழுத்து அளவு : 11 புள்ளி
மொத்தப் பக்கங்கள் : 192
நூலின் விலை : ரூ. 60.00
நூற் கட்டுமானம் : அட்டைக் கட்டு
ஒளி அச்சுக் கோவை : கீர்த்தனா லேசர், மதுரை
செல் : 94428-83526
நூல் அச்சிட்டோர் : தீக்கதிர் அச்சகம், மதுரை

விற்பனை உரிமை:

மீனாட்சி புத்தக நிலையம்

மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு,மதுரை - 625 001.
தொலைபேசி: அலுவலகம்: 0452-2345971 வீடு:2560517
ஈ-மெயில் : meenakshiputhakam@hotmail.com

ஒரு சொல்

தொலைக்காட்சி உலகில் இசைக்கென்றும் விளையாட்டுக் கென்றும் புவியியலுக்கென்றும் தனித்தனியே சிறப்பு அலைவரிசைகள் இருப்பது போல் கவிதைக்கென்றே தனிப்பட்ட முறையில் ஓர் அலைவரிசை இருந்தால் எப்படி இருக்கும்? அதில் 'அகரம் முதல் னகரம் இறுவாய்' கவிதை பற்றியும் கவிஞர் பற்றியுமே நிகழ்வுகள் இடம்பெற்றால் சிறப்பாகவும் சுவையாகவும் இருக்கும் அல்லவா? அழகிய இக் கற்பனையின் - கனவின்- விளைவே 'கவிதை அலைவரிசை' என்னும் இந் நூல்.

மதுரை 625 019

இரா.மோகன்

02.04.2007

பொருளடக்கம்

பக்கம்

I. கவிஞர் உலா

1. உவமைக்கோர் சுரதா 17
2. குலோத்துங்கனின் கவிதை உலகம் 25
3. கவிஞர் சிற்பியின் 'மகாத்மா' 32
4. சந்தகக் கவிஞர் கந்தர்வன் 39
5. மு. மேத்தாவின் கவிப் பார்வை 48
6. 'அசலான தமிழ்க் கவிதைகள்' 56

II. நறுக்குகள் அலைவரிசை

7. மித்ராவின் நறுக்குகள் 62
8. அறிவுமதியின் நறுக்குகள் 68
9. நவதிலக்கின் நறுக்குகள் 75
10. செ. ஆடலரசனின் நறுக்குகள் 80
11. ந. முத்துவின் நறுக்குகள் 86
12. தங்கம் மூர்த்தியின் நறுக்குகள் 91

III. அணிந்துரை அணிவகுப்பு

13. பாரதி கனவு கண்ட 'புதிய பாப்பா' 98
14. ஹைகூ எனப்படுவது யாதெனின்... 104
15. வண்டமிழில் கவி பாடும் வட்டாட்சியர் 110
16. காதலுக்கு மரியாதை வாழ்வில் உயர்வு 120

17. கவிதை ஆற்றுப்படை 125

18. மரணத்திற்கு மரியாதை செய்யும் கவிஞர். 131

IV. கவிதைப் பாசறை

19. 'பிறவிதோறும் தொடரும் நட்பு' 139

20. பாரதியார் போற்றும் 'தலைப்படு மனிதர்' 144

21. இராமாநுசக் கவிராயர் எனும்
'நல்லதோர் வீணை' 149

22. 'தன்னேரிலாத தமிழ் யாப்பு' 160

23. வித்தியாசம் + தனித்துவம்= வெற்றிச்செல்வன் 166

24. நிலா போல் நிலைத்து நிற்கும் படைப்புப் பல
படைக்கும் படைப்பாளி : வெ. இறையன்பு 178

எண்ணப் பூக்கள்

'கவிதை அலைவரிசை' கட்டுரைகளைப் பற்றிய அறிஞர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்களின் மதிப்பீடுகள் சில:

✸ தங்களின் தேன் சுவைக் கட்டுரைகளை 'மனித நேயம்', 'கவிதை உறவு' போன்ற இதழ்களில் படித்து இன்புறுகின்றேன். எல்லாம் நூல் வடிவம் பெறட்டும்.

-கவிவேந்தர் கா.வேழவேந்தன், சென்னை

✸ 'மனித நேய'த்தில் தங்களின் கவிதை நூல் ஆய்வு மிகவும் சிலாக்கியமாக இருக்கிறது.

- எழுத்தாளர் கர்ணன், மதுரை

✸ 'புதுகைத் தென்றல்', 'கவிதை உறவு', 'மனித நேயம்' இதழ்களில் தங்களது கட்டுரைகள் அழகான, எளிய, ஆழமான அறிமுகத்தை நிகழ்த்துவனவாய் அமைந்துள்ளன. கவிஞர்கள் மேல் தங்களது சூரியப் பார்வை பட்டால் மேலும் வெளிச்சமாய்த் தெரிகிறார்கள்.

-கவிஞர் தங்கம் மூர்த்தி, புதுக்கோட்டை

✸ தொடர்ந்து 'புதிய காற்'றில் எழுதுங்கள். ஆடலரசன் பற்றிய கட்டுரை மிக நேர்த்தி. சிறப்பாக இருந்தது.

-முனைவர் அரச முருகுபாண்டியன், பொறையாறு

✸ பேராசிரியர் மோகன் அவர்களுடைய தமிழ்க் கவிதை ஆய்வுகள் இன்றைய தலைமுறைக்கு - குறிப்பாக ஆய்வாளர்களுக்கு நற்பயன் நல்கும்.

-குமரிச் செழியன்,சென்னை

✦ பேராசிரியர் மோகன் அறிமுகப்படுத்திய 'அசலான தமிழ்க் கவிதைகள்' என்னையும் அக் கவிதைகளின் பக்கம் இருத்தியது.

-டாக்டர் பூவண்ணன், கோவை

✦ டாக்டர் இரா. மோகனின் பழந்தமிழிலக்கிய நயக் கட்டுரை ('பிறவி தோறும் தொடரும் நட்பு') ஒரு செறிவான இலக்கிய அனுபவம் தருகிறது.

-எழுத்தாளர் மேலாண்மை பொன்னுசாமி, விருதுநகர்

✦ 'பிறவிதோறும் தொடரும் நட்பு' குறித்து டாக்டர் மோகன் அவர்களின் கட்டுரை வாயிலாக இலக்கியத்தில் நட்பின் ஆழங் குறித்து உணர முடிந்தது.

-ஆரிசன், கீழ்க்கொடுங்காலூர்

✦ 'மகாத்மா' நூல் அறிமுகம் முனைவர் மோகன் அவர்களால் திறனுறச் செய்யப்பட்டுள்ளது.

-கவிக்கோ ஞானச்செல்வன், சென்னை

✦ 'மகாத்மா' நூல் பற்றிய விமர்சனத்தைப் பேராசிரியர் இரா. மோகன் மிகச் சிறப்பாகப் பதிவு செய்து இருந்தார்கள்.

-இரா. இரவி, மதுரை.

✦ பேராசிரியர் இரா. மோகனின், கவிஞர் சிற்பியின் 'மகாத் மா' கட்டுரை செறிவான இலக்கிய நயம், தமிழ் மணம் கொண்டுள்ளது.

-சு. இலக்குமண சுவாமி, திருநகர்

✸ 'மு.மேத்தாவின் கவிப்பார்வை' சிறப்பான ஆய்வாக இருந்தது. இரண்டு பக்கத்தில் கட்டுரையை மிக நேர்த்தியாகச் செய்துள்ள பேராசிரியர் இரா. மோகன் அவர்களை அவசியம் பாராட்டியே ஆக வேண்டும்.

-நந்தவனம் சந்திரசேகரன், திருச்சி

✸ 'மு. மேத்தாவின் கவிப் பார்வை' கண்ணீர்ப் பூக்கள் மேத்தாவை நினைவூட்டுகிறது, எளிமை தான் அவரது எழில்.

-பொன் முத்துக்குமார், பணகுடி

✸ பேராசிரியர். முனைவர் மோகனின் 'ஹைகூ' திறனாய்வு அருமை, கூர்மை!

-RKS சம்சுகனி, டி. மாரியூர்

✸ பேராசிரியர் மோகன் அவர்களின் ஹைகூ திறனாய்வு அபூர்வமான அலசல்.

-அ.ந. ராஜராஜன், மதுரை

✸ பேராசிரியர் மோகனின் ஆய்வு, ஹைக்கூ ஆர்வலர்கள் - படைப்பாளர்களுக்கு இனிய தூண்டல்!

-பொன்.குமார், சேலம்

✸ பேராசிரியர் மோகன் வழங்கும் 'ஹைகூ உலா'வில் 'மித்ராவின் நறுக்குகள்' அழகை வெளிப்படுத்தும் அருமையான அலசல், ஆழமான பார்வை!

-எம்.கவிக்கருப்பையா, பெரியகுளம்

✸ கவிழ் செ. ஆடலரசனின் நறுக்குகள் பற்றிய பேராசிரியர் இரா.மோகன் அவர்களின் கட்டுரை சிறப்பாக அமைந்துள்ளது. பல்வேறு தளங்களில் சிந்தித்துப் பல நூல்களை எழுதிய பேராசிரியர் மோகன் அவர்களின் நடை மிக எளிய நடை ஆகும். நம்முன் நின்று ஒருவர் பேசுவதுபோல், சங்க இலக்கியம் முதல் சம கால இலக்கியம் வரை மேற்கோள் காட்டும் அவரது உத்தி பாராட்டத்தக்கது.

- சு. இராகவன், மதுரை

✸ 'பாரதியார் போற்றும் தலைப்படு மனிதர்' என்னும் தலைப்பில் அமைந்த கட்டுரையில் மகாகவி பாரதியின் வைர வரிகளைக் கொண்டே கட்டுரையை நிரப்பி அழகு செய்துவிட்டார் முனைவர் இரா. மோகன். கவிதை வரிகள் கட்டுரை வரிகளோடு பின்னிப் பிணைந்து ரசிக்க வைத்தன.

-கவிஞர் அய்யாறு வாசுதேவன், சென்னை

கவிதை ஆற்றுப்படை

கவிஞர் பாலா

வீட்டிற்கும் வீதிக்கும் அறிமுகம் தேவை. விளக்கிற்கும் வெளிச்சத்திற்கும் அறிமுகம் தேவை இல்லை. முனைவர் இரா. மோகன் நாடறிந்த தமிழ்ப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் ஒப்பிலக்கியத் துறைத் தலைவர். நூல்கள் பல எழுதிய தமிழறிஞர், ஆய்வாளர், பேச்சாளர். தம் துணைவியார் முனைவர் நிர்மலா மோகன் அவர்களுடன் இணைந்து மேடையிலும், வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களிலும் உரைகள் நிகழ்த்தி வெற்றிகள் ஈட்டிய சாதனையாளர். எவரையும் ஈர்க்கும் இனிய பண்பும் எளிதில் நட்புக்கொள்ளும் நேயமும் அவரின் முகவரிச் சீட்டு. அவருடைய **'கவிதை அலைவரிசை'** என்ற இந்த நூல் கவிதைத் துறையில் அவருக்குள்ள வாசிப்பையும் நேசிப்பையும் எடுத்துக் காட்டுகிறது. 'உவமைக் கவிஞர்' சுரதா, 'அறிவியல் கவிஞர்' குலோத்துங்கன், புகழ்பெற்ற வானம்பாடிகள் கவிஞர் சிற்பி, கவிஞர் மு.மேத்தா போன்ற கவிகள் தொடங்கி, இரா.இரவி, தங்கம் மூர்த்தி போன்ற இன்றைய இளம் கவிகள் வரை பல கவிஞர்களுடைய படைப்புகள் பற்றிக் குறிப்புகளும், அவர் தம் சிறப்புகளும் இந்நூலில் வரைந்து காட்டப்பட்டுள்ளன. 'காந்தி காவியம்' எழுதிய இராமாநுசக் கவிராயர் முதல், கவிஞர் சிற்பி

எழுதிய 'மகாத்மா' என்ற கவிதை நூல் வரை பேராசிரியர் மோகன் பார்வை பதித்துள்ளார். கு.அ. தமிழ்மொழி என்ற சிறுமியின் பாடல் பற்றியும், புகழ் பெற்ற இடதுசாரிக் கவிஞர்களான வைகை வாணன், கந்தர்வன் ஆகியோர் குறித்தும் கருத்துரைத்துள்ளார். இந்தப் பட்டியலில் என் கவிதை நூல்களையும் சேர்த்து எடை போட்டுள்ளார். இந்நூல் அவரின் அகண்ட வாசிப்பை அடையாளம் காட்டுகிறது.

'படிப்பு பெருகுது/ பாவம் தொலையுது' என்று பாரதி எழுதினார். இன்று பலர் வேலை கிடைத்தவுடன், ஆசிரியரானவுடன் 'படிப்பது பாவம்' என்று விட்டு விடுகின்றனர். பாடப் புத்தகங்களைத் தாண்டி அவர்களுக்குப் படிப்பதற்கு செய்தித்தாள் கூட இல்லை, பல கல்வி நிலைய நூலகங்களில் ஒருவிதத் தனிமையும் வெறுமையும் காணக் கிடக்கின்றன. 'சாந்துணையும் கற்பது' பற்றித் திருவள்ளுவர் எழுதினார். முடிவற்ற அறிவுப் பயணமே ஆசிரியத்துவத்தின் அடையாளம். பேராசிரியர் மோகனின் இந்நூல் அவரின் அறிவுலகப் பயணத்தை, அதில் அவர் கண்டடைந்த செல்வங்களை நமக்கு அறிமுகம் செய்கிறது. வாசிக்க மறந்தவர்களுக்குப் புத்தகங்களை நோக்கி ஆற்றுப்படுத்துவது போல் சிறந்த கவிதைகளைப் பேராசிரியர் அடையாளம் காட்டுகிறார். விரித்தும் நயங்கள் உரைத்தும் கவிஞர்களின் தனித்தன்மைகள் பற்றிப் பேசுகிறார். அவரை ஆட்கொண்ட கவிதை வாசகங்களை நமக்கு அறிமுகம் செய்கிறார். அவர் தம் தெரிவில் இரா.மோகன் அவர்களின் ஈடுபாடும் புலப்படுகிறது. தமிழ் உணர்ச்சி, எளியோர் மீது பரிவு, முதிர்கன்னிகளுக்கு இரங்கல், வாழ்வின் புதிய அனுபவங்களுக்கு வரவேற்பு, ஊழல், சுரண்டல் போன்றவற்றிற்கு

எதிர்ப்பு போன்ற கருத்தியல்களில் பேராசிரியருக்கு உள்ள ஈடுபாட்டை அவர் எடுத்துக்காட்டும் கவிதை வாசகங்கள் அறிவிக்கின்றன. நூலில் இடம் பெற்றுள்ள ஒரு சில கவிதைகளை இங்குத் தருகின்றேன்.

சுரதாவின் கவிதைகள் உவமைகளால் கட்டப்பட்டவை என்பதை விளக்க அவருக்குக் கீழ்க்கண்ட சுரதாவின் கவிதை வரி உதவுகின்றது.

''படுத்திருக்கும் வினாக்குறிபோல் மீசை வைத்த
பாண்டியர்கள் வளர்த்த மொழி''

இது போன்றே 'நல்லதோர் வீணை' என்று அவர் பாராட்டும் இராமானுசக் கவிராயர் காந்தியடிகள் சுடப்பட்ட காட்சியை வருணிக்கும் பாடலினை 'அவலம் சுமந்த பாடல்' என்று பேசுகின்றார்.

''அறக்கனியே அன்பரசே அருந்துணையே அறிவாற்றல்
சிறந்தொளிருஞ் செந்நலமே செய்வினையின் பயன்அறவே
துறந்தாற்றும் பெருந்துறவே பேயுலகம் புலம்பிவிழ
மறைந்தனையே நிரந்தரமாய் மதியிழந்தார் செய்கையினால்''

இதுபோன்றே, அவர் எடுத்துக்காட்டும் கவிதை வரிகள் வாசகர்களை ஈர்த்துக் கவிஞர் தம் பெருமையை உரைக்கின்றன.

''காலமெலாம் விடுமுறையா! பொழுதை வீணே
கழிப்பதுவும் பண்பாடா?''

(குலோத்துங்கன்)

''ஜீவானந்தம் / உங்களுக்கு/ சொத்து எவ்வளவு/ இருக்கும்?'

-அண்ணல் கேட்டார்

'பளிச்'சென வந்தது ஜீவாவின் பதில்/'இந்தியாதான்/
என் சொத்து...'
அருமைத் தொண்டனைக்/கட்டிப்பிடித்து/அண்ணலின்
திருவாய்/அமுதம் பொழிந்தது:
'இல்லை ஜீவானந்தம்/நீங்கள் தான் இந்தியாவின்சொத்து!''
(கவிஞர் சிற்பி)

''ஆண் பிறந்தால்
அட்சயப் பாத்திரம்
பெண் பிறந்தால்
பிச்சைப் பாத்திரம்''
(கந்தர்வன்)

''தண்ணீர் வேண்டி
பிரமாண்டமான
பேரணி...
நடிகர்களைக் காணக்
காத்துக் கிடந்த
கூட்டம்
கவலைப் பட்டது...
மழை வந்து
கெடுத்து விடுமோ
என்று''
(மு. மேத்தா)

''என்ன நம்பிக்கை
தண்டவாளங்களின் நடுவே
தளிர்கள்''

(மித்ரா)

''மணவறை
மெதுவாகப் பெருக்குகிறாள்
முதிர்கன்னி''

(அறிவுமதி)

''மனைவி சிரிப்பு
பயமாயிருக்கிறது-
முதல் தேதி''

(நவதிலக்)

''எத்தனை பேர் கூடி இழுத்துமென்ன
இன்னும் வரவில்லை
சேரிக்குத் தேர்''

(ஆடலரசன்)

''ஆயாவின் மடியில்
உறங்கும் குழந்தை
கனவில் அம்மா''

(தங்கம் மூர்த்தி)

''திரைப்படத்தின் பெயர் கூடத் தமிழில் இல்லை
தினந்தோறும் வருகின்ற செய்தித்தாள்களில்
பூந்தமிழே இக் கொடுமை போனால்அன்றி
புதுமைநிலை உனக்கில்லை, எனக்கும் இல்லை.''

(வைகைவாணன்)

''உன் தோட்டத்துக் கள்ளிப்பூக்கூட
அழகாயிருக்கிறது
தண்ணீர் விடுவது
நீயாக இருப்பதால்''

(செந்தூர் பாண்டி)

இந்தக் கவிதைகளின் தெரிவு பேராசிரியர் மோகனின் கவிதைக் காதலை ஒருபுறம் காட்டுகின்றது. அவர்தம் கருத்தியல் சார்பையும் காட்டுகின்றது.

இத்தகைய நூல்கள் இளம் படைப்பாளிகளுக்கு எழுத்துப் பயிற்சியாகப் பயன்படும் ஒருபுறம். ஆய்வாளர்களுக்கு நம் காலமும் களமும் காட்டி வழிப்படுத்துவதாகவும் அமையும்.

'கவிதை அலை வரிசை' கேட்டுப் பாருங்கள். பேராசிரியர் மோகனின் 'லயம்' கூட்டி தமிழ் ரசம் கூட்டி இன்பம் நல்கும்.

நெல்லை - 627 011 **பாலா**
08.04.2007

1

உவமைக்கோர் சுரதா

"உலகம் தோன்றிய நாள்தொட்டு - மொழி தோன்றுவதற்கு முன்னமே - இந்த உவமை இருந்து வந்திருக்க வேண்டும். ஒன்றைப் பகுத்தறிய மனிதன் கற்றுக் கொண்ட அந்த நாளிலேயே உவமம் வாழ்வில் வந்துவிட்டது."

- அ.மு.பரமசிவானந்தம்*

''கவிதைக் கன்னிக்கு மணமும் மலர்ச்சியும் அளிக்கும் வாசனைத் திரவியம் உவமையே. உவமையற்ற கவிதை உப்பற்ற கறிக்குச் சமம். கவிஞன் கையாளும் உவமையே அவன் கற்பனை வளத்துக்குச் சாட்சி கூறும். கவிதைக்கு வலக்கை போல் பணி புரிவது உவமையே'' (க. வீரகத்தி, கடலும் படகும், ப.30) என்பர் அறிஞர். ஒரு கவிஞர் கையாளும் உவமைகளைக் கொண்டு அவரது உள்ளத்தையும் உணர்வையும் உய்த்துணரலாம். ஒரு படைப்பில் ஆழ்ந்திருக்கும் கவியுளத்தைக் காட்டுவதில் உவமை பெறும் இடம் முக்கியமானது; முதன்மையானது. ஓர் உதாரணம் காண்போமா?

'தமிழரெல்லாம் தங்கள் குழந்தைகளுக்கு என்றுமுள செந்தமிழில் பெயரிடுதல் வேண்டும்' என்னும் கருத்தை வலியுறுத்துவதற்குச் சுரதா கையாண்டுள்ள உவமை வருமாறு:

* நல்ல தமிழ், பக்.121-122.

''தாய்மொழியை ஒதுக்கிவைத்துப் பிறநாட் டாரின்
தழுவல்மொழிப் பெயரிட்டுக் கொளநி னைத்தல்
தாய்ப்பாலை வேண்டாது நாய்ப்பால் உண்ணச்
சம்மதிக்கும் தன்மையது போன்ற தாகும்''

(தேன் மழை, ப.249)

'கனி இருப்பக் காய் கவர்ந்தற்று' என்பது போல், தாய்ப் பால் இருக்க நாய்ப்பால் உண்ண எவரேனும் சம்மதிப்பார்களா? அது போல் தான் தாய்மொழியை ஒதுக்கி வைத்துப் பிற நாட்டாரின் தழுவல் மொழிப் பெயரிட்டுக் கொள்ள நினைப்பதும். கவிஞரின் பார்வையில் என்றுமுள செந்தமிழ்ப் பெயரிடாமல், இரவல் மொழிப் பெயரிடுதல் என்பது அடிமைத் தன்மையின் அடையாளம் ஆகும்.

தமிழ் உணர்வைப் பறைசாற்றும் உவமைகள்

உவமையைப் பொறுத்த வரையில், பாரதிதாசனிடம் மேலோங்கிக் காணப்படுவது சமூக உணர்வு; சுரதாவிடம் சிறந்து விளங்குவது தமிழ் உணர்வு. தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம், தமிழ்ப் பண்பாடு முதலான தமிழ் தொடர்பான செய்திகளைச் சுரதா தம் உவமைகளில் ஒல்லும் வகையெல்லாம் எடுத்தாண்டுள்ளார்.

''வேற்றுமையை வினைச்சொற்கள் ஏற்ப தில்லை
வெறும்பாட்டைத் தமிழ்ச்சங்கம் சேர்ப்ப தில்லை''

(தேன் மழை, ப.57)

''எப்போதும் இனிப்பவளே! 'ழ'கரம் என்னும்
எழுத்தே போற் சிறந்தவளே!''

(தேன் மழை, ப.69)

''.... தனித்தி யங்கும்
செந்தமிழ் போன்றே யானும்
சிறந்தவள்''

(தேன் மழை,ப.257)

''ஆய்த வெழுத்தின் அமைப்பே அடுப்பாம்''

(தேன் மழை, ப.255)

இங்ஙனம் தமிழின் தனித்தன்மையைப் பறைசாற்றும் விதத்தில் சுரதா கையாண்டுள்ள உவமைகள் பலவாகும்.

புத்தம் புதிய உவமைகள்

சுரதாவின் உவமைகள் புத்தம் புதியவை; பொருத்தமானவை; இதுவரை எவரும் கையாளாத தனித்தன்மை வாய்ந்தவை; வித்தியாசமானவை; 'உவமைக் கவிஞர்' என்னும் சிறப்புப் பெயர் சுரதாவுக்கு வழங்குவதற்குக் கட்டியம் கூறும் விதத்தில் அமைந்தவை. 'புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு' என்பது போல், சுரதாவின் 'தேன் மழை' தொகுப்பில் படிப்பவர் நெஞ்சை அள்ளும் வகையில் உவமைகள் மண்டிக் கிடக்கக் காணலாம்.

ஆண்மைக்கும் வீரத்திற்கும் அடையாளமாக ஆடவர் முகத்தில் விளங்குவது மீசை. மீசையைக் குறிக்கும் விதத்தில் இதுவரை எத்தனையோ பேர் எத்தனையோ உவமைகளைக் கையாண்டுள்ளனர். ஆயின் சுரதா பாண்டிய மன்னர்களின் மீசையைச் சுட்டுவதற்கு ஒரு கவிதையில் கையாண்டுள்ள உவமை வித்தியாசமான ஒன்றாகும். அவ்வுவமை வருமாறு:

''படுத்திருக்கும் வினாக்குறிபோல் மீசை வைத்த
பாண்டியர்கள் வளர்த்த மொழி''

(தேன் மழை, ப.244)

'படுத்திருக்கும் வினாக்குறி போல்' -கற்பனை வளம் களிநடமிடும் கவின்மிகு உவமை இது!

'ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கு இன்பம், கூடி முயங்கப் பெறின்' (குறள் 1330) என்னும் காமத்துப் பால் குறட்பாவுக்கு அழகிய உவமை வடிவம் தந்தால் எப்படி இருக்கும்? இதோ, சுரதா தீட்டும் ஒரு சுவையான உவமைக் காட்சி; காதலரின் கூடல் நாடகம்:

''உச்சரிப்பு நின்றுவிடும் தொடுவார் ஈர
உடைபோல்நான் அவருடலில் ஒட்டிக் கொள்வேன்''

(தேன் மழை, ப.110)

'ஈர உடைபோல் அவருடலில் ஒட்டிக் கொள்வேன்' - காதல் சுவை நனி சொட்டச் சொட்டச் சுரதா கையாண்டுள்ள அற்புதமான உவமை இது!

நாயன்மார் நால்வருள் நீண்ட நெடிய வாழ்வு வாழ்ந்தவர் அப்பர். நரை திரை மூப்பு பிணி நான்கும் அவரது வாழ்வில் அணி வகுத்து நின்றன. கவிமணி வாழ்வாங்கு வாழ்ந்து எழுபத்தெட்டு வயதில் மரணம் அடைந்தபோது 'அந்தோ கவிமணி' என்ற தலைப்பில் பாடிய கையறுநிலைக் கவிதையில் சுரதா தக்க இடத்தில் அப்பர் பெருமானின் நிறைவாழ்வினை உவமையாகக் கையாண்டுள்ளார். உருக்கமும் உயிரோட்டமும் ததும்பி நிற்கும் அவ்வுவமை வருமாறு:

''அப்பரைப் போல் எண்பத்தோ ராண்டு வாழ்ந்தே
அங்கத்தில் சுருக்கங்கள் பெற்றி ட்டாலும்
எப்பொழுதும் சுருங்காத பெருமை பெற்றாய்''

(தேன் மழை, ப.232)

அப்பர் தெய்வத் தமிழில் முத்திரை பதித்தவர்; கவிமணி குழந்தைக் கவிதையில் தடம் பதித்தவர். 'குழந்தையும் தெய்வமும் ஒன்று' என்பது போல், சுரதாவின் உவமை இரு பெருமக்களையும் இணைத்துள்ள பான்மை எண்ணி எண்ணி மகிழத் தக்கதாகும்.

இலக்கணச் செய்திகளை உவமையாக்கல்

இலக்கணச் செய்திகளை உவமையாக்குவதில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் சுரதா. இவ்வகையில் மரபிலக்கணம் அவருக்குப் பெரிதும் கை கொடுத்துள்ளது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணச் செய்திகளையும் சுரதா தம் உவமைகளில் ஆங்காங்கே நயமாக எடுத்தாண்டுள்ளார்.

தொடை வகைகளுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை எதுகையும் மோனையும், முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை; இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகை. இவ்விரண்டையும் ஒரு கவிதையில் ஆதிமந்தி - ஆட்டனத்தி இருவரது வருகையையும் கட்டுவதற்கு அழகுறப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் சுரதா.

''வரலாற்றுப் பேரழகி ஆதி மந்தி,
எதுகைவரல் போலடுத்து வந்தாள்; அத்தி
என்பானோ, மோனையைப் போல் முன்வந்தான்''

(தேன் மழை, ப.41)

என்னும் பகுதி இவ் வகையில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும்.

பெருந்தமிழ்ப் புலவர் வேங்கடாசலம் பிள்ளைக்குப் பண்டிதமணி 'கரந்தைக் கவியரசு' என்னும் பட்டம் வழங்கி

வாழ்த்திப் பேசியது வரலாற்றில் இடம்பெற்ற ஓர் இன்றியமையா நிகழ்ச்சி. 'வழங்கத் தகுந்தவர் வழங்கினார்; அதனை ஏற்கத் தகுந்தவர் ஏற்றுக் கொண்டார்' என்பதோடு நில்லாமல், இலக்கண நயம் மிளிரும் ஓர் உவமையைக் கையாண்டு இந் நிகழ்வினைப் பதிவு செய்துள்ளார் சுரதா. அவ்வுவமை வருமாறு:

''தகுதி மிக்கோர் தருகின்ற பட்டம்
பகுதி போன்று நிலைத்து நிற்கும்.

தகுதி இலாதார் தருகின்ற பட்டம்
சிறப்பிலாப் பட்டமே; காற்றில்
பறக்கும் பட்டமே அடிக்குந்தம் பட்டமே!''

(தேன் மழை, ப. 162)

'பகுதி போன்று நிலைத்து நிற்கும்' என்னும் உவமையில் வெளிப்படும் கவிஞரின் இலக்கணப் புலமை சிறப்பானதாகும். தகுதி - பகுதி ; பட்டம் - தம்பட்டம் - கவிஞரின் சாதுரியமான சொல் விளையாட்டினை இங்கே சுவைத்து மகிழ்கிறோம்.

கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றி ஒன்றி உயர்ந்த பாலது ஆணை காரணமாகக் காதலனும் காதலியும் இயற்கைப் புணர்ச்சியில் கூடுவது போல், சுரதாவின் உவமைகளில் இலக்கணச் செய்திகள் போகிற போக்கில் இயல்பாகக் கூடி வருகின்றன. நெஞ்சை அள்ளும் ஓரிரு உதாரணங்களைக் காண்போமா?

''...மெல்லினத்தின்
முன்னிற்கும் வல்லி னம்போல்
முன்னின்ற தலைவர்! ''

(தேன் மழை, ப.220)

தமிழ்த் தென்றல் திரு.வி.க.வுக்கு உவமை வடிவில் சுரதா சூட்டியுள்ள புகழாரம் இது!

''ஆயிரம் புதுமைகள் அமைந்தநூ லாயினும்
அந்நூல் குறித்தொரு பாயிரம் அவசியம்.
அதுபோல் ஒழுக்கமும் மாந்தர்க் கவசியம்''

(தேன் மழை, ப.140)

என்னும் கவிஞரின் அழுத்தமான கருத்தில் அழகிய உவமை இடம்பெற்றிருத்தல் கண்கூடு.

தெரிந்த ஒன்றிற்குத் தெரியாத ஒன்றை உவமையாக்கல்

பெருமாள்முருகன் 'காலச் சுவடு' இதழில் சுரதா குறித்து எழுதிய இரங்கல் கட்டுரையில் குறிப்பிட்டிருப்பது போல், ''தெரியாத ஒன்றை உணர்த்த நன்கு தெரிந்த ஒன்றைச் சொல்லி விளக்கத் தோன்றியதுதான் உவமை. சுரதா நன்கு தெரிந்த ஒன்றிற்கு யாருக்குமே தெரியாத ஒன்றை உவமையாக்குவார்.... அரிய செய்திகளை உவமையாக்கி, உவமைக்குரிய இலக்கணத்தை மீறியவர் என்பதாலேயே அவருக்கு அப்பட்டம் மிகவும் பொருந்துகிறது'' ('கண்ணாடி மறைத்த ஓவியம்', காலச் சுவடு, ஆகஸ்ட் 2006, ப.72). புதுநெறி காட்டிய புலவர் பாரதி, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆகிய இருவரது வாழ்வையும் வாக்கையும் வாழ்நாள் சாதனையையும் குறிக்கும் வகையில் சுரதா கையாண்டுள்ள இரு அரிய உவமைகள் இவ் வகையில் நினைவுகூரத்தக்கவை:

''வெடித்தவுடன் விரைந்தோடு ஆம ணக்கின்
விதையென்றால் பாரதிக்குப் பொருந்தும்; கீழே
அடித்தவுடன் மேலெழும்பும் பந்தென் றிட்டால்
அது புரட்சிக் கவிஞருக்கே பொருந்தும்''

(தேன் மழை, ப.224)

இங்ஙனம் அரிய செய்திகளை உவமையாக்கிச் சுரதா படைத்துள்ள இடங்கள் 'தேன் மழை' தொகுப்பில் பல உண்டு. 'மலைபோன்று தலைநிமிர்ந்த உவமை தந்தார்' எனப் பாரதிதாசனைக் குறித்துச் சுரதா கூறுவது, ஒரு வகையில் சுரதாவுக்கும் பொருந்தி வருவதே ஆகும்.

'உவமை போன்றோர்'

'நிலா முகம்' என்ற தலைப்பில் பாடிய கவிதையின் முடிவில்,

''வினைபயன் மெய்யுரு என்ற நான்கின்
வகையை நுணுக்கமாய் ஆராய்ந்து வந்தால்
புதிது புதிதாய் உவமைகள்
உதிக்கும் இதனை உணர்ந்து கொள்வீரே!''

(தேன் மழை, ப.270)

என உவமை ஆர்வலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் அறிவுறுத்துகின்றார் சுரதா. இவர் இங்ஙனம் பாடியதோடு நின்று விடாமல், வினை, பயன், மெய், உரு என்ற நான்கின் அடிப்படையில் நுணுக்கமான, புதிது புதிதான உவமைகளைத் தம் கவிதைகளில் படைத்தும் காட்டியுள்ளார். நிறைவாக, கவிமணி குறித்துச் சுரதா பாடியுள்ள வைர வரிகளையே நாம் சுரதாவுக்கும் அவரது உவமைத் திறத்திற்கும் காணிக்கையாக்கலாம்:

''ஒப்புடையார் உவமேயம் போன்றோர் ஆவர்;
உத்தமனே நீயுவமை போன்றோன் ஆவாய்!''

(தேன் மழை, ப.232)

ஆம்; சுரதா உவமேயம் போன்றோர் அல்லர்; உவமை போன்றோர் ஆவார்.

-தமிழ் மாருதம், நவம்பர் 2006

2

குலோத்துங்கனின் கவிதை உலகம்

"பழமரபின் தொடர் அறுந்துவிடாது காத்து, இன்றைய தேவைகளை எதிர்கொண்டு பலவற்றிலும் புதிய கருத்துகள் படைத்து வருபவர் கவிஞர் குலோத்துங்கன். அறிவியலும் தமிழியலும் அவருடைய இரு கண்கள்."

– இ.சுந்தரமூர்த்தி*

''என்
பயணம் பெரிது; செலும்
பாதை நெடிது... என் படைக்கு
ஒரு சிலரும் போதும், நான்
ஒருவனே போதும்; மெய்ப்
பொருளொன்று தேடும்
புனிதப் பணியிதற்குக்
கூட்டமெதற்கு?''

என்பது கவிஞர் குலோத்துங்கனின் கொள்கை முழக்கம். 'குலோத்துங்கன்' என்னும் புனைபெயரில் கவிதை படைக்கும் முனைவர் வா.செ. குழந்தைசாமி அடிப்படையில் ஓர் அறிவியல் அறிஞர்; உலகளாவிய நிலையில் நீர் வளத் துறையில் (Hydrology) தடம் பதித்துள்ள ஓர் ஆய்வறிஞர். அவரது ஏழாவது கவிதைத்

* அணிந்துரை, குலோத்துங்கனின் 'உள்ளத்தில் ஏணியுளர் உயர்வர்', p.xxvi.

தொகுப்பு 'உள்ளத்தில் ஏணியுளர் உயர்வர்' என்னும் தலைப்பில் அண்மையில் (ஜுன்,2006) வெளிவந்துள்ளது. 39 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சென்னை பாரதி பதிப்பகம் இந் நூலினை வெளியிட்டுள்ளது. ஒரு கவிஞர் என்ற முறையில் குலோத்துங்கனின் ஆளுமையில் சுடர் விட்டு நிற்கும் கருத்தியல்கள் **(Concepts)** குறித்து இங்கே சுருங்கக் காண்போம்.

குலோத்துங்கனின் பார்வையில் 'நாளும் மானிடத்தை வழி நடத்தி வளர்க்கும் சக்தி' எது தெரியுமா? இதோ, அவரே கூறுகிறார், கேட்போம்:

''பகுத்தறிவே, விழிப்புணர்வே சமுதா யத்தின்
நந்தாத தீப்பந்தம்; வய்ய வாழ்வின்
நங்கூரம்.'' (ப.21)

வியர்வை சிந்தி வெற்றிப் பாதையில் முயன்று சென்று முடியும் சூட விரும்பும் இன்றைய இளைய தலைமுறையினருக்குக் கவிஞர் குலோத்துங்கன் விடுக்கும் செய்தி **(Message)** இதுதான்:

''சாதனைப் பாதையில் தளராது நட;
வெற்றியை மிஞ்சிய வேதமொன் றில்லை!'' (ப.7)

பட்டறிவின் படிப்பினை கொண்டு இவ் வெற்றியைக் கையகப்படுத்துமாறு இளைஞர்களுக்கு அறிவுறுத்துகின்றார் கவிஞர். மேலும் 'மானுடம் பாடுவேன் யான்' என்னும் கவிதையில்,

'' பெருமிதம் ஒளிரும் நெஞ்சும்
பீடுசேர் நடையும் கொண்ட
திருவினைப் பாடு வேன்யான்'' (ப.55)

எனத் தம் ஆளுமைப் பண்பை அடையாளம் காட்டியுள்ளார் கவிஞர்.

பாரத மணித்திரு நாட்டைச் சிக்கெனப் பிடித்துச் சீரழித்துக் கொண்டிருக்கும் சாபக் கேடுகளுள் தலையாயது எதற்கு எடுத்தாலும் விடுமுறை விடுவது! அழுவதற்கு விடுமுறை- பின் சிரித்துப் பேசி அக மகிழ விடுமுறை- நோன்பு நாளில் தொழுவதற்கும் விடுமுறை- தலைவர் தம்மைத் துதிப்பதற்கும் விடுமுறை- இப்படிக் காலமெல்லாம் நாட்டு மக்கள் விடுமுறையில் சோம்பிக் கழிப்பதில் கவிஞர் குலோத்துங்கனுக்குச் சிறிதும் உடன்பாடு இல்லை. 'நாள்தொறும் முன்செல்வதடா மனிதம்' என மனிதத்தை வரையறுக்கும் கவிஞர்,

''உழைப்பறியா வாழ்வுதனில் உயிர்ப்பொன் றில்லை
உள்ளத்தில் ஏணியுளர் உயர்வர்!'' (ப.42)

எனத் தம் கருத்தை அழுத்தம் திருத்தமாக எடுத்துரைக்கவும் தவறவில்லை. மேலும் அக் கவிதையில் 'உழைத்து வாழும் சீலமிலார் திருடர்' என்றும், 'எளிய மக்கள் சிந்துகிற வியர்வையினால் வாழ்வோர் கள்வர்' என்றும் கடுமையாகச் சாடுகின்றார் கவிஞர்.

''காலமெலாம் விடுமுறையா! பொழுதை வீணே
கழிப்பதுவும் பண்பாடா?'' (ப.41)

என அக் கவிதையின் தொடக்கத்தில் கவிஞர் தொடுத்திருக்கும் கேள்விக் கணை கூரியதும் சீரியதும் ஆகும்.

கவிஞர் குலோத்துங்கன் செல்வத்துள் செல்வமாக - தலையாய செல்வமாகப் போற்றுவது மதியையே ஆகும். 'நுணுகி உள்

நுழைந்து காணும், நுண்மதி எங்கள் செல்வம்' (ப.46) என்றும், 'மதிவளம் மனிதன் செல்வம்; மானிடம் தோற்பதில்லை' (ப.45) என்றும் கவிஞர் தீட்டியுள்ள வரிகள் இவ் வகையில் மனங்கொளத் தக்கவை. 'மண்ணில் மனிதனோர் விந்தை; நாளும் மதிவளம் கொண்டு மேலும் வளர்பவன்' (ப.51) என்பது கவிஞர் மனிதனுக்குச் சூட்டியுள்ள புகழாரம் ஆகும்.

''மதியெனும் சக்திக் கிங்கு
வரையறை இல்லை : எண் சாண்
உடலிடை உலவும் சிந்தை
உலகெலாம் வெல்லும் : ஆன்ற
திடமுடை உளத்தின் ஆற்றல்
திசையெலாம் ஆட்சி செய்யும்'' (பக்.46-47)

'மதியெனும் சக்தி கொண்டு, ஆன்ற திடம் கொண்ட உள்ளத்தின் ஆற்றலால் உலகையே வெல்லலாம்' என அழுத்தமாகவும் ஆழமாகவும் நம்புகின்றார் கவிஞர். 'மதிவளம் நமது செல்வம்' என்னும் தலைப்பில் அவர் ஓர் உரைநடை நூலையும் படைத்துள்ளார் என்பது இங்கே நினைவுகூரத் தக்க செய்தி ஆகும்.

'**தா**ண்டக வேந்தர்' எனத் தமிழ் கூறு நல்லுலகால் சிறப்பிக்கப் பெறும் திருநாவுக்கரசர் தம் தமக்கையர் திலகவதியார் மீது கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும் மலையினும் மாணப் பெரியவை. இதே போல் ஆங்கிலக் கவிஞர் வேர்ட்ஸ்வொர்த் தம் சகோதரி டோரதி மீது வைத்திருந்த பற்றும் பாசமும் அளவிடற்கு அரியவை. இவ் வரிசையில் கவிஞர் குலோத்துங்கனும் இடம் பெறுகின்றார். அவர் 'பீடுடைய நெஞ்சின'ளாம் தம் தங்கையைக்

குறித்துத் 'தியாக தீபம்' என்னும் தலைப்பில் ஓர் அற்புதமான சொல்லோவியத்தைத் தீட்டியுள்ளார். அக் கவிதையின் முடிவில் முத்தாய்ப்பாக,

''மாலைகளும் பாராட்டும்
வாய்ப்புகளும் வந்தடையும்
காலை உனையன்றி ஒரு
கடவுளையும் நான் நினையேன்'' (ப.16)

என்னும் வைர வரிகளால் மலையே அசைந்தாலும் மனம் கலங்காத தம் தங்கையின் ஆளுமைத் திறத்தைப் போற்றிப் பாடியுள்ளார் குலோத்துங்கன். 'இரும்பெடுத்துக் காயச்சி அதை எஃகாக்கி, மேலும் உரம் பெறும் படிக்கு மாற்றியதோர் பீடுடைய நெஞ்சின'ளாய் ஆண்மகனை மிஞ்சும் விதத்தில் வாழ்ந்து காட்டிய தம் தங்கையைப் பற்றிய மலரும் நினைவுகளை அக் கவிதையில் நெகிழ்வுடன் பதிவு செய்துள்ளார் கவிஞர்.

தக்காரை நெஞ்சாரப் போற்ற வேண்டும், மனம் திறந்து தகுதிச் சொற்களால் பாராட்ட வேண்டும் என்பதிலே உறுதியாக இருக்கிறார் குலோத்துங்கன்.

''தக்காரை நெஞ்சாரப்
போற்றும் நாடு
தகுதியினை வளர்க்கின்ற
கழனி : ஆற்றல்
மிக்காரால் உயர்வதடா
மனித சாதி'' (ப.5)

என்னும் அவரது கூற்று இவ்வகையில் குறிப்பிடத்தக்கது. கவிஞரின் கருத்தில், 'பாராட்டை மிஞ்சுமொரு பரிசில் இல்லை;

பதவி, பணம் எதுவும் அதற்கு இணையும் இல்லை. சான்றோர்கள் மனம் திறந்து பாராட்டும் தகுதிச் சொற்கள் சத்துணவு போன்றவை' ஆகும். அதே நேரத்தில் 'தலைவர்' என்ற பெயரில் ஏழைகளின் கண்ணீரில் உப்பெடுத்துக் காசாக்கி உலா வந்து கொண்டிருக்கும் தன்னலத்தை அடையாளம் கண்டு, அவர்கள் மக்கள் கூட்டத்தை முன்னடத்தும் வேதனைக்கு முடிவொன்று காண வேண்டும். முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கருதுகின்றார் கவிஞர்.

நம் பாரதத்தின் நாடித் துடிப்பறிந்து நாளும் உழைத்த பெருந்தலைவர் காமராசர். 'முற்றும் துறவா முழுத்துறவி' என்னும் தலைப்பில் காமராசரைக் குறித்து ஓர் அருமையான கவிதையைப் புனைந்துள்ளார் குலோத்துங்கன். பெற்ற நிலப் பற்றுடனும் மக்கள் குலப் பாசத்துடனும் காலமெல்லாம் பணியாற்றிய காமராசரை 'ஆளுமையின் வீறுடன் ஆண்ட முழுத் துறவி' எனச் சுட்டுகின்றார் கவிஞர். மேலும் அக்கவிதையின் முடிவில்,

''விருதுநகர் தந்த மகன்
விடுதலைப்போர் தியாகத்தன்
பெருமிதம் சேர் பீடுநடைப்
பெரியோன்: பெருந்தலைவன்'' (ப.3)

என்னும் தகை சான்ற சொற்களால் காமராசரை மனம் திறந்து பாராட்டி மகிழ்கின்றார் கவிஞர்.

வழிவழி வந்த பழைய மரபும், காலத்திற்கு ஏற்ற புதிய சிந்தனைகளும் கை குலுக்கி நிற்கும் கவிதைகள் குலோத்துங்கனின் கவிதைகள். பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி தம் அணிந்துரையில் குறிப்பிடுவது போல், ''வாழ்வியல் நெறிகளையும், மானுட

உறவுகளையும் , குறிக்கோள் உலகையும், சமத்துவ வாழ்வையும் படைத்துக் காட்டும் பழமரபும் புதிய சிந்தனை களும் இணைந்த கவிதைகளாக இவருடைய (குலோத்துங் கனுடைய) படைப்புகள் விளங்குகின்றன.'' (pp.xxxiv - xxxv)

- கவிதை உறவு, பிப்ரவரி 2007

3

கவிஞர் சிற்பியின் 'மகாத்மா'

"இமைக்கும் ஒளிச்சுடர் வைரமல்ல- அவன்
எல்லோரும் தேடும் எளிய உப்பு!
அமுதமோ தேனோ மதுவோ அல்ல-அவன்
அன்றாடம் தேவைப் படுகின்ற நீர்!"

- அப்துல் ரகுமான்★

சிற்பி பாலசுப்பிரமணியம் கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஆத்துப்பொள்ளாச்சியில் பிறந்தவர்; பாரதியார் பல்கலைக்கழகத்தின் முன்னைத் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றிச் சிறந்தவர்; தமிழ்ப் புதுக்கவிதை வளர்ச்சியில் தடம் பதித்த 'வானம்பாடி இயக்க'த்தைச் சார்ந்த மூத்த கவிஞர்; மொழி பெயர்ப்பு, கவிதைப் படைப்புகளுக்காக இருமுறை சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்ற சிறப்பினர்; 'கதைக் கவிதை' என்னும் வடிவத்திற்கு நிலையான பங்களிப்பினை நல்கி இருப்பவர். கவிஞர் சிற்பி அண்மையில் படைத்துள்ள நூல் 'மகாத்மா'. அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களுக்கு அன்புக் காணிக்கையாக்கப் பெற்றுள்ள இந்நூல் அக்டோபர் 2006 - இல் வெளிவந்துள்ளது.

★ நேயர் விருப்பம், ப.41.

''வளரிளம் பருவம் முதல் என்னை ஆட்கொண்ட தலைவர் மகாத்மா. 'வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா' என்று பாரதியும் வழிப்படுத்தினார். மன மொழி மெய்களில் சத்தியம் காத்த மகாத்மாவின் அரசியலை விட அவரிடம் குடிகொண்டிருந்த மனிதம் என்னைக் கவர்ந்தது. ஆகாயத்தைப் போல் விரிந்து கிடக்கும் அடிகளின் வாழ்க்கையிலிருந்து அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கொய்த விண்மீன்கள் இங்கே மின்னுகின்றன. அடிகளைப் போலவே எளியவை என் கவிதை அடிகள்'' ('கவிஞர் கூறுகிறார்', மகாத்மா, ப.7) என்னும் கவிஞரின் ஒப்புதல் வாக்குமூலம், அவரது படைப்பிலும் ஆளுமையிலும் காந்தியடிகள் செலுத்திய தாக்கத்தினைப் பறைசாற்றுவதாகும்.

கவிஞர் சிற்பியின் கருத்தியலில் காந்தியடிகள், 'புயல்களை வென்ற புன்னகை; போதிகள் இழைத்த மாதவம்; சத்தியம் எடுத்த அவதாரம்; அகிம்சை வடித்த இதிகாசம்; இந்தியர் தமக்கு மெய்ப் பொருளாய் என்றும் இருக்கும் ஆளுமை.'

''ஏவுகணைகள்
யுகத்தினிலும்
இன்னும் உயிர்க்கும்
தத்துவம் நீ'' (ப.7)

என்பது கவிஞர், மகாத்மாவுக்குச் சூட்டியுள்ள மணியான புகழாரம்.

வித்தியாசமான சிந்தனைக்குச் சொந்தக்காரர் சிற்பி, இதற்குக் கட்டியம் கூறும் வண்ணம் நூலின் தொடக்கம் அமைந்துள்ளது. 'மகாத்மா பிறந்த நேரம்' என்று கவிஞர் சுட்டுவது எதைத் தெரியுமா? 1893 ஜூன் மாதம் 7-ஆம் நாள் மாரிட்ஸ்பர்க் நகரில்

ரயிலில் இருந்து அடிகள் கீழே தள்ளப்பட்ட நாளையும் பொழுதையுமே 'மகாத்மா பிறந்த நேர'மாகக் குறிப்பிடுகிறார் கவிஞர். இனி வருவன அவரது சொற்களில்:

''நிறவெறிக்கு எதிராய்
அந்த இரவில்
நிமிர்ந்தது அவர் சிரம்

இங்கே
இந்த இரவில்
குலை நடுங்கும் குளிரில்
தயங்கித் தயங்கி
ஒரு மகாத்மா பிறந்தார்'' (பக்.11-12)

சரியாக ஒரு நூற்றாண்டு உதிர்ந்து விழுந்த பின் (1994-இல்) அதே மண்ணில் நிறவெறித் திமிரைத் தரைமட்டமாக்கித் தென்னாப்பிரிக்கத் தலைமகன் ஆனார் நெல்சன் மண்டேலா. இவ்விரு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நிகழ்வுகளையும் அழகுற இணைத்து, ''மகாத்மா பிறந்தார் / மாரிட்ஸ்பர்க்கில்/ மண்டேலா பிறந்தார் / மகாத்மா வழியில்...'' (ப.13) எனக் கவிதையை முத்தாய்ப்பாக முடித்துள்ளார் சிற்பி.

'கன்னித் தமிழ் தந்ததொரு திருவாசகம்- கல்லைக் கனியாக்கும் உந்தன் ஒரு வாசகம்' என்பார் கவியரசர் கண்ணதாசன். அதுபோல் கருங்கல்லையும் மென்கனியாக்கும் உருக்கமான மொழியில் இந் நூலில் தென்னாப்பிரிக்கத் தமிழ் மகள் தில்லையாடி வள்ளியம்மை, சிறுவயலில் காந்தி ஆசிரமத்தை நடத்திய அருமைத் தொண்டர் ஜீவானந்தம்,

கவியரசர் 'குருதேவ்' தாகூர், மகாகவி பாரதியார், கேரளச் சிறுமி கௌமுதி ஆகியோருக்கும் காந்தியடிகளுக்கும் இடையே நிகழ்ந்த சந்திப்புக்களையும், சந்திப்புகளின் போது நிகழ்ந்த சுவையான உரையாடல்களையும் பதிவு செய்துள்ளார் கவிஞர் சிற்பி. பதச் சோறாக, 'இந்தியாவின் சொத்து' என்னும் கவிதையில் இருந்து நெஞ்சை அள்ளும் சிறு பகுதி இதோ:

'' 'ஜீவானந்தம்/ உங்களுக்கு/ சொத்து எவ்வளவு/ இருக்கும்?'
-அண்ணல் கேட்டார்.
'பளிச்'சென வந்தது/ ஜீவாவின் பதில்/ 'இந்தியா தான்/
என் சொத்து...'
அருமைத் தொண்டனைக்/ கட்டிப் பிடித்து/ அண்ணலின்
திருவாய் / அமுதம் பொழிந்தது:
'இல்லை ஜீவானந்தம் / நீங்கள் தான் / இந்தியாவின் சொத்து!'
(ப.18)

அடிக்குறிப்பில் 'இந் நிகழ்வு நடந்த நாள் 27.3.1927' என்பதையும் சுட்டத் தவறவில்லை கவிஞர்.

காந்தியடிகளின் நகைச்சுவை உணர்வு நாம் நன்கு அறிந்த ஒன்று. ''நகைச்சுவை மட்டும் இல்லையென்றால், நான் எப்போதோ தற்கொலை செய்து கொண்டிருப்பேன்'' என்னும் அண்ணலின் புகழ் பெற்ற கூற்றும் உண்டு. கவிஞர் சிற்பி தம் நூலில் காந்தியடிகளின் நயத்தகு நகைச்சுவை உணர்வு சிறந்து விளங்கும் இடங்கள் பலவற்றைச் சுவையான கவிதைகளாக்கி உள்ளார். 'நடனத் துணை', 'கவியரசர் கண்ட மகாத்மா', 'எல்லாம் இசை மயம்', 'பயன் தெரிவார்', 'எது உயரம்?', 'அரை நிர்வாணம்' ஆகிய கவிதைகள் இவ் வகையில் சிறப்பாகக்

குறிப்பிடத்தக்கவை. அண்ணலின் நகைச்சுவை உணர்வைப் புலப்படுத்தும் ஓர் உதாரணத்தைக் கவிஞரின் மொழியிலேயே இங்கே காண்போம்:

''மைசூர் நகரில் / அண்ணலின் முகாம்.
'கெரசப்பா அருவியைப் / பார்க்கப் போகிறோம்/
மகாதேவ் தேசாயையும்/ அழைத்துப் போகிறோம்'
அனுமதி கேட்டார் / காகா கலேல்கார்.
' அங்கே என்ன சிறப்பு?' - அண்ணலின் வினா.
'உலகிலேயே / உயரமான அருவி பாபுஜி'
'நயாகராவை விடவா?'
'ஆமாம் பாபுஜி / 960 அடி உயரம்.'
சிரித்தார் அண்ணல்/ செப்பினார்:
'மழைத்துளி / அதைவிட உயரத்திலிருந்து/ விழுகிறதே...'
(ப. 49)

இதுபோன்ற அண்ணலின் இயல்பான, உடனடியான நகைச்சுவை உணர்வு பளிச்சிடும் நிகழ்வுகள் இந்நூலில் ஆங்காங்கே அழகுறப் பதிவு செய்யப் பெற்றுள்ளன.

கவிஞர் சிற்பி பழுத்த தமிழ்ப் புலமை பெற்றவர்; முன்னை மரபில் ஆழங்கால் பட்டவர். இப் பயிற்சி இந்நூலாக்கத்தில் அவருக்குப் பெரிதும் கைகொடுத்துள்ளது. 'பென்சில்' - இவ் வகையில் மனங்கொளத் தக்க அழகிய கவிதை. மும்பையில் நிகழ விருக்கும் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்ளச் செல்ல வேண்டும். நேரமானாலும் இன்னும் அண்ணல் புறப்படவில்லை. தலைவர்கள் காத்திருக்கிறார்கள். மக்கள் வெள்ளம் போல் அண்ணலை வணங்கி தரிசிக்க ஆவலோடு கூடியிருக்கிறார்கள்.

அண்ணலோ அத்தனையும் மறந்து அறைக்குள் எதையோ தேடிக் கொண்டிருக்கிறார். தேடல்... தேடல்.... தேடல்... 'நேரமாகிறது அப்புறம் தேடலாம்' என்று காகா கலேல்கர் கூறியும் அண்ணலின் மனம் அமைதியடையவில்லை. கடைசியில் ஒரு வழியாக அண்ணல் தேடிய அரும்பொருள் கிடைக்கிறது. அது என்ன பொருள் தெரியுமா? ஒன்றரை அங்குலத்தில் மழுங்கிப் போன குட்டைப் பென்சில்- சென்னை ஜி.ஏ. நடேசன் மகன் சின்னப் பிள்ளை தந்த பரிசு! 'அதை எப்படி நான் தவறவிடுவது? பொறுப்பில்லாமல் தொலைப்பது சரியா?' என்பது அண்ணலின் வாதம். இக் கவிதையின் எடுப்பாகவும் முடிப்பாகவும் கவிஞர் தீட்டியுள்ள மந்திர வரிகள் இவை:

''சிறியதெல்லாம் சிறியதும் இல்லை
பெரியதெல்லாம் பெரியதும் இல்லை
மகாத்மாக்களுக்கு'' *(பக்.21,23)*

'பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' (புறநானூறு,192) என்னும் சங்கச் சான்றோரின் செம்மாந்த மொழிகளே இங்கே மறுகோலம் பெற்றுள்ளன.

'உருகி வழிந்து புறப்பட்ட சொல்' என்று பக்தர்களின் தோத்திரங்களைப் பெரியவாச்சான் பிள்ளை குறிப்பிடுவாரே, அது போன்ற கவித்துவம் களிநடமிடும் சொல்லாட்சிகளும் தொடராட்சிகளும் இந்நூல் முழுவதும் மண்டிக் கிடக்கின்றன. உள்ளங்கவர் உதாரணங்கள் ஒருசில காண்போமா?

''அன்று சாந்திநிகேதனம்/ காந்தி நிகேதனம் ஆனது/
அண்ணல் வருகையால்'' (ப.28)

'' இளங்காலைப் பொழுது/ எரவாடா சிறைச்சாலை

அண்ணல் இருக்குமிடம் தானே/எல்லார்க்கும்

ஆசிரமம்'' (ப.39)

'' ஆகாகான் அரண்மனைச் சிறை/அகத்ததோ புறத்ததோ

என

அன்னை 'பா' உயிர்/ அலைவுறும் நேரம்'' (ப.54)

'' அடுத்த கணம்/ பாதகக் கொடும் பாதகம் நிகழ்ந்தது

வெண்ணெயில் பாயும் வேல் போல்/அண்ணலின்

மார்பில்/

பாய்ந்தன குண்டுகள்'' (ப. 73)

கவிச்சக்கரவர்த்தி கம்பனும் மகாகவி பாரதியும் உள்ளிருந்து இயக்கியது போல் இவ் வரிகள் கவிஞர் சிற்பியின் எழுதுகோலில் இருந்து புறப்பட்டு வெளிவந்துள்ளன.

''முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்

புவிக்குளே முதன்மை யுற்றாய்!''

என மகாகவி பாரதியார், மகாத்மாவுக்குச் சூட்டிய புகழாரத்தையே நாமும் சற்றே மாற்றி கவிஞர் சிற்பிக்கு இப்படிக் கூறலாம்: '' 'மகாத்மா' நூலைப் படைத்ததன் மூலம் கவிஞர் சிற்பி முடிவிலாக் கீர்த்தி பெற்றார்; கவியுலகிலே முதன்மை யுற்றார்!''

-புதுகைத் தென்றல், டிசம்பர் 2006

4

கந்தகக் கவிஞர் கந்தர்வன்

"கந்தர்வன் எந்த வர்க்கத்தின் இசையை இசைக்கிறார்
என்று ஒவ்வொரு வரிகளும் ஒளிவு மறைவின்றித்
தெரிவித்து விடுகின்றன அதன் சுருதியிலேயே."

\- சந்தியா நடராஜன்*

''புரட்சி என்பது
பிள்ளை பிடிப்பது போல்
கொடுமையல்ல
பிள்ளை பெறுவது போல்
புனிதமானது''

(கந்தர்வன் கவிதைகள், ப.19)

எனப் புரட்சிக்குப் பூபாளம் பாடிய முற்போக்கு எழுத்தாளர் கந்தர்வன். அவர் வீரியமும் வீச்சும் மிக்க படைப்பாளி; நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்ட போராளி; ஒரே சமயத்தில் கவிதை, கதை என்னும் இரு இலக்கிய வடிவங்களிலும் திறம் பட உலா வந்த எழுத்தாளர். தமிழ்ப் புதுக்கவிதை உலகில் 'ஊசிகள்' தந்த மீராவுக்குப் பிறகு அங்கதத்தை ஆற்றலோடு கையாண்ட

* பதிப்புரை, கந்தர்வன் கவிதைகள், ப.5.

கவிஞர்களிலே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் கந்தர்வன். சென்னை சந்தியா பதிப்பகத்தார் 'கிழிசல்கள்', 'சிறைகள்', 'மீசைகள்' என்னும் தலைப்புக்களில் கந்தர்வன் வெளியிட்ட மூன்று தொகுதிகளையும் 'கந்தர்வன் கவிதைகள்' என்னும் பெயரில் முழு வடிவில் ஒரே தொகுதியாக வெளியிட்டுள்ளனர். 2002 - ஆம் ஆண்டில் வெளிவந்த இத் தொகுப்பு தோழர் ஏ. நல்லசிவன் அவர்களுக்குக் காணிக்கையாக்கப் பெற்றுள்ளது.

அரசியல் அவலங்களையும் சமூகக் கொடுமைகளையும் அங்கதச் சுவையுடன் சாடுவதில் கவிஞர் மீராவைப் போல் தனித் தன்மையுடன் விளங்குகிறார் கந்தர்வன். தொல்காப்பியர் சுட்டிய செம்பொருள் அங்கதம், பழிகரப்பு அங்கதம் என்னும் இரண்டனுள் 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்றாற் போல் நேரடியாகச் சாடும் செம்பொருள் அங்கதமே கந்தர்வன் கவிதை களிலே தூக்கலாகக் காணப்படுகின்றது. சான்றாக,

''விதம் விதமாய்
மீசை வைத்தோம்
வீரத்தை எங்கேயோ
தொலைத்து விட்டோம்''

என்பது நடிப்புச் சுதேசிகளுக்கு - வாய்ச் சொல் வீரர்களுக்கு - கந்தர்வன் தந்திருக்கும் சாட்டையடி! இதே போல்,

''எல்லாம் கிழிந்த
எங்கள் தேசத்தில்
வாய் கிழிவது மட்டும்
வகை வகையாயிருக்கும்'' (ப.9)

என்னும் வரிகளில் வெளிப்படும் அங்கதச் சுவையும் காட்டமானது!

பன்னிரு ஆழ்வார்களுள் ஒரே பெண்மணியான ஆண்டாளை இதுவரை நமக்குச் 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி'யாகவே தெரியும். ஆனால் கந்தர்வனோ ஒரு வித்தியாசமான கோணத்தில் ஆண்டாளை நமக்கு அறிமுகப்படுத்துகின்றார். 'ஆண்டாளும் ஆண்டாரும்' என்னும் தலைப்பில் அவர் படைத்துள்ள கவிதை இதோ:

''ஆண்டாள் போட்டு
ஆரம்பித்து வைத்த
ஆளுயர மாலைகளை இன்று வரை
ஆண்டார் ஆள்வோர்
கழுத்துக்களை விட்டுக்
கழற்றவே முடியவில்லை'' (ப.63)

'ஆளுயர மாலை போடுவது' என்னும் 'கலாசார'த்தை - வழக்கத்தை - தொடங்கி வைத்தவரே ஆண்டாள் தானாம்! அது மட்டுமல்ல, இன்று வரை அப்படி ஆண்டார் ஆள்வோர் கழுத்துக்களில் போட்ட மாலைகளைக் கழற்றவே முடியவில்லையாம்! சம காலப் போக்கை விமர்சனம் செய்யத் தொன்மத்தை இங்கே அழகுறப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் கந்தவர்வன்.

தேசப் பிதா காந்தியடிகள் மூன்று குரங்கு பொம்மைகள் வைத்திருந்தார்; ஒன்று, கண்களை மூடிக் கொண்டிருக்கும், இன்னொன்று, காதுகளைப் பொத்திக் கொண்டிருக்கும், மற்றொன்று, வாயை மூடிக் கொண்டிருக்கும். கண் முன்னே

நடக்கும் தீமைகளின் நடுவில் கண் பொத்திக் கொண்டு இருக்கலாமா? காது பொத்தி அமைதியாக அமர்ந்திருக்கலாமா? தீயவை நடக்கையில் திருவிளையாடல் பெருகுகையில் கண்டிக்க எழ வேண்டாமா? குரல் எழுப்ப வேண்டாமா? காந்தியடிகளுக்கு மாறாக, கந்தவர்வன் நான்கு பொம்மைகளை இந்திய மக்களுக்கு இதோபதேசம் செய்யும் விதத்தில் படைத்துக் காட்டுகின்றார். இதோ அப் பொம்மைகளைக் குறித்து அவரே கூறுகிறார், கேட்போம்:

''நாம்
நான்கு பொம்மைகள்
தருவோம்

ஒன்று தீயதைப் பார்க்கும்
கண்கள் தீயாய்ச் சிவக்கும்

ஒன்று தீயதைக் கேட்கும்
காது சீறிப் புடைக்கும்

தீயதைக் கண்டித்து ஒன்று
தீவிரமாய்ப் பேசும்

நான்காவது பொம்மை
தீயதைப் பிடிக்கும்-
பொசுக்கும்'' (பக்.251-252)

-'கந்தகக் கவிஞர் கந்தர்வன்' என்பதற்குக் கட்டியம் கூறும் கவிதை இது.

பைந்தமிழ்த் தேர்ப் பாகன் பாரதியின் வழியில் பெண் களுக்காகக் குரல் கொடுக்கவும் தவறவில்லை கந்தர்வன்.

'கொள்ளைகள்', 'விலங்குகள்' என்னும் இரு கவிதைகள் இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. வெளிப் பார்வைக்கு ஒரு பெண் தன் உடல் உறுப்புக்களில் அணிந்திருப்பவை அணிகள் போலத் தோன்றும்; ஆனால், உண்மையில் அவை அவள் மீது போடப்பட்டிருக்கும் விலங்குகள் தான். 'விலங்குகள்' என்னும் தலைப்பில் கந்தர்வன் படைத்துள்ள உணர்ச்சி மிகு கவிதை இதோ:

''தலையில் பூ விலங்கு
கையில் பொன் விலங்கு
காலில் வெள்ளி விலங்கு
சுவாசத் தடைக்கு
மூக்கில் கல் விலங்கு
ஒவ்வொரு மூச்சிலும்
அவள்
விலங்குளை நுகர்கிறாள்'' (ப.200)

இன்று பெண்ணின் மீது போடப்பட்டிருக்கும் விலங்குகள் தான் எத்தனை எத்தனை!

'கொள்ளைகள்' என்ற கவிதையில் வரதட்சணைக் கொடுமையைத் தமக்கே உரிய தனிப்பாங்கில் சாடியுள்ளார் கந்தர்வன். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதெல்லாம் பழைய கதையாம்! திருமணங்கள் வரதட்சணையாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன - இது புதிய கதையாம்! (ப.17). நிச்சயிக்கப்படுகின்றன, நிர்ணயிக்கப்படுகின்றன - எவ்வளவு நுட்பமாகக் கவிஞர் இங்கே சொற்களைக் கையாண்டிருக்கிறார் பாருங்கள்!

எதையும் நச்சென்றும் நறுக்கென்றும் பளிச்சென்றும் சுரீரென்றும் கூறுவதில் கந்தர்வன் கை தேர்ந்தவராக விளங்குகின்றார். அவரால் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கவும் முடிகின்றது; சுருக்கென்று சொல்லி நெஞ்சைக் கொள்ளை கொள்ளவும் அவருக்குத் தெரிகின்றது.

''ஆண் பிறந்தால்
அட்சய பாத்திரம்
பெண் பிறந்தால்
பிச்சைப் பாத்திரம்'' *(ப.16)*

-'வளையல் விலங்குகள்' என்னும் கவிதையில் இடம் பெற்றிருக்கும் நறுக்கு மொழி இது!

''சுதந்திரத்திற்கு முன்னால்
சுதந்திரம் என் பிறப்புரிமை
சுதந்திரத்திற்குப் பின்னால்
சுரண்டல் என் பிறப்புரிமை'' (ப.21)

-'முன்னும் பின்னும்' என்னும் தலைப்பில் கந்தர்வன் படைத்திருக்கும் கடுகுக் கவிதை இது!

''கோபம் என்பது
யாருக்கு வந்தது
மீசை என்பது
பேருக்கு இருந்தது'' *(ப.88)*

-ஆண்மையின் அடையாளமான மீசையைப் பற்றிய கந்தர்வனின் சுரீரென்ற சாடல் இது!

இலக்கிய ஆர்வலர்களால் 'தாயணி' எனச் சிறப்பித்துப் பேசப்படும் உவமையைக் கந்தர்வன் கையாண்டிருக்கும் பாணி

தனித்தன்மை வாய்ந்தது. அவரது உவமைகள் அழகியல், பொருள் புலப்பாடு என்னும் மரபு வடிவிலான எல்லைகளைத் தாண்டி, அவரது ஆளுமைப் பண்பை அடையாளம் காட்ட வல்லவையாக விளங்குகின்றன; அவர் உயிரெனப் போற்றும் கொள்கையைப் பறைசாற்றுவனவாகவும் திகழ்கின்றன. ஓர் எடுத்துக்காட்டு இதோ:

''எங்கள் ஊரில் நெல்லுச்சோறு
இந்தியாவில்
தாஜ்மகாலைப் போல'' (ப.12)

அதிசயம் - ஆனால் உண்மை! உண்மை சுடும் என்பது மெய் தானே?

'' ஜனநாயகம் நடக்கவில்லை
சமஸ்தானம் நடக்கிறது
சர்க்கஸ் நடப்பது போல்
சர்க்கார் நடக்கிறது'' (ப.115)

-சிதறு தேங்காயைப் போல் நாட்டு நடப்பைத் தோலுரித்துக் காட்டக் கந்தர்வன் கையாண்டிருக்கும் நயமான உவமை இது!

''ஊர் மேல்
வகிடெடுத்த ஆறு'' (ப.210)

-கவித்துவம் களிநடம் புரியும் கந்தர்வனின் கை வண்ணம் இது!

மெல்லிய நகைச்சுவை உணர்வும் கந்தர்வனுக்கு உண்டு. அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலும், முறுவலித்தலும் என்னும் மூவகை நகைச்சுவைகளில் படிப்பவரைப் புன்முறுவல்

கொள்ளச் செய்யும் மூன்றாவது வகை நகைச்சுவை கந்தர்வனின் கவிதைகளில் ஆங்காங்கே கோலோச்சி நிற்கின்றது. ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:

''இந்தத் தேசத்திலேயே
மிகவும் உயர்ந்தவன்
கிராம வாசியா
நகர வாசியா

இல்லை
விலைவாசி'' (ப.39)

'விடுகதை' என்பது இக் கவிதையின் தலைப்பு. விடுகதைப் பாங்கில் விலைவாசி உயர்வை இங்கே மென்மையான நகைச்சுவை உணர்வோடு புலப்படுத்தியுள்ளார் கந்தர்வன்.

'ரேஷன்' என்னும் தலைப்பில் கந்தர்வன் படைத்திருக்கும் பிறிதொரு சிறு கவிதை வருமாறு:

''ரேஷன் கடையில்
அரிசி வாங்கிக்
கல்லையும் நெல்லையும்
பொறுக்க நினைத்து
அரிசியைப்
பொறுக்கி முடித்தோம்'' (ப.39)

-இன்றைய 'நியாய(?) விலைக் கடை'களின் மீது கந்தர்வன் தொடுத்திருக்கும் நகைச்சுவையும் நையாண்டியும் கலந்த மென்மையான தாக்குதல் இது!

'இன்று பாரதி இங்கு இருந்தால்....' என்பது கந்தர்வனின் முத்திரைக் கவிதை. 'பொட்டு வைத்திருந்த புரட்சிக் கவிஞன்'. 'அக்ரகாரத்தில் முளைத்த முதல் மீசை', 'இரண்டு கங்குகளாய்க் கண்கள்' என்றெல்லாம் பாரதியை உணர்ச்சியும் உயிரோட்டமும் ததும்பும் சொற்களால் பாரதியைப் படம்பிடித்துக் காட்டுகின்றார் கவிஞர். இந்திய மக்களுக்குச் சுதந்திரம் கிடைத்தும் சுகம் கிடைக்காத அவலம் கவிராஜனின் நெஞ்சைப் பிழிகின்றது; சுதந்திர இந்தியாவின் நிலையும் நிகழ்வும் கண்டு நெஞ்சு பொறுக்காமல் கொதிப்படைகின்றார் தேசிய கவி. ஒன்பது பக்க அளவில் அமைந்த நீண்ட அக்கவிதை இப்படி நிறைவடைகின்றது:

''அக்கினியானான் பாரதி
குனிந்து ஒரு
காலணியைக் கையிலெடுத்தான்

குவலயமே
நடுங்கக் கேட்டான்
பாட்டாலடித்தேன்
பாதகங்கள் குறையவில்லை

இப்போது
ஜோட்டால் அடிக்கவா
சொல்லுங்கள் ஜெகத்தீரே!'' (ப.117)

இத்தகைய ஆங்காரமும் மூர்க்கமும் ஆவேசமும் கோபமும் கொப்பளிக்கும் கவிதைகளைப் படைத்துப் புதுக்கவிதை உலகில் பாரதியின் வழித்தோன்றலாய் - கந்தகக் கவிஞராய் - விளங்குகிறார் கந்தர்வன்.

-புதுகைத் தென்றல், ஜனவரி 2007

5

மு. மேத்தாவின் கவிப்பார்வை

"மேத்தாவின் கவிப்பார்வை - வீட்டைத் தாண்டி, நாட்டைத் தாண்டி, சர்வ தேச சஞ்சாரம் செய்கிறது."

- பாலா★

'தீபம்' இதழில் வெளிவந்த 'தேசப் பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி' என்னும் கவிதையின் வாயிலாகப் புதுக்கவிதை உலகில் காலடி எடுத்து வைத்தவர் மு. மேத்தா. அவருக்கு அடையாளத்தைத் தேடித் தந்த கவிதைத் தொகுப்பு 'கண்ணீர்ப் பூக்கள்'. அதன் முதற்பதிப்பு 1974 - ஆம் ஆண்டில் வெளிவந்தது; அதன் இருபத்தைந்தாவது பதிப்பு 'குமரன் பதிப்பக'த்தின் சார்பில் 2004-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. தன்னிரக்கம் ததும்பி நிற்கும் வண்ணம் காதல் கவிதைகளைப் பாடுவது மேத்தாவின் தனித்தன்மை. 'அரளிப் பூ அழுகிறது' என்னும் கவிதையின் வாயிலாக முதிர்கன்னியரின் அவலத்தை முதன்முதலில் உருக்கமான மொழியில் வெளிப்படுத்தியவரும் மேத்தாவே ஆவார். அவரது 'முதல் தேதி' என்னும் கவிதை நடுத்தர வர்க்கத்தினரின் வாழ்க்கையைப் பற்றிய அருமையான படப்பிடிப்பு; அற்புதமான அலசல். 'அண்ணலும் நோக்கினான்,

★ முற்றுப்பெறாத ஒரு முடிவுரை, மு.மேத்தாவின் 'கண்ணீர்ப் பூக்கள்', ப.19.

அவளும் நோக்கினாள், இரண்டு பேரையும் அடித்து நொறுக்குவதற்கு அப்பன்காரனும் நோக்கினான்' என இன்றைய பட்டி மன்றங்களில் பெயர் சுட்டாமல் சொல்லப்படும் நகைச்சுவை வரிகளுக்குச் சொந்தக்காரர் மேத்தா தான்! 'இலக்கணச் செங்கோல், யாப்புச் சிம்மாசனம், எதுகைப் பல்லக்கு, மோனைத் தேர்கள், தனிமொழிச் சேனை, பண்டித பவனி இவை எதுவும் இல்லாத கருத்துக்கள் தம்மைத் தாமே ஆளக் கற்றுக் கொண்ட புதிய மக்களாட்சி முறை' (ஊர்வலம், ப.86) எனப் புதுக் கவிதைக்கு இலக்கணம் வகுத்துத் தந்த பெருமையும் மேத்தாவுக்கு உண்டு. 'கண்ணீர்ப் பூக்கள்' தொடங்கி மேத்தா இதுவரை 18 கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்; 'ஆகாயத்துக்கு அடுத்த வீடு' என்பது 2004 -ஆம் ஆண்டில் வெளிவந்த அவரது கவிதைத் தொகுதி ஆகும். இத் தொகுதி கவிஞர் மு. மேத்தாவுக்கு 2006-ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றுத் தந்த சிறப்பினதாகும். இனி, இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைகள் வெளிப்படுத்தும் மேத்தாவின் படைப்பாற்றலும் ஆளுமைத் திறனும் குறித்துக் காண்போம்.

கலில் ஜிப்ரானில் இருந்து மாக்ஸிம் கார்க்கி வரை தாய்மைக்குப் புகழாரம் சூட்டியுள்ள படைப்பாளிகள் உலக ளாவிய நிலையில் பலர் ஆவர். திரைப்பாடல் உலகிலும் காலம் காலமாகத் தாய்ப்பாசத்தின் அருமையும பெருமையும் பேசப்பட்டு வந்துள்ளன. ஒட்டுப் பற்றற்று உலக வாழ்வை விட்டுத் துறந்த பட்டினத்தாரையும் ஆதிசங்கரரையும் கூடத் தாய்ப்பாசம் விட்டு வைக்கவில்லை. மு. மேத்தாவும் தம் பங்கிற்கு இத் தொகுப்பில் 'தாய்' என்னும் தலைப்பில் ஓர் அற்புதமான கவிதையைப் பாடியுள்ளார். புகைவண்டியில் பயணம் செய்யும்

ஒரு மனிதன் தன் பெட்டியை மேலே வைக்கிறான்; சிறிய பெட்டியைப் புகை வண்டியின் இருக்கைக்குக் கீழே இழுத்துத் தள்ளுகிறான்; தோள் பையைக் கம்பியில் தொங்க விடுகிறான்; கனமாய் இருக்கிறது என்று கைப்பையைக் கழற்றுகிறான்; கையில் பிடித்திருந்த பத்திரிகையையைக் கூடப் பக்கத்தில் வைக்கிறான்; கடைசியில் ஒரு வழியாக நெட்டி முறித்து நிமிர்கிறான். அப்போது எதிரே கண்ட காட்சி அவனுடைய உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது. அக் காட்சியின் மாட்சியைக் குறித்துக் கவிஞரின் மொழியிலேயே காண்பது நலமாக இருக்கும். தாயன்பின் தனிப்பெரும் பண்பினைப் புலப்படுத்தும் கவிஞரின் அழகிய வரிகள் இதோ:

''எதிரே
இடது தோளிலும்
வலது தோளிலும்
இடுப்பிலும்
மாற்றி மாற்றி
வைத்த தன்றி
தன் குழந்தையைக்
கீழே
இறக்கி வைக்காத
தாயைப் பார்த்துத்
தலை குனிந்தான்!'' (ப.74)

'பெற்றெடுத்த குழந்தை தாய்க்குப் பாரமா?' என்பதைக் கவிஞர் இக் கவிதையில் புலப்படுத்தி இருக்கும் பாங்கு தனித்தன்மை வாய்ந்தது.

நாட்டு நடப்பையும் சமூக அவலத்தையும் கூர்மையான மொழியில் விமர்சனம் செய்யும் கவிதைகள் இத் தொகுப்பில் நிறையவே காணப்படுகின்றன. பதச் சோறாக, ‘சுவரொட்டித் தலைவர்கள்’ என்ற கவிதையை இங்கே காணலாம். இன்று நாட்டில் அரசியல், ஆன்மிகம், சாதிச் சங்கம் முதலான துறைதோறும் ஏராளமான தலைவர்கள் தினமும் எழுத்தாய்ப் படமாய்ச் சுவரில் முளைக்கிறார்கள்; ஆளே இல்லாத் தலைவர் ஆயினும் அலைகடலாய்த் திரண்டு வருமாறு மக்களை அழைக்கிறார்கள். இவர்களுக்கு அங்கதச் சுவையோடு கவிஞர் சூட்டி இருக்கும் சிறப்புப் பெயரே ‘சுவரொட்டித் தலைவர்கள்’ என்பது.

“சுவரொட்டித் தலைவர்களை
நாங்கள்
சகிப்பதன் காரணம்
ஒட்டுவோர் எழுதுவோர்
ஒரு சிலர் பிழைக்கிறார்...” (ப.88)

என்னும் கவிதையின் முடிப்பு வரிகள் முத்தாய்ப்பானவை.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்னும் மூன்றோடு நான்காவதாகச் சேர்க்கத் தக்கது ‘சினிமா ஆசை’. ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்; தமிழனுக்குச் சினிமா மோகமோ வாழ்நாள் எல்லாம்! இன்னும் சொல்ல வேண்டும் என்றால், தமிழ்நாட்டில் இரண்டே இரண்டு சாதிகள் தான்! ஒன்று, வீட்டில் இருந்து சினிமா பார்க்கத் திரையரங்கிற்குச் செல்லும் சாதி; மற்றொன்று, திரையரங்கில் இருந்து சினிமா பார்த்துவிட்டு வீட்டிற்குத்

திரும்பும் சாதி. தமிழனின் சினிமா மோகத்தைச் சாடும் விதத்தில் மேத்தா படைத்துள்ள கவிதை 'சிறுகுறிப்பு வரைக: நெய்வேலி - டிசம்பர் 2003' என்பது.

அக் கவிதை வருமாறு:

''தண்ணீர் வேண்டி
பிரமாண்டமான
பேரணி...

நடிகர்களைக் காணக்
காத்துக் கிடந்த
கூட்டம்
கவலைப் பட்டது...

மழை வந்து
கெடுத்து விடுமோ
என்று'' *(ப.32)*

தண்ணீர் வேண்டி நடத்தப்படும் பிரமாண்டமான பேரணியில் கலந்து கொண்டிருக்கும் கூட்டத்தினர் கவலைப்படுவது எது குறித்து என்பதைக் கவிஞர் இங்கே நயமாகச் சாடியுள்ளார்.

'மதிப்பீடு' என்னும் தலைப்பில் கவிஞர் படைத்திருக்கும் சிறு கவிதை காரமும் சாரமும் மிக்கது. அக் கவிதையில் கவிஞர் சுட்டிக் காட்டி இருக்கும் அனுபவம் தனியொரு படைப்பாளிக்கு மட்டும் உரியதன்று; பெரும்பாலும் விருதுகளை வழங்குவதில் தமிழ்நாட்டில் அடிக்கடி அரங்கேறி வரும் சாபக்கேடு தான் அது!

''எழுதிக் கொண்டிருந்தான்
விமர்சனங்கள் வந்தன...

எழுதாமல் இருந்தான்
விருதுகள் வந்தன!

●

கால் நடைக்குத்
தெரியுமா
கவிதை நடை?'' (ப.91)

முத்தாய்ப்பாகக் கவிதையின் முடிவில் வெளிப்பட்டிருக்கும் கவிஞரின் சத்திய ஆவேசம் நியாயமானது; கடுமையான அங்கதக் குறிப்பைத் தன்னகத்தே கொண்டது.

கும்பகோணம் என்றதும் நம்மில் பலருக்கு 'மகாமகம்' நினைவுக்கு வரும்; கவிஞர் மேத்தாவுக்கோ கொழுந்து விட்ட நெருப்பில் சிக்குண்டு பள்ளிக் குழந்தைகள் இறந்து போன கொடுமை நினைவுக்கு வந்து வாட்டுகின்றது. 'கும்பகோணத்தில் மகாவதம்' என்ற தலைப்பில் அக்கொடுமையைக் குறித்து கவிஞர் எழுதியுள்ள கவிதையின் கடைசி வரிகள் இவை:

''விதியின்
விளையாட்டு மைதானம்
விசித்திரமானது...

தமிழ்நாட்டில்
தண்ணீரை
ஒளித்து வைத்துவிட்டு
வெறி பிடித்த நெருப்பை
விளையாடச் சொல்கிறது.'' (ப.75)

'கும்பகோணத்தில் மகாவதம்' - பயில்வார் நெஞ்சை நெகிழச் செய்யும் தலைப்பு!

தன்னிரக்கம் நனி சொட்டச் சொட்டக் காதல் கவிதைகள் பாடுவதில் மேத்தாவுக்கு நிகர் மேத்தாவே ஆவார். 'குற்றப் பத்திரிகை', 'ஆகாயத்துக்கு அடுத்த வீடு', 'விடை பெறும் வேளை', 'கன்னி மடம்', 'இதயத்தின் தொலைபேசி' ஆகிய கவிதைகள் இவ் வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. காட்டாக, 'குற்றப் பத்திரிகை' என்னும் கவிதையில் இருந்து கவிஞரின் கை வண்ணம் பளிச்சிடும் சில வரிகள் இதோ:

''கம்பன் காவியத்தில்
வாலி வதை
கண்ணே நீ செய்வது
வாலிப வதை!

நியாய விலைக் கடையில்
நிற்பது போல்
நிற்க வைத்தாய்
என் ஆசைகளை...'' (பக்.8-9)

வாலி வதை- வாலிப வதை: நல்ல சொல் விளையாட்டு! இங்கே ஆசைகளின் அணி வகுப்பிற்குக் கவிஞர் கையாண்டிருக்கும் உவமை வித்தியாசமானது.

'வித்தகக் கவிஞனின் கை பட்டால் விறகுக் கட்டையும் வீணையாகும்' என்பதற்குக் கட்டியம் கூறும் ஒரு சிறுகவிதை இதோ:

''எடைக்குப் போடும்போது தான்
தெரிகிறது...
பத்திரிகைகளில்

படிக்காமல் விட்ட

பயனுள்ள பக்கங்கள்!'' (ப.13)

- 'ஞானம்' என்பது கவிஞர் இக் கவிதைக்குச் சூட்டி இருக்கும் பொருள் பொதிந்த தலைப்பு ஆகும்.

பேராசிரியர் பாலா கூறுவது போல், ''மேத்தா கவிதைகளின் ரகசியம் தான் என்ன? எந்த இலக்கணப் புலவனுக்கும் வேலை வைக்காத எளிமைதான்'' (கண்ணீர்ப் பூக்கள், முற்றுப் பெறாத ஒரு முடிவுரை, ப.120) இன்றைய புதுக்கவிஞர்களின் இடையே மேத்தாவுக்கு ஒரு தனி இடத்தைப் பெற்றுத் தந்திருப்பதும் இந்த அபூர்வமான எளிமை தான்!

-புதிய காற்று, டிசம்பர் 2006

6

'அசலான தமிழ்க் கவிதைகள்'

"சிறந்த மொழி வளம், நல்ல ஓசைக் கட்டு, எளிய செறிந்த நடை, ஆழ்ந்த தத்துவ வீச்சு, பிசிறு தட்டாத எளிமை இவை இக்கவிதைகளின் பாங்காக அமைகின்றன."

- கி.நாச்சிமுத்து ★

'பாலா' என உரிமையோடும் உள்ளன்போடும் இலக்கிய ஆர்வலர்களால் அழைக்கப் பெறும் இரா. பாலச்சந்திரன் அடிப்படையில் ஓர் ஆங்கிலப் பேராசிரியர்; ஆனால், அவரது உள்ளமோ, 'இருந்தமிழே உன்னால் இருந்தேன்' எனத் 'தமிழ் விடு தூது' ஆசிரியர் உரைத்தது போல் எப்போதும் தமிழுக்காகத் துடித்தெழுந்து செயலாற்றுவது. பேராசிரியர், ஆய்வாளர், கவிஞர், திறனாய்வாளர், மொழிபெயர்ப்பாளர், ஒருங்கிணைப் பாளர் என்றாற் போல் பல்வேறு பரிமாணங்களால் உருவானது பாலாவின் ஆளுமை. பாலாவை ஈன்று புறந்தந்தது சிவகங்கைச் சீமை; சான்றோன் ஆக்கியது காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரி; பலாவின் ஆளுமை உருவாக்கத்தில் பெரும்பங்கு பெற்றது புதுக்கோட்டை மன்னர் கல்லூரி; நிறைவாகப் பாலாவைப் பணி கொண்டது திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம். தற்போது அவரைச் சிக்கனெப் பிடித்துக் கொண்டிருப்பது சாகித்திய அகாதெமி. 'புதுக்கவிதை ஒரு

★ கருத்துரை, பாலாவின் 'இன்னொரு மனிதர்கள்', ப.11.

புதுப்பார்வை' பாலாவின் திறனாய்வுத் திறத்திற்குக் கட்டியம் கூறும் நூல்; அருமையும் எளிமையும் அழகும் கலந்த நடையில் பாலா படைத்துத் தந்திருக்கும் நூல் 'சர்ரியலிஸம்'. மைதிலி மொழிக் கவிஞரான வித்யாபதியின் காதல் கவிதைகள் பாலாவின் கை வண்ணத்தில் தமிழில் வெளிவந்துள்ளன. 'தாய்' இதழில் பாலா வாரந்தோறும் எழுதிய சுவையான குறுங்கட்டுரைகள் 'கவிதைப் பக்கம்' என்னும் பெயரில் நூல் வடிவில் வெளிவந்துள்ளன. 'பாரதியும் கீட்சும்' பற்றித் திருச்சி வானொலியில் பாலா ஆற்றிய உரை பின்னாளில் ஒப்பாய்வு நூலாக உருப்பெற்றது. 'முன்னுரையும் பின்னுரையும்' என்பது கவிஞர்கள் பலரது தொகுதிகளுக்குப் பாலா வழங்கிய அணிந்துரைகளின் தொகுப்பு ஆகும். தொடக்க நாளில் 'தமிழ் இலக்கிய விமர்சகர்கள்' என்னும் பெயரில் ஒரு தொகுப்பு நூலையும் பாலா வெளியிட்டுள்ளார். எல்லாவற்றுக்கும் மேலாக, 'இன்னொரு மனிதர்கள், 'திண்ணைகளும் வரவேற்பறைகளும்' என்னும் இரண்டும், பாலாவைக் கவிஞராக அடையாளம் காட்டும் நூல்கள் ஆகும். இவற்றுள் முன்னது 'புதூஉக் கவிதைகள்' என்னும் குறிப்புடன் 1991 - ஆம் ஆண்டில் வெளிவந்தது; பின்னது 'நவகவிதைத் தொகுதி' என்னும் அறிமுகத்துடன் 1999-ஆம் ஆண்டில் வெளிவந்தது. இனி, கவிஞர் என்ற நிலையில் பாலாவின் ஆளுமையில் சுடர் விட்டு நிற்கும் ஒருசில பண்புகளைக் குறித்துக் காண்போம்.

பாலாவின் கவிதைகள் பலவற்றில் வெளிப்படும் அவரது பார்வைப் புலம் தமிழுக்குப் புதியது. கவிதைக்கு உடனடியான வாசகர்களைப் பெற்றுத் தரும் அன்றாட அரசியல், பகடி, சமத்காரங்கள் ஆகியவற்றிற்கு அவர் ஒருபோதும் முதன்மை

தருவதில்லை. மாறாக, அவரது கவிதைகள் யாவும் நம் நிகழ்கால வாழ்வின் சிறுமைகள், திருகல்கள், வழுக்கல்கள், மனித மனோபாவ விசித்திரங்கள் ஆகியவற்றையே தொட்டுக் காட்டுகின்றன; துலக்கியும் காட்டுகின்றன! உள்ளங்கவர் உதாரணம் ஒன்று இதோ:

''வணக்கம் என்பார்
வணங்க மாட்டார்
நலம் பார்த்தறியார்
நலமென்றெழுதுவார்
பொதுவான பொய்களில்
பொலிகிறது வாழ்க்கை''

(இன்னொரு மனிதர்கள், ப.52)

'வாழ்க்கை' என்னும் தலைப்பில் பாலா தீட்டியிருக்கும் குறுங்கவிதை இது. நினைப்பது ஒன்று, பேசுவது இன்னொன்று, செய்வது பிறிதொன்றாகப் பொய்யான வாழ்க்கை வாழ்ந்து வரும் இன்றைய மனிதனின் போக்கை இக் கவிதை தனக்கே உரிய பாங்கில் தோலுரித்துக் காட்டுகின்றது.

''உலகம் யாவையும் தாம் உளவாக்கலும், நிலை பெறுத்தலும், நீக்கலும், நீங்கலா அலகுஇலா விளையாட்டு உடையார் - அவர், தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே'' என்பது கம்ப ராமாயணக் கடவுள் வணக்கப் பாடல். புகழ் பெற்ற இப் பாடலைப் 'பற்று' என்ற கவிதையில் பாலா இன்றைய சமூகத்தின் - மனித மனத்தின் - நோக்கையும் போக்கையும் விமர்சனம் செய்வதற்கு நன்கு பயன்படுத்திக் கொண்டுள்ளார். கவிஞரின் பார்வையில், ''அன்னவர்க்கே சரண் என்பது எல்லோர்க்கும் பொது; ஆர்

தலைவர் என்பதில் தான், இங்கு சச்சரவு''. மனிதர்களில் எத்தனை விதம்! அவர் போற்றும் தலைவர்களும் தான் எத்தனை எத்தனை விதம்! 'கடவுள்' என்கின்றார் சிலர்; 'இயற்கை' என்கின்றார் இன்னும் சிலர்; 'மனிதர்' என்கின்றார் வேறு சிலர். 'இறந்த மனிதர்' என்கின்றார் சிலர்; 'இருக்கும் மனிதர் இருக்கும் வரை' என்கின்றார் ஒரு சிலர்; 'இருந்த மனிதர் சிலையாய் இருந்த வரை' என்கின்றார் மற்றும் சிலர். 'இருந்த மனிதர் இருந்த இடம் தான்' என்கின்றார் வேறு சிலர். 'இருந்த மனிதர் இருந்த இடத்தில், இன்று இருக்கும் மனிதர்' என்கின்றனர் முடிவாகச் சிலர். உண்மையில் மதிப்பு யாருக்கு? இடத்திற்கா? மனிதருக்கா? உலகம் மதிப்பது யாரை? இருக்கும் மனிதரையா? இறந்த மனிதரையா? இல்லை, அவரது சிலையையா? பதவியையா?- இவ்வளவு சிந்தனை அலைகளையும் படிப்பவர் நெஞ்சில் எழுப்பும் இக் கவிதை முத்தாய்ப்பாக இப்படி நிறைவடைகிறது:

''மற்ற படிக்கு
அன்னவர்க்கே சரண் என்பது
இங்கு எல்லோர்க்கும் பொது
ஆர்தலைவர் என்பதில் தான்
இங்கு சச்சரவு'' *(இன்னொரு மனிதர்கள், ப.30)*

'அன்னவர்க்கே சரண்' என்பதில் இங்கே ஒரு பிரச்சினையும் இல்லை; எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. 'ஆர் தலைவர்' என்பதில் தான் எல்லாச் சண்டையும் சச்சரவும்! பாலாவின் முத்திரைக் கவிதை இது எனலாம்.

''தமிழ்க் கவிதையியலைக் கூர்ந்து நோக்கும் போது தமிழ்க் கவிதை எப்போதும் பேச்சாகத் தான் இருந்து வந்திருக்கிறது

என்று எனக்குத் தோன்றுகிறது. கம்பன், வள்ளுவர், இளங்கோ, பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் என்று எல்லோருடைய கவிதைகளிலும் தூக்கலாக இருப்பது பேச்சுத் தான்... எனக்கென்னவோ மேற்கின் மௌனம், கிழக்கின் பேச்சை வெற்றி கொள்ள இயலவில்லை... நான் 'பேச்சு தான் கவிதை' என்று நினைக்கிறவன்'' (ப.8) எனத் 'திண்ணைகளும் வரவேற்பறைகளும்' தொகுப்பிற்கு எழுதிய 'என்னுரை'யில் குறிப்பிட்டுள்ளார் பாலா. அவரது 'புன்னகை நூற்றாண்டு' என்னும் கவிதை இவ் வகையில் மனங்கொளத் தக்கது.

''இரு ... இரு...
இயல்பாய் இராதே!
அழகாய் இரு''

எனத் தொடங்குகிறது கவிதை. தொடர்ந்து அக் கவிதை எது நடந்தாலும், கோபமே கொள்ளாமல், எப்போதும் பணிவுடன்- வணக்கங்களுடன் - புன்னகை செய்யுமாறு இந் நூற்றாண்டு மனிதனுக்கு அறிவுறுத்துகின்றது; செய்தி வாசிப்பவர் போல்- தொலைக்காட்சிப் பெண்டிர் போல் - கைதாகும் முன்னும் பின்னும் பளிச்சென்ற புன்னகை அவிழ்த்துக் கையசைத்தவாறே செல்லும் பிரமுகர்கள், கொலைஞர்கள், போக்கிரிகள் போல் - எப்போதும் புன்னகை புரியுமாறு வலியுறுத்துகிறது.

''புதிய நாகரிகம் வழங்கிய
மனித இலச்சினை புன்னகை!
எனவே எப்போதும்
புன்னகை உடுத்து!
மன அழுத்தமா? மாத்திரை சாப்பிடு.

தியான வகுப்புக்குப் போ.
எது நடந்தாலும்
புன்னகை பழகு, புதுஉலகு உனது!''

(திண்ணைகளும் வரவேற்பறைகளும், ப.17)

'இதுவே புதிய நூற்றாண்டு மனிதனின் வெற்றி மந்திரம்' என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லி முடிவடைகிறது கவிதை.

அன்று வீடுகள் தோறும் வீதி பார்த்துத் திண்ணைகள் கிடந்தன- அது ஓர் அழகிய நிலாக் காலம்! இன்று திண்ணைகள் இடித்துத் திருக்கோலமாய் வரவேற்பறைகள் வந்துவிட்டன- ஆனால் அன்பும் மனிதமும் ஒரேயடியாக விடைபெற்றுச் சென்றுவிட்டன! கவிஞர் பாலா 'திண்ணைகளும் வரவேற்பறைகளும்' கவிதையின் முடிவில் குறிப்பிடுவது போல்,

''நம் உள்வெளி நாகரிகத்தில்
வாழ்க்கை அலங்காரமாகி விட்டது!
மனிதம் தான் மூளியாகிவிட்டது!''

(திண்ணைகளும் வரவேற்பறைகளும், ப.14)

நிறைவாக, பேராசிரியர் கி. நாச்சிமுத்துவின் சொற்களில் சுட்ட வேண்டும் என்றால், ''இக் கவிதைகளில் மனங்கவரும் மண்வாசனை வீசுகிறது. வெளிநாட்டு சென்ட் மணம் வீசவில்லை. இது இக் கவிதைகளை அசலான தமிழ்க் கவிதைகளாக்குகின்றது.''(கருத்துரை, பாலாவின் 'இன்னொரு மனிதர்கள்', ப.11)

- கவிதை உறவு, டிசம்பர் 2006

7

மித்ராவின் நறுக்குகள்

"''கவிஞர் மித்ராவின் எழுத்தில் 'ஹைகூ' தமிழ்ச் சூழலுக்குத் தகுந்தபடி ஒரு புதிய பரிமாணத்தை அடைகிறது."

- இந்திரன்*

தமிழ் ஹைகூ உலகில் தி.லீலாவதிக்குப் பிறகு தடம் பதித்து வரும் பெண்மணி மித்ரா. இவரது இயற்பெயர் வீ. உண்ணாமலை. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பெற்றெடுத்த ஹைகூ கவிஞர்கள் இருவர். ஒருவர் அறிவுமதி; இன்னொருவர் மித்ரா. ''அண்ணாமலைப் பல்கலைக்கழகம் எனக்கொரு போதி மரம்; இங்கு தான் நான் கவிதை ஞானம் பெற்றேன். என் அனுபவங்களைக் கவிதைகளாய் மொழிபெயர்த்தேன்'' (என்னுரை, மௌனம் சுமக்கும் வானம், p.vi) என்பது மித்ராவின் ஒப்புதல் வாக்குமூலம். மித்ராவின் முதல் ஹைகூ தொகுதி 'ஹைகூ கவிதைகள்' என்னும் தலைப்பில் 1990-ஆம் ஆண்டில் வெளிவந்தது; இதனை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குக் காணிக்கையாக்கியுள்ளார் மித்ரா. இத் தொகுப்பிற்குக் கவிஞர் அறிவுமதி எட்டுப் பக்க அளவில் நீண்டதோர் அணிந்துரையினை நல்கியுள்ளார். மித்ராவின் இரண்டாவது ஹைகூ தொகுப்பு 'குடையில் கேட்ட பேச்சு' என்னும் தலைப்பில் 1993-ஆம்

* தூரிகை தாண்டாத ஓவியம், மித்ராவின் 'குடையில் கேட்ட பேச்சு', ப.11.

ஆண்டில் வெளிவந்துள்ளது. இத் தொகுப்பிற்கு இந்திரன் எட்டுப் பக்க அளவில் நல்லதொரு முன்னுரையை வழங்கியுள்ளார். ''இதுதான் ஹைகூ என்று தமிழுக்கு அடையாளம் காட்டிய அம்மா லீலாவதி அவர்களுக்கு'' இந்நூல் காணிக்கையாக்கப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. மித்ராவின் ஆயிரம் ஹைகூக்கள் 'மௌனம் சுமக்கும் வானம்' என்னும் தலைப்பில் ஒரே தொகுப்பாக வெளிவந்துள்ளன; இத் தொகுப்பு 2005-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. இதனை 'அம்மாவுக்கு...' காணிக்கையாக்கியுள்ளார் கவிஞர். முன்பே நூலாக வெளிவந்து வாசகர்களின் வரவேற்பைப் பெற்ற மித்ராவின் ஹைகூ நூல்களோடு அவர் புதிதாக எழுதிய ஹைகூ கவிதைகளையும் தாங்கி 'மித்ராவின் ஹைக்கூ கவிதைகள்' என்னும் பெயரில் ஒரு தொகுப்பு 2002-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. இவை தவிர, சஞ்சீவ் பாட்லாவின் 'ஹைகூ மை ப்ரண்ட்' என்னும் ஆங்கில நூல் மித்ராவின் கை வண்ணத்தில் 'ஹைகூ என் தோழி...' (1994) என்ற தலைப்பில் தமிழ்ச் சூழலுக்கு ஏற்பப் புதிய பரிமாணத்தை அடைந்துள்ளது. 'தமிழ் ஹைக்கூ - நேற்றும் இன்றும்' (2003) என்பது ஹைகூ குறித்த சரியான புரிதலுக்குத் துணை நிற்கும் மித்ராவின் ஒன்பது ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு ஆகும். மித்ராவின் ஹைகூ பற்று இத்துடன் நின்ற பாடில்லை; அவர் தம் முனைவர் பட்டத்திற்கும் முதுமுனைவர் பட்டத்திற்கும் ஹைகூ கவிதையையே ஆய்வுப் பொருளாகத் தேர்ந்து கொண்டுள்ளார். ஹைகூ வடிவம் மித்ராவின் 'சுவாசக் காற்றில் குருதியில் கலந்து விட்ட ஒன்று' என்பது இதனால் நன்கு விளங்கும்.

மித்ராவின் ஹைகூ கவிதைகளில் மேலோங்கிக் காணப் பெறுவது இயற்கை மீதான அவரது ஆழ்ந்த அக்கறை ஆகும். இது தாய்மை நிறைந்த ஒரு பெண் குரலாகவே அவரது கவிதைகளில் வெளிப்பட்டுள்ளது. பதச் சோறாக ஒரு ஹைகூ இதோ:

''குளம்
முகம் பார்க்கும் நிலா
குளிக்காமல் திரும்பினேன்'' (குடையில் கேட்ட பேச்சு, ப.26)

குளத்தில் தெரியும் நிலாவின் நிழலைக் கலக்கிவிடக் கூடாது என்ற கவனத்துடன் குளிக்காமல் திரும்பிவிடுகிறார் கவிஞர். 'பார்க்கின்ற மலருடு நீயே இருத்தி, அப்பனி மலர் எடுக்கவும் மனமும் நண்ணேன்...' என்னும் தாயுமானவரின் வாக்கே இங்கே காலத்திற்கு ஏற்ற புதுக்கோலம் கொண்டுள்ளது.

''பொதுவாக வீசு காற்றே
கிளைகளில்
பறவைகளின் முட்டைகள்'' (குடையில் கேட்ட பேச்சு, ப.43)

என்பது காற்றுக்குக் கவிஞா விடுக்கும் 'சிறு விண்ணப்பம்!'

கவிக்கோ அப்துல் ரகுமான் கூறுவது போல், ''ஹைகூவை அடையாளம் காண ஒரு தனிப்பார்வை வேண்டும். மித்ரா கொடுத்து வைத்தவர். அவருக்கு இந்த ஹைகூ பார்வை இயல்பாய் வாய்த்திருக்கிறது.'' அந்தப் பார்வை தான் எறும்புகள் நடந்த தடத்தைப் பம்பரம் சுற்ற நல்லதொரு கயிறாகப் பார்க்க வைத்திருக்கிறது.

''பம்பரம் சுற்ற
நல்ல கயிறு
எறும்பின் பாதை'' (குடையில் கேட்ட பேச்சு,
ப. 35)

இன்னும் ஒரு படி மேலாக, பாறைகள் உடைபடுவதைக் கூடப் பொறுக்காத பூ மனத்துடன்,

''கல்மனசுக்காரர்கள்
பாருங்கள்
பாறைகளை உடைக்கிறார்கள்''
(குடையில் கேட்ட பேச்சு, ப.30)

என்னும் இரக்க உணர்வு ததும்பி நிற்கும் ஹைகூ கவிதையைப் படைக்கத் தூண்டியிருக்கிறது.

மித்ராவின் ஹைகூ கவிதைகளில் ஆழமான சமூக விமர்சனங்களும் இடம்பெற்றுள்ளன.

''தலைமுறைக் கோபம்
அடிவிழ... அடி விழ
அதிரும் பறை'' (குடையில் கேட்டபேச்சு,
ப.38)

என்னும் ஹைகூ இவ் வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒன்று. பறை அதிர்கிறது. அதை இசைக்கிறவனின் கை ஓங்கி ஒலிக்கிறது. இதன் காரணம் என்னவாக இருக்கும் என்று கவிஞரின் மனம் துழாவிப் பார்க்கிறபோது உண்மை புலனாகிறது. அந்தப் பறை அறைபவனுக்குக் காலங்காலமாக இழைக்கப்பட்ட சாதிக் கொடுமைகளின் தீவிரமே இங்கே பறையொலியாக ஓங்கிக்

கேட்கிறது. ''இதனை இத் தொகுப்பில் உன்னதமான ஒரு கவிதை என்று குறிப்பிடுவேன்'' (ப.10) என மதிப்பிடுகின்றார் இந்திரன்.

பெண்களின் உள்ளக் குமுறல்களையும் உள்ளார்ந்த சோகங்களையும் தம் ஹைகூ கவிதைகளில் ஆங்காங்கே திட்பமாகவும் நுட்பமாகவும் பதிவு செய்துள்ளார் மித்ரா. ஓர் உதாரணம் இதோ:

''உன்னால் முடிகிறது குயிலே!
ஊரறிய அழுவதற்கு.
நான் மனிதப் பெண்!'' (ஹைகூ கவிதைகள், ப.22)

அறிவுமதி கூறுவது போல், ''இப்படி பெண்களிடமிருந்தே பெண்களின் உணர்வுகள் வெளிப்படுகிற போது சொல்லாத சேதிகளின் சோகங்களெல்லாம் நமக்குக் கிடைக்கிற வாய்ப்பு ஏற்படுகிறது'' (அணிந்துரை, ஹைகூ கவிதைகள், ப.11).

''அமைச்சர் வரும் பாதை.
கடக்கத் தவிக்கும் மக்கள்.
கேலியாய் வண்ணத்துப் பூச்சி!''(ஹைகூ
கவிதைகள், ப.26)

மெல்லிய நகைச்சுவை உணர்வும் அங்கதக் குறிப்பும் கை குலுக்கி நிற்கும் அழகிய ஹைகூ இது!

'சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்- வெறும், சோற்றுக்கோ வந்த திந்தப் பஞ்சம்' என்று நெஞ்சு பொறுக்காமல் பாடினார் பாரதியார். மித்ராவோ,

''பசித்த குழந்தை அழும்
கஞ்சி காய்ச்சுவான் தந்தை...
சுவரொட்டிகள் ஒட்ட!''   (ஹைகூ கவிதைகள்,
ப.64)

என முரண் சுவை விளங்க வறுமைக் கொடுமையைத் தம் ஹைகூ ஒன்றில் படம் பிடித்துக் காட்டுகின்றார். அவருக்கு 'ஏழை ஆடையில் கிழிசல், வறுமை எழுதிய கவிதை' (மௌனம் சுமக்கும் வானம், ப.3)யாய்த் தோன்றுகிறது.

மித்ராவின் எழுதுகோல் அவ்வப்போது படிப்பவர் மன வயல்களில் நம்பிக்கை விதைகளையும் தூவிச் செல்கின்றது. ஓர் உதாரணம் இதோ:

''என்ன நம்பிக்கை
தண்டவாளங்களின் நடுவே
தளிர்கள்''   (குடையில் கேட்ட பேச்சு, ப.45)

''ஹைகூ என்ற பெயரில் பிளாஸ்டிக் பூக்களைப் பார்த்துப் பார்த்து எரிச்சலடைந்த நேரத்தில் உண்மையாகவே தமிழில் மலர்ந்த இந்தப் பூக்கள் அழகாக- ஆறுதலாக இருக்கின்றன'' எனக் கவிக்கோ அப்துல் ரகுமான், மித்ராவின் ஹைகூ கவிதைகளைக் குறித்துக் கூறியுள்ள மதிப்பீடு உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

-மனித நேயம், ஜனவரி 2007

8

அறிவுமதியின் நறுக்குகள்

"'இலக்கியம் எப்போது குறைவாக வாசிக்கவும் அதிகமாக அசை போடவும் செய்கிறதோ அப்போதுதான் அது சிறந்த இலக்கியமாக இருக்கமுடியும்."

– இறையன்பு★

''தாமிரவருணித் தண்ணீர் போன்ற தெளிந்த வார்த்தை யோட்டம். கார் காலத்து வானம் போலக் கப்பிக் கிடக்கும் சிந்தனைகள்... ஒளிமயமான எதிர்காலம் இவருக்குண்டு'' எனக் கவிஞர் கண்ணதாசனால் 1977-ஆம் ஆண்டிலேயே அடையாளம் காட்டப் பெற்றவர் அறிவுமதி. கவிஞர் நா.காமராசன் குறிப்பிடுவது போல் ''கவியரங்கச் சக்கரவர்த்தி அப்துல் ரகுமானின் பால் வீதியில் பவனி வரும் நிலவு தான் அறிவுமதி.'' அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஈன்று புறந்தந்த கவி ஆளுமை அறிவுமதி. ''கற்பனைகளை / விடவும்/ பிரச்சனைகள் முக்கியம்'' என்பது இவரது கொள்கை முழக்கம்.

தமிழ் ஹைகூ உலகிற்கு அறிவுமதி நல்கி இருக்கும் கொடைகள் இரண்டு. ஒன்று, 'புல்லின் நுனியில் பனித்துளி'; இத் தொகுப்பு 1984 - ஆம் ஆண்டில் வெளிவந்தது; 'வாமனர்களுக்கு ஒரு வரவேற்பு' என்னும் தலைப்பில் கவிக்கோ அப்துல் ரகுமான் இத் தொகுப்பிற்குத் தந்திருக்கும் முன்னுரை

★ முகத்தில் தெளித்த சாரல், ப.132.

ஹைகூ பற்றிய நல்லதோர் அறிமுகத்தை இலக்கிய ஆர்வலர் களுக்கு நல்கியது; தெளிவான புரிதலையும் தோற்றுவித்தது. மற்றொன்று, 'கடைசி மழைத் துளி'; இத்தொகுப்பு 1996 - ஆம் ஆண்டில் வெளிவந்தது; இத் தொகுப்பிற்கு 'மெல்லினம்' என்ற தலைப்பில் எழுத்தாளர் வண்ணதாசனும், 'வல்லினம்' என்ற தலைப்பில் 'உணர்ச்சிக் கவிஞர்' காசி ஆனந்தனும் முறையே முன்னுரையும் பின்னுரையும் அளித்துள்ளனர்; 'இடையினம்' என்னும் தலைப்பில் அறிவுமதி தம் கவியுளத்தைத் திறந்து காட்டியுள்ளார். அறிவுமதியின் இவ்விரு தொகுப்புக்களும் தமிழ் ஹைகூ உலகிற்குக் கிடைத்துள்ள வளமான பங்களிப்புகள் ஆகும்.

கவிக்கோ அப்துல் ரகுமான் தம் அணிந்துரையில் குறிப்பிடுவது போல் ''ஹைகூக்களோடு அவர் (அறிவுமதி) கூடி வாழ்ந்து குடும்பம் நடத்தியிருக்கிறார். அதனால் ஹைகூ அவருக்கு இயல்பாக- அசலாக வருகிறது.'' ஜப்பானிய ஹைகூக்களின் தனிப்பெரும் பண்புகளான வார்த்தைச் சித்திர வார்ப்பும், உணர்வலைகளை எழுப்பும் குறியீடு இயக்கப் படிம அமைப்பும் அறிவுமதியின் ஹைகூ கவிதைகளில் அற்புதமாக வந்திருக் கின்றன. இந்த உலகத்தின் எளிய உயிரினங்களுக்கும்- ஏன், உயிரற்ற பொருள்களுக்கும் கூட- இரங்கும் அருளுணர்வு ஹைகூ கவிஞர் என்ற முறையில் அறிவுமதியின் ஆளுமையில் ததும்பி நிற்பதைக் காணமுடிகின்றது.

''ஊருக்குத் திரும்ப ஒரு வாரம் ஆகும்
அய்யோ நின்று கொண்டே இருப்பான்
என் குழந்தை பொம்மை''

எனக் குழந்தை பொம்மைக்கும்,

''விறகு வெட்டி வேறுமரம் பார்
பொந்துக்குள்
கிளிக்குஞ்சு''

எனக் கிளிக்குஞ்சுக்கும்,

''விரைவாய்ப் போக வேண்டும்
சன்னலில் பசியோடு காத்திருப்பான்
என் காக்கை நண்பன்''

என்க் காக்கைக்கும்,

''நடுப்பகல்
சுடுமணல்
பாவம்... என் சுவடுகள்''

எனச் சுடுமணலில் கிடக்கும் பாதச் சுவடுகளுக்கும் இரங்கும் அருள் உள்ளம் அறிவுமதிக்குக் கவிஞருக்கு உரிய தகுதியைத் தருகிறது.

கடித்த எறும்பைக் கூட அடிக்க மனம் வரவில்லை கவிஞருக்கு; செல்லமாக எறும்பிடம் இப்படிப் பேசுகிறார்:

''தூங்கும்போது எதற்குத் தொந்தரவு
இரு...இரு மெல்ல எடுத்து விடுகிறேன்
கடித்த எறும்பே.''

உயர்நீதிமன்றத்தை விட - ஏன், உச்ச நீதிமன்றத்தைக் காட்டிலும்- வல்லமை பொருந்தியது மனிதனின் மனச்சாட்சி. அதன் அகலம், ஆழம், நீளம் என்னும் முப்பரிமாணங்களையும் அழகுறப் பதிவு செய்துள்ளது அறிவுமதியின் ஹைகூ ஒன்று:

''கொசு வலைக்குள் ஒரு
கொசு ... அடடே
மனச்சாட்சி.''

விரட்டியடிக்கவும் முடியாது, ஒரேயடியாக வீழ்த்தவும் முடியாது கொசுவை; அதுபோல் தான் மனச்சாட்சியையும் ! அறிவுமதியின் கை வண்ணத்தில் அன்றாட வாழ்க்கைக் காட்சியும் ஆங்காங்கே அழகிய ஹைகூவாக வெளிப்பட்டுள்ளது.

''இனி எப்போது சந்திப்போம்
சாப்பாட்டிற்காக நிற்கும்
எதிரும் புதிருமாய் விரைவுப் பேருந்துகள்.''

முதல் தொகுதியான 'புல்லின் நுனியில் பனித்துளி' (1984) வெளிவந்து பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது தொகுதியான 'கடைசி மழைத்துளி' (1996) வெளிவந்துள்ளது. இக் கால இடைவெளி கவிஞரின் பாடுபொருள் தேர்வில் விரிவையும் ஆழத்தையும் கூட்டியுள்ளது; பாடும் முறையில் நுட்பத்தையும் மெருகையும் சேர்த்துள்ளது. கவிஞரின் சொற்களிலேயே சுட்ட வேண்டும் என்றால், 'கடைசி மழைத் துளி' தொகுப்பில் மெல்லினமும் உண்டு; வல்லினமும் உண்டு; இடையினமும் உண்டு.

''பள்ளிக்குப் போகாத சிறுமி
செல்லமாய்க் குட்டும்
ஆலங்கட்டி மழை'' *(ப.25)*

- மழை பற்றிய கவிஞரின் மென்மையான பதிவு இது! . ஆலங் கட்டி மழை, பள்ளிக்குப் போகாத சிறுமியின் தலையில்

செல்லமாய்க் குட்டுகிறதாம்! அறியாமையை மென்மையாகச் சாடும் நயமான கருத்துப் புலப்பாடு!

முன்னைய தொகுப்பில் ஒல்லும் வகை எல்லாம் உயிரிரக்க உணர்வை வெளிப்படுத்திய கவிஞர் இத் தொகுப்பில் சுற்றுப்புறச் சூழல் சீர்கேட்டிற்கு எதிராக அழுத்தமாகக் குரல் கொடுத்துள்ளார்.

''மரம் வெட்டிய கோடரி
பார்த்துக் கொள்
கடைசி மழைத் துளி'' *(ப.41)*

என்ற ஹைகூ இவ் வகையில் குறிப்பிடத் தக்கதாகும். இங்கே மரங்களை அழிப்பதால் விளையும் பேரவலத்தை - மழை வளம் குன்றுதலை - நுட்பமாகப் புலப்படுத்தியுள்ளார் கவிஞர்.

நிலாவின் கொள்ளை அழகையும் குளிர்ந்த ஒளியையுமே படைத்துக் காட்டும் முருகியல் போக்கிற்கு மாறாக, அறிவுமதி 'மூச்சுத் திணறும் நிலா'வினை நம் முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றார்.

''தோல் தொழிற்சாலை
அழுகல் நீர்
மூச்சுத் திணறும் நிலா'' (ப.43)

'அணுத்திமிர் அடக்கு' படைத்த கவிஞருக்கு 'வல்லின'மும் அத்துபடியே. அடக்குமுறைக்கு எதிரான வன்முறையைப் படம் பிடிக்கும் ஹைகூ இதோ:

''நொறுக்குவான் பண்ணையாரை
எல்லாக் கோபங்களோடும்
சுடுகாட்டில்'' *(ப.55)*

இருந்தபோது எதிராகச் சுண்டு விரலைக் கூட அசைக்க முடியாது; அதனால் தான் இறந்த பிறகு மனம் போல அடித்து நொறுக்குகிறான் அடக்குமுறைக்கு ஆளானவன்!

'தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு.' என்ன குணம் என்கிறீர்களா? இதோ கவிஞர் தரும் விடை:

''தமிழன் என்று சொல்ல
தமிழனுக்குப் பிடிக்காது
வாழ்க... யாதவ்... தலித்'' (ப.62)

'சாதித் தமிழர்'களுக்கு இங்கே பஞ்சம் இல்லை! தமிழன் 'சாதிக்கும் தமிழ'னாக- பாரதி சுட்டுவது போல் 'உலர்ந்த தமிழ'னாக - உயரப் போவது என்று? இதுவே கவிஞரின் ஆழ்ந்த கவலை.

'தமிழுக்கு அமுதென்று பேர், தமிழனுக்கு அகதி என்று பேர்' என்று உருக்கமாகப் பாடினான் இளங்கவிஞன் ஒருவன். காசி ஆனந்தனின் உள்ளம் கவர்ந்த அறிவுமதியின் நறுக்கு ஒன்று வருமாறு:

''அகதி முகாம்
மழையில் வருகிறது
மண் வாசனை'' (ப.73)

திருவாசகத்திற்கு மட்டுமன்று, அறிவுமதியின் இந்த ஹைகூவுக்கு உருகார், ஒரு வாசகத்திற்கும் உருகார் எனலாம். மழை வாசனையோடு மண் வாசனையையும் கலந்து தரும் இந் நறுக்கு தனித்தன்மை வாய்ந்தது.

'கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே இங்கு வேரில் பழுத்த பலா' என்று கைம்பெண்ணின் அவலத்தை உருக்கமாகச் சித்திரித்தார் பாவேந்தர் பாரதிதாசன். அறிவுமதியோ தம் ஹைகூ ஒன்றில் முதிர்கன்னி ஒருத்தியின் உள்ளத்தில் ஆழத்தில் குடிகொண்டிருக்கும் ஏக்க உணர்வைப் பதிவு செய்துள்ளார்:

''மணவறை
மெதுவாகப் பெருக்குகிறாள்
முதிர்கன்னி'' (ப.78)

பெண்ணைப் பொறுத்த வரையில், குழந்தையாக இருந்தாலும் சரி, தெய்வமாக இருந்தாலும் சரி இரண்டாம் நிலை தான்; புகுந்த வீடோ, அலுவலகமோ எதுவாயினும் இன்று ஒரு பெண் எதிர்கொள்ளுவது வித விதமான பிரச்சினைகளைத் தான்.

''நெருப்புதான் பெண்
அம்மாவிற்கு அடி வயிற்றில்
மாமியாருக்கு அடுப்படியில்'' (ப.80)

என்னும் ஹைகூ இவ் வகையில் குறிப்பிடத்தக்கதாகும்.

''அறிவுமதியின் கவிதையைப் படித்தாலும், படிக்க நின்று கேட்டாலும் உணர்வுகளைத் தொடுவதற்குக் காரணம் அவை பிரச்சனைகளைக் கவிதைகளாகத் தொடுகின்றன; தீர்வு வழங்குகின்றன'' என்னும் கவிஞர் இன்குலாப்பின் மதிப்பீடு, அறிவுமதியின் ஹைகூ கவிதைகளுக்கும் பொருந்தி வருவதே ஆகும்.

-புதிய காற்று, நவம்பர் 2006

9

நவதிலக்கின் நறுக்குகள்

"'உங்கள் சிந்தனை என்னும் ஜலப் பரப்பில் எறியப் படும் சிறிய கல் ஹைகூ."

– சுஜாதா*

சின்னக் குழந்தை, சின்னப் புத்தகம், சின்னப் பொம்மை, சின்ன வீடு (தவறான பொருளில் அல்லாமல் சரியான புரிதலில்) -இவ் வரிசையில் இலக்கிய உலகில் பலரையும் கவர்ந்து இழுக்கும் சின்னக் கவிதை ஹைகூ. 'கடுகு சிறுத்தாலும் காரம் போகாது' என்பார்களே அதுபோல், ஹைகூவும் வடிவில் கடுகினைப் போல் சிறுத்துக் காட்சியளித்தாலும், அதன் காரமும் மணமும் குணமும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. தமிழ் ஹைகூ கவிதை வரிசையில் 1994-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சேர்ந்த தொகுப்பு 'பூக்கள் பறிப்பதற்கில்லை.' ஆசிரியர் நவதிலக் மானாமதுரையைச் சார்ந்தவர். கவிஞர் மீரா இந் நூலுக்கு நல்லதொரு முன்னுரையை வழங்கியுள்ளார்.

காலங்கள் எவ்வளவு மாறினாலும் - தகவல் தொழில் நுட்பத் துறையில் இன்று மனித குலம் எவ்வளவு உச்சிக்குச் சென்றாலும் - தாய்ப்பாசம் என்பது என்றென்றும் மாறவே

---

* ஹைகூ ஒரு புதிய அறிமுகம், ப. 5.

மாறாது; மறையவும் மறையாது. இதற்குக் கட்டியம் கூறுவது போல் இத் தொகுப்பில் நவதிலக் படைத்துத் தந்திருக்கும் முதல் ஹைகூ இதோ:

''தமிழ் இனிமை
அம்மா-
இருப்பதால்!'' (ப.17)

கவிஞரின் பார்வையில் அம்மா 'புதிய திருவாசகம்!' (ப.31) அவர் தம் நூலைக் காணிக்கையாக்கி இருப்பதும் அம்மாவிற்குத் தான்!

தாய்க்குத் தலைவணக்கம் செலுத்தும் கவிஞர், தாரத்தை நினைக்கும்போது தனி உலகிற்குச் சென்றுவிடுகின்றார். அதுவும் மனைவியின் முகத்தில் சிரிப்பைப் பார்க்கும்போது பயத்தால் ஆடிப்போகின்றார் கவிஞர். ஏன் தெரியுமா? இதோ கவிஞரே காரணம் கூறுகின்றார், கேளுங்கள்:

''மனைவி சிரிப்பு
பயமாயிருக்கிறது-
முதல் தேதி!'' (ப.22)

முதல் தேதியன்று மாலையில் வீடு திரும்பும் கணவனைப் பார்த்து மனைவி சிரிக்கிறாள் என்றால்... அந்தச் சிரிப்புக்குப் பின்னால் என்னென்ன இருக்குமோ? எத்தனை எத்தனை வேண்டுதல்களும் கோரிக்கைகளும் விண்ணப்பங்களும் அணிவகுத்து வருமோ? 'பயமாயிருக்கிறது' என்று கவிஞர் குறிப்பது சரிதானே?

முதல் தேதியன்று மாலையில் மனைவி கணவனைப் பார்த்துச் சிரிக்கும் சிரிப்புக்கு முற்றிலும் முரணானது காதலி காதலனைப்

பார்த்துச் சிரிக்கும் சிரிப்பு. இந்தச் சிரிப்புக்கு உள்ள வலிமையே தனி. இதைப் பாடவும் தவறவில்லை நவதிலக். அவரது கை வண்ணத்தைப் பறைசாற்றும் ஒரு ஹைகூ இதோ:

''அவள் சிரித்தாள்
நான் விழுந்தேன்-
கன்னத்தில் குழி!'' (ப.31)

இங்கே இளைஞன் சந்தித்திருக்கும் வீழ்ச்சி சாதாரணமானது அன்று; பெரிய வீழ்ச்சி! 'கன்னத்தில் குழி!' என்ற முத்தாய்ப்பான மூன்றாம் வரியின் மூலம் அவன் எவ்வளவு பெரிய வீழ்ச்சிக்கு ஆளாகி இருக்கிறான் என்பதைக் கண் முன்னே நிறுத்திக் காட்டுகிறார் கவிஞர்.

கவிஞர் மீரா முன்னுரையில் குறிப்பிடுவது போல், ''முரண்களை வைத்து எவ்வளவு கவிதை எழுதினாலும் அது முடிவதில்லை, சலிப்பதில்லை''(ப.12). ஆம், கவிதை உத்திகளிலே- அது, மரபுக் கவிதையானாலும் சரி, புதுக்கவிதை யானாலும் சரி, ஹைகூ கவிதையே ஆனாலும் சரி- முரணுக்கு என்று ஒரு தனியிடம் உண்டு; செல்வாக்கு உண்டு. நலதிலக் முரண் உத்தியைத் திறம்பட கையாண்டு படைத்திருக்கும் ஒரு ஹைகூ இதோ:

''சாப்பிடாத சுவாமிக்கு
நைவேத்யம் -
பசியோடு பிச்சைக்காரன்!'' *(ப.43)*

சாமி சாப்பிடாதது; பிச்சைக்காரன் பசியோடு இருப்பவன். எல்லோருக்கும் நன்கு தெரிந்த முரண், ஹைகூ கவிதையாய்

மாறும்போது, அது படிப்பவர் கவனத்தை ஈர்க்கின்றது. ஆலய வாசலில் நாம் அன்றாடம் சந்திக்கும் பிச்சைக்காரர்களின் அவல நிலையை இங்கே அழகுறப் பதிவு செய்திருக்கிறார் நவதிலக்.

சினிமாவை ஒரே வார்த்தையில் நச்சென்று விமர்சனம் செய்ய முடியுமா? ஏன் முடியாது என்று கேட்காமல் கேட்பது போல் நவதிலக் படைத்திருக்கும் ஹைகூ இதோ:

''சினிமா
ச்சீய்...
கெட்ட வார்த்தை பேசாதே!'' *(ப.29)*

'ச்சீய்...' என்ற ஒற்றைச் சொல்லிலேயே தாம் சொல்ல நினைத்த எல்லாவற்றையும் நச்சென்றும் நயமாகவும் சொல்லிவிட்டார் நவதிலக்!

ஹைகூவின் உயிர் அதன் மூன்றாம் அடிதான் என்பர்அறிஞர். மூன்றாம் அடியில் ஒரு திருப்பத்தை- மின்தாக்குதலை - ஏற்படுத்துவதில் தான் ஹைகூ கவிஞரின் தனித்தன்மையே இருக்கிறது. இவ் வகையில் வைத்த குறி தப்பாமல் அம்பினை எய்யும் ஒரு கைதேர்ந்த வில்லாளியைப் போல் நவதிலக் நன்றாகக் குறி பார்த்து இலக்கினை அடித்திருக்கும் ஒரு ஹைகூ வருமாறு:

''சுதந்திர தினம்
மனதிற்குள் துக்கம்-
வந்தது ஞாயிற்றுக்கிழமை!'' *(ப.32)*

சுதந்திர தினம் ஞாயிற்றுக்கிழமை வந்தது என்பதால் ஒரு நாள் விடுமுறை போயிற்றே, மனதிற்குள் துக்கம் பொங்கி வராதா என்ன?

'தெய்வத் திருமகன்' இராமனாலும் ஒடிக்க முடியாத வில் ஒன்று இருக்கிறதா? இருக்கிறது என்கிறார் நவதிலக், அது என்ன வில் என்கிறீர்களா? 'வானவில்'லாம்' (ப.32).

'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பார்கள். அதுபோல் வித்தகக் கவிஞர்களுக்கு எதுவும் பாட்டுப் பொருள் ஆகும். ஓர் உதாரணம்: 'பூக்களைப் பறிக்காதீர்கள்' என்ற வாசகத்தை எப்படி ஹைகூ கவிதை ஆக்கலாம்? இதோ நவ திலக்கின் ஹைகூ:

''பூக்கள் பறிப்பதற்கில்லை.
மனிதனால் இனி முடியாது-
செடிகள் சிரிக்கட்டும்!'' (ப.43)

சிரிக்க மறந்த இன்றைய மனிதன் சிந்திக்க வேண்டிய சீரிய கருத்து இது!

''இன்று நான் பெற்ற அனுபவங்களை அடுத்த தலைமுறைக்காகச் செதுக்கி வைத்திருக்கிறேன்'' (ப.8) என நூலுக்கு 'இதயம் திறந்து' எழுதிய முன்னுரையில் குறிப்பிடுகிறார் நவதிலக். இத் தொகுப்பில் அவர் பதிவு செய்திருக்கும் அனுபவங்கள் அடுத்த தலைமுறையில் வாசிப்பதற்கும் நேசிப்பதற்கும் மட்டுமல்ல, யோசிப்பதற்கும் சுவாசிப்பதற்கும் கூடத்தான்!

- மனித நேயம், அக்டோபர்-நவம்பர், 2006

10

செ. ஆடலரசனின் நறுக்குகள்

"ஹைகூவைச் சுவைப்பது என்பதே தனிக்கலை. ஹைகூ உணர்த்தும் பொருளைக் கண்முன் நிறுத்திக் கொண்டு படிக்க வேண்டும்."

– தி. லீலாவதி*

இயற்கைச் சித்திரிப்பால், சொற்சிக்கனத்தால், சுண்டக் காய்ச்சிய மொழி நடையால், படிமப் பாங்கால், தத்துவ வெளிப்பாட்டால், வாமன வடிவால், வெளியீட்டுத் திறத்தால் கவிதை ஆர்வலர்களின் நெஞ்சங்களைச் சிக்கெனப் பிடித்திருக்கும் வடிவம் ஹைகூ. அமுதபாரதி, அறிவுமதி தொடங்கி வாழையடி வாழை என வரும் ஹைகூ கவிஞர் வரிசையில் 1996- ஆம் ஆண்டில் சேர்ந்தவர் செ. ஆடலரசன். இவரது 'சேரிக்குள் தேர்' என்னும் ஹைகூ தொகுப்பு 1996 செப்டம்பர் மாதத்தில் வெளிவந்துள்ளது. குடந்தையைச் சார்ந்த 'ஆடல்' வெளியீட்டகம் இத் தொகுப்பை வெளியிட்டுள்ளது. உதய் மற்றும் தோழனின் ஓவியங்கள் நூலை அணி செய்கின்றன. ஈன்று புறந்தந்த அம்மாவுக்கும், சான்றோன் ஆக்கிய அப்பாவுக்கும் நூலைக் காணிக்கையாக்கியுள்ளார் கவிஞர்.

* இதுதான் ஹைகூ , பக். 54- 55.

''அணில் முதுகு
அழகிய
ஹைகூ'' (ப.35)

என்பது ஹைகூ குறித்துக் கவிஞர் தீட்டியிருக்கும் ஒரு ஹைகூ. அணிலாடு முன்றிலை அழகுறப் படம்பிடித்துக் காட்டியதால் சங்க காலத்துச் சான்றோர் ஒருவர் 'அணிலாடு முன்றிலார்' என்றே அழைக்கப் பெற்றார் என்பது இங்கே நினைவுகூரத் தக்க செய்தி ஆகும்.

'சிந்தனைச் சிற்பி' அம்பேத்கரில் இருந்து 'பகுத்தறிவுப் பகலவன்' பெரியார் வரை எத்தனையோ சான்றோர்கள் காலங்காலமாக அழுத்தமாகவும் ஆவேசமாகவும் அறிவுறுத்தியும் இன்னும் சேரிக்குள் வெளிச்சம் முழுமையாக வரவில்லை. 'இருள் மூடிக் கிடந்த மனமும் வெளுத்தது, சேரிக்கும் இன்பம் திரும்புமடி' என என்னதான் ப(ா)ட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடி இருந்தாலும் , சேரிக்கும் இன்பம் இன்னும் முழுமையாகத் திரும்பிய பாடில்லை. இதனை,

*''எத்தனைபேர் கூடி இழுத்துமென்ன
இன்னும் வரவில்லை
சேரிக்குள் தேர்'' (ப.36)*

என்னும் ஹைகூ கவிதை திட்பமாகவும் நுட்பமாகவும் பதிவு செய்துள்ளது.

ஆண்டுகள் எத்தனை கழிந்தாலும், திட்டங்கள் எத்தனை தீட்டப் பெற்றாலும், தேர்தல்கள் எத்தனை நடந்து முடிந்தாலும், மாற்றங்கள் எத்தனை நேர்ந்தாலும் இந்த நாட்டில்

செல்வர்களிடமே மேலும் மேலும் செல்வங்கள் சென்றடைகின்றன; ஏழைகள் மட்டும் என்றும் ஏழைகளாகவே இருந்து வருகிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் இதுவரை எந்த ஒரு மாற்றமும் நேரவில்லை. இதனை உணர்த்தும் ஆடலரசனின் ஹைகூ ஒன்று இதோ:

''வயல்கள் நகர்கள்
நடலாள் சித்தாள்
மாற்றமில்லை வாழ்க்கை'' (ப.37)

'விளைநிலங்கள்' எல்லாம் இன்று 'விலைநிலங்கள்' ஆகி வருகின்றன; புதிது புதிதாய்ப் புறநகர்கள் முளைத்து வருகின்றன; கட்டிடங்களும் வீடுகளும் பெருகி வருகின்றன. விளைவு? 'வயல்கள்', 'நகர்க'ளாக மாறிவிட்டன; 'நடவாள்', 'சித்தா'ளாக மாறிவிட்டாள். ஆனாலும், ஏழை எளியவர்களின் வாழ்க்கையில் மட்டும் எந்தவித மாற்றமும் நிகழவே இல்லை. ஆழமான இந்த அவலத்தை - நெஞ்சைப் பிழியும் சோகத்தை - அழகாகப் பதிவு செய்துள்ளது இக் கவிதை.

கட்சி வேறுபாடு இல்லாமல் இன்று அரசியல்வாதிகள் செய்யும் அட்டூழியங்களுக்குக் கணக்கு வழக்கே இல்லை. எரிபொருள் சிக்கன விழாவில் கலந்து கொள்ள வரும் அமைச்சர் எப்படி வருகின்றார் தெரியுமா? இதோ, கவிஞரே அக் காட்சியைப் படம் பிடித்துக் காட்டுகின்றார், காண்போம்:

''ஆயிரம் மகிழ்வுந்தில்
அமைச்சர் பயணம்
எரிபொருள் சிக்கன விழா'' (ப.48)

கலந்து கொள்ளப் போவது எரிபொருள் சிக்கன விழாவில்; பயணம் மேற்கொள்வதோ ஆயிரம் மகிழ்வுந்துகள் அணிவகுத்து வர. நல்ல முரண்!

பொதுவாகக் கவிஞர்கள் ஆணைக் கதிரவனுக்கும் பெண்ணை நிலவுக்கும் ஒப்பிடுவார்கள். இது காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் ஓர் இலக்கிய மரபு. கவிஞர் ஆடலரசனும் ‘நிலவுதான் பெண்’ என ஒப்புக் கொள்கின்றார்; தம் கருத்திற்கு அவர் கூறும் விளக்கம் தான் - காட்டும் காரணம் தான் - நம்மை ஒரு கணம் நிறுத்திச் சிந்திக்க வைக்கின்றது.

‘‘தாய் வீட்டில் வளர்ந்தாள்
புகுந்த வீட்டில் தேய்ந்தாள்
நிலவு தான் பெண்’’ (ப.46)

இக் கவிதை வெளிப்படுத்தும் பெண்ணியச் சிந்தனை உருக்கமானது; உயிரோட்டமானது. ‘வளர்ந்தாள்’, ‘தேய்ந்தாள்’ என்னும் இரு சொற்களே இன்றைய சூழலில் ஒரு பெண் தன் தாய் வீட்டிலும் புகுந்த வீட்டிலும் எதிர்கொள்ளும் வெவ்வேறான அனுபவங்களைப் புலப்படுத்தி விடுகின்றன!

‘வாலைக் குழைத்து வரும் நாய்தான் - அது, மனிதர்க்குத் தோழனடி பாப்பா’ எனப் ‘பாப்பாப் பாட்’டில் பாடுவார் கவியரசர் பாரதியார். பாரதியாரின் இவ் வரிகளுக்கு ஹைகூ வடிவம் தந்தால் எப்படி இருக்கும்? இதோ இப்படித்தான் இருக்கும்:

‘‘தங்கிப் படித்த விடுதி
எல்லாரும் அந்நியமாய்
ஓடிவரும் நாய்’’ (ப.38)

கால மாற்றத்தில் விடுதியில் தங்கிப் படிக்கும் அத்தனை மாண வர்களும் அந்நியமாய்த் தோன்றுகிறார்கள்; ஆனால் எத்தனை ஆண்டுகள் இடையே உருண்டு ஓடினாலும், நாய் மட்டும் மறவாமல் ஓடி வருகின்றது; வாலைக் குழைத்து வந்து தான் என்றுமே மனிதர்க்குத் தோழன் என்பதை நிலை நிறுத்துகின்றது.

'திருப்பதிக்கே லட்டா?', 'திருநெல்வேலிக்கே அல்வாவா?', 'பழனிக்கே பஞ்சாமிர்தமா?' என்பார்கள். அதுபோல் திருஷ்டிப் பொம்மைகளுக்கே இன்று திருஷ்டி பட்டு விட்டதாம்! அதனால் விற்கவே இல்லையாம்! கதை எப்படிப் போகிறது பார்த்தீர்களா?

''எவன் கண்பட்டது
விற்கவே இல்லை
திருஷ்டிப் பொம்மைகள்'' (ப.12)

''தலைவரின் பிறந்த நாள்
ஊரே கூடியிருந்தது
அன்னதானம்'' (ப.26)

என முரண் சுவையுடன் நாட்டு நடப்பைப் படம் பிடித்துக் காட்டும் போதும்,

''கணையாழியைக் கொடு
பத்திரமாய் வைத்திருப்பேன்
அடகுக் கடையில்'' (ப.21)

என முன்னைப் பழமையைக் கட்டுடைத்துப் பாடும் போதும்,

''சரியான பொருத்தம்
அவள் குடியேறிய ஊர்
மயிலாடு துறை'' (ப.26)

என மலரினும் மெல்லிய காதல் உணர்வைச் சித்திரிக்கும் போதும்,

''கோவிலில் கூட்டம்
தேவி தரிசனம்
நடிகை'' (ப.19)

என மக்களின் சினிமா மோகத்தை மென்மையாகச் சாடும் போதும்,

''குரோட்டன்சு இலைமேல்
வண்ணத்துப் பூச்சி
வாழ்க்கை''

என இன்றைய வாழ்க்கையை விமர்சனம் செய்யும் போதும் ஆடலரசனின் கவிப் பார்வையில் கலை நயமும் தனித் தன்மையும் சுடர் விட்டு நிற்கக் காண்கின்றோம்.

ஆறறிவு படைத்த மனிதன்; எதிரில் நாய். எங்கே என்கிறீர்களா? தெரு ஓரத்தில்தான். எதற்காக என்று கேட்கிறீர்களா? இதோ கவிஞர் தரும் விடை:

''இலையை எங்கே போட
எதிர்எதிராய்
மனிதன்.... நாய்'' (ப.7)

இறையன்பு குறிப்பிடுவது போல், ''ஹைகூ என்பது விடுகதையல்ல - சிலேடையுமில்லை. ஹைகூ என்பது புனைவு இலக்கியமல்ல- அது உணர்வு இலக்கியம'' (முகத்தில் தெளித்த சாரல், ப.42) . ஆடலரசன் ஹைகூவை வெறும் புனைவு இலக்கிய மாகப் படைக்காமல், நுண்ணிய உணர்வு இலக்கியமாகப் படைத்துக் காட்டுவதில் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற் றுள்ளார். அதற்குக் கட்டியம் கூறும் விதத்தில் 'சேரிக்குள் தேர்' தொ குப்பில் பல கவிதைகள் விளங்குகின்றன.

-புதிய காற்று, பிப்ரவரி 2007

11

ந. முத்துவின் நறுக்குகள்

“வாசகனும் கவிஞனோடு சேர்ந்து ஹைக்குவை மணந்து கொண்டு அவனுக்கு ஒரு விதத்தில் சகலையாகி விடுவதைத் தவிர வேறு வழியில்லை’.’

– தமிழன்பன்*

‘‘ரேசன் கடைக்காரருக்கு
குழந்தை பிறந்தது
எடை குறைவாய்’’ (ப.6)

என்ற ஹைகூ கவிதையின் வாயிலாக அடையாளம் காணப் பெற்றவர் ந. முத்து. கோவையைச் சார்ந்த ‘கயல்’ பதிப்பகத்தின் சார்பில் 1999- ஆம் ஆண்டில் வெளிவந்த தொகுப்பு இவருடைய ‘எடை குறைவாய்’. ‘என் கனவின் ஒரு துளி, உங்கள் கையில் தொகுப்பு...’ என்னும் சிறுகுறிப்பு, ஆழ்ந்திருக்கும் கவி உளத்தைக் காட்ட வல்லதாகும். தமக்கே உரிய இயல்பான நகைச்சுவை உணர்வோடு ‘காசு கொடுத்து கவிதைப் புத்தகம் வாங்கும் ஒவ்வொருவருக்கும்’ இந் நூலைக் காணிக்கையாக்கியுள்ளார் கவிஞர்.

தமிழ் ஹைகூ கவிதைகளுக்கே உரிய தனிப் பண்புகளான சமூக, அரசியல், பொருளாதாரப் பதிவுகளும் சாடல்களும்

---

* வாசல் ஓர வாசகம், சூரியப் பிறைகள் p.x.

இத்தொகுப்பில் நிறையக் காணப்படுகின்றன. குறிப்பாக, வரதட்சணையால் -வர(ா)த தட்சணையால் - இன்று பெண் சந்திக்க நேரும் பிரச்சினைகள் பலப்பலவாகும். திருமணப் பேச்சு வார்த்தையின்போது மணமகன், மணமகள் ஆகிய இரு வீட்டாருக்கு இடையே நிகழும் உரையாடல்களை ஓரளவு கேட்டாலே போதும், வரதட்சணைக் கொடுமையின் அனைத்துப் பரிமாணங்களையும் உணர்ந்து கொள்ளலாம். இவ் வகையில் குறிப்பிடத்தக்க இரு ஹைகூ கவிதைகள் இதோ:

''ஊரார் முன்னிலையில்
பட்டப் பகலில் கொள்ளை
நிச்சயதார்த்தம்'' (ப.12)

''அம்மி மிதித்தவளைத்
திரும்பி மிதித்தார்கள்
கிரைண்டர் வராததால்'' (ப.10)

இங்கே கடுமையான மொழியில் வரதட்சணைக் கொடுமையைச் சாடியுள்ளார் கவிஞர்.

நாட்டு நடப்பை அங்கதச் சுவையோடு அம்பலப்படுத்துவதில் ந. முத்து சிறந்து விளங்குகின்றார். பதச்சோறு ஒன்று:

''பெயர் சொன்னால் போதும்
தரம் எளிதில் விளங்கும்
சுடுகாட்டுக் கொட்டகை'' (ப.18)

அங்கிங்கு எனாதபடி எங்கும் உலா வருவது என்று ஆகி விட்ட பிறகு, ஊழலுக்குச் சுடுகாடு மட்டும் விதிவிலக்கா என்ன? சுடுகாட்டிலும் அதன் ஆட்சிதான்! நாட்டில் அவ்வப்போது

நடக்கும் அவலம் கூட ஹைகூவுக்குப் பொருள் ஆகலாம் என்பதற்கு இக் கவிதை நல்லதோர் உதாரணம் ஆகும்.

வறுமையின் கொடுமையை - கோர விளையாட்டை- புலப்படுத்தும் ஹைகூ ஒன்று வருமாறு:

''பங்களா குழந்தைக்கு
உயிருடன் பொம்மை
வேலைக்காரச் சிறுமி'' (ப.5)

'உயிருடன் பொம்மை' - கூரிய சொல்லாட்சி!

அன்றாட வாழ்வின் எளிய, சாதாரணமான நிகழ்வுகளை நுட்பமாகப் பதிவு செய்வது இன்றைய ஹைகூ கவிதைகளின் தனித்தன்மை ஆகும். ந. முத்து இவ் வகையில் படைத்துள்ள சில ஹைகூ கவிதைகள் சுவை மிக்கவை. கட்டிய வீட்டைப் பார்த்துப் பொறாமைப்பட்டது அந்தக் காலம்; இன்றோ வீட்டின் முன்னே தொங்கவிடப்பட்டிருக்கிற திருஷ்டி பொம்மையைப் பார்த்தே சிலர் பொறாமைப்படுகின்றனர். அதனை வெளிப்படுத்தும் ஒரு ஹைகூ வருமாறு:

''மிகவும்
அழகாயிருக்கிறதே
திருஷ்டி பொம்மை'' (ப.16)

'திருஷ்டி பொம்மை'க்கே 'திருஷ்டி' பட்டுவிடுகிறதாம்!

வேறு எந்த விளையாட்டிற்கும் இல்லாத செல்வாக்கு கிரிக்கெட்டுக்கு. அதுவும் இந்தியாவும் பாகிஸ்தானும் விளையாடப் போகின்றன என்றால் கேட்கவே வேண்டாம்! நாட்டுப்பற்று என்பது அங்கே தான் பொங்கித் ததும்பி வழியும்!

''நிரம்பி வழியும்
கிரிக்கெட் மைதானம்
ஒரு நாள் தேச பக்தி'' (ப.15)

என வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றுவது போல் நாசூக்காக நம்மவரின் 'ஒரு நாள் நாட்டுப் பற்றைச்' சாடுகிறார் கவிஞர்.

வழக்கம் போல் ந.முத்து முரண் அணியையும் தம் கருத்துப் புலப்பாட்டிற்குத் திறம்படப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

''வெளிநாட்டுப் பொருள்கள்
கண்காட்சி
வ.உ.சி. மைதானத்தில்'' (ப.20)

'கப்பலோட்டிய தமிழர்', 'செக்கிழுத்த செம்மல்' வ.உ.சி.யின் பெயரால் அமைந்த மைதானத்தில் வெளிநாட்டுப் பொருள்களின் கண்காட்சி - அமோக விற்பனை! என்ன முரண் பார்த்தீர்களா?

ஞாபக மறதியை நயமாகச் சித்திரிக்கும் ந.முத்துவின் ஹைகூ வருமாறு:

''மறந்தே போச்சு
மெமரி பிளஸ்
சாப்பிட'' (ப.21)

ஞாபக மறதியைப் போக்குவதற்காகச் சாப்பிட வேண்டிய 'மெமரி பிளஸ்' மாத்திரை சாப்பிடவே மறந்து போய்விட்டதாம்! நல்ல வேடிக்கை போங்கள்!

சில நேரங்களில் இயற்கை நிகழ்வுகளிலே கூட அழகிய முரண்கள் கொலு வீற்றிருப்பது உண்டு. இத்தகைய ஓர் அரிய காட்சி இதோ:

''ஓய்வெடுத்தன
பறவைகள்
உழைப்பாளர் சிலை மேல்'' (ப.22)

உழைப்பாளர் சிலை - மேலே அமர்ந்து பறவைகள் ஓய்வெடுத்தன: இயல்பான முரண்!

முரண் அணி சிறப்பாகக் கையாளப் பெற்றிருக்கும் பிறிதோர் எடுத்துக்காட்டு:

'' நீச்சலுடையில்
சோப்பு விளம்பரம்
அழுக்கானது மனசு'' (ப.23)

இன்றைய சூழலில் தொலைக்காட்சி விளம்பரங்களால் விளையும் பயனும் ஒன்று உண்டு. என்ன அது என்கிறீர்களா? இதோ, கவிஞரே கூறுகிறார், கேளுங்கள்:

''டி.வி. பார்க்கும் நேரம்
விருந்தினர் வருகை. விசாரிக்க
வராமலா போகும் விளம்பரம்'' (ப.24)

மொத்தத்தில், ந. முத்துவின் 'எடை குறைவாய்...' ஹைகூ தொகுப்பு தரத்தாலும் திறத்தாலும் நிறைவானது; இயல்பான நகைச்சுவை உணர்வும் கூரிய அங்கதச் சுவையும் ததும்பி நிற்பது.

-மனித நேயம், டிசம்பர் 2006

12

தங்கம் மூர்த்தியின் நறுக்குகள்

"மூன்றடிச் சொற்செட்டு
நேரடி அனுபவ வெளிப்பாடு
மூன்றாவதடி மின்தாக்கு"

– நெல்லை சு. முத்து*

தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் ஹைகூ கவிதைகள் குறித்துத் தனியே ஓர் ஆய்வரங்கம் நடத்தும் அளவிற்குத் தமிழ்க் கவிதை உலகில் ஹைகூவிற்குச் சிறப்பான ஓர் இடம் கிடைத்தது என்பது நல்லதோர் அறிகுறி ஆகும்; இது ஹைகூ கவிஞர்கள், கவிதை ஆர்வலர்கள், ஆய்வாளர்களின் நெஞ்சங்களிலே இன்பத் தேனைப் பாய்ச்சிய அரியதோர் நிகழ்வும் ஆகும். அதன் வாமன வடிவம், சுண்டக் காய்ச்சிய மொழி நடை, முத்தாய்ப்பான மூன்றாவது அடி, தத்துவ தரிசனம், படிமப் பாங்கு, இயற்கைப் புனைவு, அனுபவ வெளிப்பாடு, முரண் உத்திப் பயன்பாடு முதலான தனிப்பெரும் பண்புகளால் ஹைகூ கவிதை, இன்று அனைவரையும் சிக்கெனப் பிடித்து வைத்திருப்பதில் வியப்பேதும் இல்லை.

ஹைகூ கவிஞர் வரிசையில் 1994-ஆம் ஆண்டில் 'முதலில் பூத்த ரோஜா' என்னும் தலைப்பில் ஒரு தொகுப்பினை

* புத்தாயிரம் தமிழ் ஹைகூ, ப.22.

வெளியிட்டதன் வாயிலாக அறிமுகம் ஆனவர் தங்கம் மூர்த்தி. முதல் தொகுப்பினைத் தொடர்ந்து 'தங்கம் மூர்த்தி கவிதைகள்' (2004), 'பொய்யெனப் பெய்யும் மழை' (2005) என்னும் இரு தொகுப்புக்களையும் வெளியிட்டுள்ளார் தங்கம் மூர்த்தி. புதுக்கோட்டையைச் சார்ந்த அநிகா பதிப்பகம் இந்நூல்களை வெளியிட்டுள்ளது. கவிஞரே 'முதலில் பூத்த ரோஜா' என்னும் ஹைகூ கவிதைத் தொகுப்பிற்கு எழுதிய 'என்னுரை' யில் குறிப்பிடுவது போல், ''என்னை பாதித்த, கவர்ந்த, கோபமூட்டிய, அதிர்ச்சிக்குள்ளாக்கிய, இனித்த, கசந்த, விரும்பிய, விரும்பாத பலவும் கவிதைகளாக வெளி வந்திருக்கின்றன'' (தங்கம் மூர்த்தி, 'என்னுரை', ப.11). இனி, இக் கவிதைகளின் சீரும் சிறப்பும் பற்றி இங்கே சுருங்கக் காண்போம்.

இன்றைய நகர வாழ்வு மனித உணர்வுகளிலும் குடும்ப உறவுகளிலும் ஏற்படுத்தி இருக்கும் தாக்கங்கள் கலவை யானவை; வித்தியாசமானவை. அதுவும் கணவன் மனைவி இருவரும் வேலை பார்க்கும் குடும்பம் என்றால்- குறிப்பாக, அவர்கள் தனிக்குடும்பமாக வாழ்கிறார்கள் என்றால்- அக் குடும்பத்தில் எழும் சிக்கல்களுக்குக் கேட்கவே வேண்டாம். இவ் வகையில் குறிப்பிடத்தக்க தங்கம் மூர்த்தியின் ஹைகூ ஒன்று இதோ:

''ஆயாவின் மடியில்
உறங்கும் குழந்தை-
கனவில் அம்மா'' (*முதலில் பூத்த ரோஜா, ப.59*)

ஆயாவின் மடியில் உறங்கும் குழந்தை; ஆனால் அதன் கனவில் வருவதோ பத்து மாதம் சுமந்து பெற்ற அன்னை; நனவில் கிடைக்காத ஒன்று - ஆழ்மனத்தில் குடியிருக்கும் ஏக்கம்- கனவாகத் தானே வெளிப்படும்? கனவில் தானே வெளிப்படும்?

இன்றைய சூழலில் நம் நாட்டைவிட்டு விட்டு உடனடியாக ஒழிக்கப்பட வேண்டியவை இரண்டு. ஒன்று கொசு; இன்னொன்று சாதி. ஆனால், காலங்காலமாக எத்தனையோ அறிஞர்கள் தோன்றி எவ்வளவோ எடுத்துரைத்தும்- ஏன், இடித்துரைத்தும்- நம் நாட்டில் இருந்து சாதியை ஒழிக்க முடியவில்லை; எவ்வளவோ அறிவியல் கண்டுபிடிப்புகள் வந்தும் நாட்டை விட்டுக் கொசுவை விரட்டியடிக்க முடியவில்லை. இதனைத் தமக்கே உரிய பாணியில் இரு ஹைகூ கவிதைகளாகப் படைத்துள்ளார் தங்கம் மூர்த்தி. அக் கவிதைகள் இதோ:

''கொசுக்களின் தாலாட்டில்
குழந்தையின் உறக்கம்-
பிளாட் பார்ம்.''
(முதலில் பூத்த ரோஜா, ப.37)

'' கலவரத்தில்
வீடுகள் எரிந்தன-
ஃபீனிக்சாய் சாதிகள்.''
(முதலில் பூத்த ரோஜா, ப.20)

கவிஞரின் தனிப்பார்வையில் நடைபாதையில் உறங்கிக் கொண்டிருக்கும் குழந்தைக்குக் கொசுக்கள் தாலாட்டுகின்றன; கலவரத்தில் ஒட்டுமொத்தமாக வீடுகளே பற்றி எரிந்தாலும், சாதிகள் மட்டும் ஃபீனிக்சாய் மீண்டும் முளைத்து எழுகின்றன!

'விலைபோட்டு வாங்கவா முடியும் கல்வி?' என்று கேட்டார் பாவேந்தர் பாரதிதாசன். ஆனால் இன்றைய சமுதாய நிலையோ இதற்கு முரணாக, 'விலை போட்டு வாங்க வா, முடியும் கல்வி' என்றுதான் நிலவுகிறது. இதனை அம்பலப்படுத்தும் தங்கம் மூர்த்தியின் ஹைகூ வருமாறு:

''பள்ளித் தலமனைத்தும்
கோயில்கள் செய்தோம்-
உண்டியல்'' *(முதலில் பூத்த ரோஜா, ப.36)*

கல்வி இன்று வியாபாரம் ஆகிவிட்ட கொடுமை இங்கே கவி வடிவம் பெற்றுள்ளது.

'மலரினும் மெல்லிது காதல்; அதன் செவ்வி தலைப்படும்' (குறள் 1289) ஒரு சில கவிஞர்களுள் தங்கம் மூர்த்தியும் ஒருவராக- சிறந்தவராக- விளங்குகிறார். பதச் சோறு ஒன்று காண்போமா?

''துடைக்கத் துடைக்க
உன் நினைவுகள்
ஒட்டடையாய்'' *(முதலில் பூத்த ரோஜா, ப.46)*

எத்தனை முறை அடித்தாலும் ஒட்டடையை வீட்டுச் சுவரில் இருந்து முற்றிலுமாக அடித்துவிட முடியாது; துடைத்து விட முடியாது. அதுபோல் தான் காதல் நினைவுகளும் என்கிறார் கவிஞர்.

உலக அதிசயங்களின் பட்டியலில் இடம் பெறத் தக்க சிறப்பு தாஜ்மகாலுக்கு மட்டுமன்று, நம் ஊர்ச் சாலைகளுக்கும் உண்டாம். எப்படி என்கிறீர்களா? இதோ கவிஞரே கூறுகிறார். கேட்போம்:

''சிரிக்காமலே
குழி விழுகிறது
எங்களூர் சாலைகளுக்கு''

(முதலில் பூத்த ரோஜா, ப.53)

உள்ளங்கவர் காதலியின் கன்னங்களில் கூடச் சிரித்தால் தான் குழி விழும்! நம் உள்ளூர்ச் சாலைகளிலோ சிரிக்காமலே குழி விழுகிறதாம்! எவ்வளவு இயல்பான நையாண்டி பார்த்தீர்களா?

எழுத்தாளர் மாலன் கூறுவது போல், ''ஒரு கவிதை வாழ்ந்து பெற்ற அனுபவத்தைச் சொல்ல வேண்டும். மிகக் குறைந்த வார்த்தைகளில் சொல்ல வேண்டும்... அதாவது அது ஏதேனும் ஒரு செய்தியைச் சொல்லாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் அது ஒரு அனுபவத்தைச் சொல்லியாக வேண்டும்'' (ஹைகூவைப் பற்றி.., முதலில் பூத்த ரோஜா, ப.69). கவிஞரின் சொற்களில் இதோ ஒரு குழந்தைத் தொழிலாளியின் இயல்பான வாழ்க்கைப் படப்பிடிப்பு:

'' பேப்பர் பையன்
வீசியெறிந்தான்-
நாளைய வரலாறை''

(முதலில் பூத்த ரோஜா, ப.60)

ஒருவேளை இந்தச் சமூகம், பேப்பர் போடும் பையனின் வாழ்வை- அவனது நிகழ்காலத்தை அல்லது எதிர்காலத்தை வீசியெறிந்திருப்பதால், அவன் அதற்கான எதிர்வினையாக பேப்பரை வீசியெறிகிறானா? ஒரு வகையில் பார்த்தால் இது பழிக்குப் பழி தீர்க்கும் செயலா? இவ்வளவு சிந்தனை அலைகளையும் படிப்பவர் நெஞ்சில் ஒருங்கே எழும்பும் அற்புதமான ஹைகூ கவிதை இது!

வரதட்சணை, கையூட்டு போன்ற சமூக அவலங்களைக் கடுமையான நடையில் ஆவேசமாகவும் வேகமாகவும் தான் வெளிப்படுத்த வேண்டும் என்பதில்லை; அவற்றைத் தங்கம் மூர்த்தியின் பாணியில் மென்மையான மொழியில் அங்கதச் சுவையுடன் வெளிப்படுத்தவும் முயலலாம். ஓர் உதாரணம் இதோ:

''இம்முறை விண்ணப்பித்தான்
நம்பிக்கையோடு-
வசதியான மாமனார்''

(முதலில் பூத்த ரோஜா,ப.67)

இன்றைய நாட்டு நடப்பில் காணலாகும் 'கொடுக்கல்' (கையூட்டு), 'வாங்கல்' (வரதட்சணை) அவலத்தைத் தமக்கே உரிய பாணியில் மென்மையாகச் சுட்டிக்காட்டியுள்ளார் கவிஞர்.

இதே போல் மென்மையான நகைச்சுவை உணர்வும் அங்கதச் சுவையும் கைகோர்த்து நிற்கும் தங்கம் மூர்த்தியின் பிறிதொரு நயமான ஹைகூ வருமாறு:

''மாடு மேய்த்தல்
சிரமமான வேலை-
படித்து விடலாம்''

(முதலில் பூத்த ரோஜா, ப.50)

'வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்' என்பது நமக்குத் தெரிந்த பழமொழி; கொள்கை முழக்கம். கவிஞர் கூறும் புதுமொழி என்ன தெரியுமா?

''வீட்டுக்கொரு
ஓட்டு வளர்ப்போம்-
பணம் தருகிறார்கள்''

(பொய்யெனப் பெய்யும் மழை,ப.45)

இன்றைய தேர்தல் முறை பற்றிய கூர்மையான சாட்டையடி விமர்சனம் இக்கவிதை.

முத்தாய்ப்பாக, பேராசிரியர் பாலாவின் சொற்களில் சுட்ட வேண்டும் என்றால், ''எவரையும் நகலெடுக்காத தனிப்பார்வை, வாழ்வை அதன் இருளகற்றி விளக்கமுறக் காட்டும் அறிவுப் புலம். வாசிக்க இனிமை நலம் காட்டும் புதுமொழி, எளிமை, எள்ளல், தோழமை, நயம்பட உரைக்கும் விமர்சனம் ஆகியவற்றால் தமிழ் உலகு புறக்கணிக்க முடியாத புதுக்கவியாக வலம் வருகிறார் தங்கம் மூர்த்தி.''

- மனித நேயம், பிப்ரவரி 2007

13

பாரதி கனவு கண்ட 'புதிய பாப்பா'

"ஒரு நொடியில், நாம் வாசிக்கும்போது நம்மை உயர்த்தி விடுவதுதான் ஹைகூ. 'ஹைகூ' என்பது மின்னலாய் நமக்குள் ஒரு மாற்றத்தை, மறுமலர்ச்சியை ஏற்படுத்துகிற கவிதைக் கீற்று."

– இறையன்பு*

புதுச்சேரி இன்று துளிப்பாக்களின் தாயகமாக - நடு நாயகமாக - விளங்கி வருகின்றது. '20 -ஆம் நூற்றாண்டு புதுச்சேரித் துளிப்பாக்கள்' என்னும் தலைப்பில் எட்டுக் கவிஞர்களின் துளிப்பாக்கள் அண்மையில் ஒரு முழுத் தொகுப்பாக வெளி வந்திருப்பதும் இக் கருத்திற்கு அரண் ஆகும். 'புலிக்குப் பிறந்தது பூனை ஆகுமா?' என்ற பழமொழிக்கு ஏற்ப, தற்போது தமிழ்மொழியும் தந்தை தமிழ்நெஞ்சனின் அடிச்சுவட்டில் 'சிறகின் கீழ் வானம்' என்னும் தலைப்பில் ஒரு துளிப்பாத் தொகுப்பினை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். ''என் மகள் கு.அ. தமிழ் மொழி 'சிறகின் கீழ் வானம்' என்ற தலைப்பில் துளிப்பா நூல் ஒன்றைக் கொண்டு வர இருக்கிறார். துளிப்பாவில் தோய்ந்துள்ள தங்களின் அணிந்துரை தேவை, தமிழ்மொழி தமிழ்வழிக் கல்வி பயில்கிறார். அகவை 11. ஆறாம் வகுப்பு, எல்லா வகுப்பிலும் முதல் மாணவி. தமிழ்ப்

---

* ஏழாவது அறிவு, ப. 42.

பாதுகாப்புப் போராட்டம் வரை கலந்து கொண்டுள்ளார்'' என என்கெழுதகை நண்பர் புதுவை தமிழ்நெஞ்சன் மடல் வாயிலாக விடுத்திருந்த வேண்டுகோளைப் படித்ததும் என் நெஞ்சில் இன்பத் தேன் வந்து பாய்ந்தது.. ஏனெனில் புதுவை இரட்டையர்களான தமிழ்நெஞ்சனும் சீனு. தமிழ்மணியும் வெளியிட்டுள்ள 'தீவின் தாகம்' என்னும் துளிப்பாத் தொகுப்பு தமிழ்த் துளிப்பா வரலாற்றில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்க ஒரு தொகுப்பு ஆகும். 'இரவில் வாங்கினோம் விடியவே இல்லை' என்ற புதுக்கவிதைக்கு நிகராக, 'கொடி கொடுத்தீர்/ குண்டூசி தந்தீர் / சட்டை?' என்ற தமிழ் நெஞ்சனின் துளிப்பா பரவலான வரவேற்பைப் பெற்ற ஒரு துளிப்பா ஆகும். நூற்றுக்கணக்கான பொது மேடைகளிலும் இலக்கிய நிகழ்வுகளிலும் அடிக்கடி மேற்கோள் காட்டப் பெற்ற துளிப்பா அது. முத்திரை பதித்த அத்துளிப்பாவினைப் படைத்த தமிழ் நெஞ்சனின் அருமந்த புதல்வியான கு.அ. தமிழ்மொழி துளிப்பா உலகில் அடியெடுத்து வைத்திருப்பது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஓர் இன்றியமையாத நிகழ்வு ஆகும். 'பாரதி கனவு கண்ட புதுமைப் பெண்' என்பது போல, கு.அ. தமிழ்மொழி 'பாரதி கனவு கண்ட புதிய பாப்பா'வாக விளங்குவது இரட்டிப்பு மகிழ்வினை நல்குவது ஆகும்.

தமிழ்மொழியின் துளிப்பாக்களில் மோனையைப் போல் முன்னிற்பது -தொட்ட இடமெல்லாம் நம் கண்ணில் தட்டுப்படுவது- தமிழுணர்வு ஆகும். இன்றைய தமிழனின் மனப்பான்மையை - போக்கினை- நறுக்கென்று கன்னத்தைக் கிள்ளுவது போல்- தலையில் குட்டுவது போல்- எள்ளி நகையாடியுள்ள துளிப்பாக்கள் பல இத்தொகுப்பில் இடம்

பெற்றுள்ளன. இவ்வகையில் குறிப்பிடத்தக்க இரு துளிப்பாக்கள் இதோ:

''வரவேற்றது
தமிழனின் இல்லம்
'வெல்கம்'' *(ப.114)*

''ஆங்கிலத்தில்
கையெழுத்திட்டான்
தமிழன்'' *(ப. 50)*

'தமிழனின் தனிக்குணத்தை' இங்கே தனக்கே உரிய பாணியில் எள்ளி நகையாடியுள்ளார் தமிழ்மொழி.

இன்று சின்னஞ் சிறார்க்குக் கல்வி என்பது சுவையாக இல்லை; சுமையாகத்தான் உள்ளது. கற்றல் என்பது மனத்தை மகிழ்விக்கும் அனுபவமாக இல்லை; மனதை வருத்தும் அழுத்தமாகவே விளங்குகின்றது. இதனை ஒரு பாப்பாவின் நிலையில் இருந்து அருமையான துளிப்பாவாக வடித்துத் தந்துள்ளார் தமிழ்மொழி.

''ஆறுமுகனே!
பன்னிரு கைகள் வேண்டும்
வீட்டுப்பாடம்'' (ப.41)

'வீட்டுப் பாடம்' என்ற பெயரால் இன்றைய குழந்தை உலகம் அனுபவிக்கும் கொடுமையை இங்கே நடப்பியல் பாங்கில் படம்பிடித்துக் காட்டியுள்ளார் தமிழ்மொழி.

''பதப்படுத்தப்பட்ட பிணமா
உன் அன்னை?
'மம்மி''' *(ப.47)*

என்ற துளிப்பா வாயிலாகத் தமிழ்மொழி தொடுத்திருக்கும் கேள்விக் கணை கூர்மையானது; சிந்திக்கத் தூண்டுவது.

ஒரு முறை படித்தாலே படிப்பவர் உள்ளத்தில் கல்வெட்டாய்ப் பதியவல்ல துளிப்பாக்கள் பற்பல இத்தொகுப்பில் மண்டிக் கிடக்கின்றன. பதச்சோறு இதோ:

''உயிருடன் இருக்கிறார்
கல்பனா சாவ்லா
மனத்தில்'' *(ப.44)*

விண்வெளி மங்கை- வீர நங்கை- கல்பனா சாவ்லா மட்டுமல்ல. இத் துளிப்பாவைப் படைத்த தமிழ்மொழியும் நம் மனத்தில் நிலையான இடத்தைப் பெற்றுவிடுகிறார்.

''முயற்சியை
சிறகுகளாக்கு
வானம் உன் வசம்'' *(ப.83)*

படிப்பவர் மனத்தில் நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சும்- நம்பிக்கையை அழுத்தமாக விதைக்கும் - நல்ல துளிப்பா இது!

''சாதி
மலருக்குமா?
சாதி மல்லி'' *(ப.73)*

என்று சாதிக் கொடுமைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் போதும்,

''தெருவுக்கு தெரு கோயில்
காப்பாற்றவில்லை
குடந்தைத் தீ'' *(ப.88)*

என நெஞ்சைப்பிழியும் சம கால நிகழ்வைப் பதிவு செய்யும் போதும்,

''கனவில் கூட
வரவில்லை
அரசியல்காரன் திருந்துவதாய்'' (ப.48)

என இன்றைய அரசியல் அவலத்தைச் சாடும் போதும்,

''வேண்டாம்
தீபாவளி
சூழல் கேடு'' (ப.87)

என அறிவியலைப் பாடுபொருள் ஆக்கும் போதும்,

''கொய்யாப்பழம்
பறிக்கும் முன்
கடித்தது அணில்'' (ப.89)

என வாழ்வியல் அனுபவத்திற்கு ஐக்கூ வடிவம் தரும் போதும்.

''பெண்ணுரிமை மாநாட்டில்
கனலெனப் பேசினாள்
கணவனின் இசைவோடு'' (ப.109)

என அங்கதச் சுவையோடு ஆணாதிக்க மனப்பான்மையைப் புலப்படுத்தும் போதும்,

''அறிவியலில்
மூட நம்பிக்கை
நல்ல நேரத்தில் ஏவுகணை?'' (ப.98)

என நமக்குள்ளே பொதிந்திருக்கும் மூட நம்பிக்கையைச் சுட்டிக் (குத்திக்) காட்டும் போதும் தமிழ்மொழியிடம் ஒரு முதிர்ந்த - கைதேர்ந்த - கவிஞருக்கு உரிய பக்குவத்தையும் பரிமாணத்தையும் காண்கிறோம். இளங்கோ அடிகளின் மொழியிலே **'சிறுமுதுக்குறைவி'** எனத் தமிழ்மொழியைச் சுட்டி மகிழலாம் போல் தோன்றுகிறது.

'மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும் சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப் போதருமா போலே' என ஒரு சிங்கத்தின் வருகையைத் திருப்பாவையில் செம்மாந்த நடையில் அழகிய சொல்லோவியம் ஆக்குவார் ஆண்டாள் நாச்சியார். அதுபோல தமிழ்த் துளிப்பா உலகில் தமிழ்மொழியும் முதல் அடி எடுத்து வைத்துள்ளார். அவர் எதிர்காலத்தில் வாழ்விலும் படைப்புலகிலும் ஒரு தில்லையாடி வள்ளியம்மையாக - கல்பனா சாவ்லாவாக- சரோஜினி தேவியாக- முத்துலெட்சுமியாக - கியூரி அம்மையாராக- திகழ, உயர என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

-கு.அ. தமிழ்மொழியின் 'சிறகின் கீழ் வானம்' (2005)
என்ற துளிப்பா (ஐக்கூ) தொகுதிக்கு எழுதிய அணிந்துரை.

14

ஹைகூ எனப்படுவது யாதெனின்...

"ஒரு காட்சியைக் காட்டுவதோடு 'ஹைகூ'வின் வேலை முடிந்துவிடும். அதில் உள்ள அர்த்தங்களைத் தோண்டி இறைத்துக் கொள்வது வாசகன் பொறுப்பு. இந்த வகையில் வாசகனும் கவிதையில் ஒரு கூட்டுப் படைப்பாளி."

- அப்துல் ரகுமான்*

'தமிழனுக்குக் கவிநாடி நன்றாகப் பேசுகின்றது' என்பார் ரசிகமணி டி.கே.சி. அவரது கூற்றுக்கு அரணும் அணியும் சேர்க்கும் வகையில் இன்று ஹைகூ, தமிழ்க் கவிதை உலகில் பீடுநடை போட்டு வருகின்றது. 1984-ஆம் ஆண்டில் ஓவியக் கவிஞர் அமுதபாரதி 'புள்ளிப் பூக்கள்' என்னும் தம் தொகுப்பினை வெளியிட்டு ஹைகூ கவிதை வரிசையைத் தொடங்கி வைத்தார்; இந்த 22 ஆண்டுகளில் (1884-2006) நூற்றுக்கணக்கான ஹைகூ கவிதைத் தொகுப்புகள் வெளிவந்து, ஹைகூ வடிவத்திற்கு உள்ள வலிமையையும் வீச்சையும் உலகிற்குப் பறைசாற்றி உள்ளன; 'மாதம் மும்மாரி பெய்வது போல்' மாதத்திற்கு மூன்று ஹைகூ தொகுதிகளாவது இன்று வெளிவந்த வண்ணம் உள்ளன!

---

* இன்றிரவு பகலில்..., ப. 8.

வாழையடி வாழை போல் இன்று ஹைகூ கவிஞர்கள் தமிழ் கூறு நல்லுலகில் உள்வலியோடும் ஊக்கத்தோடும் உலா வந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுள் மூன்றாம் பிறை போல் நம் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் இளங்கவிஞராகக் கம்பன் மாயவன் விளங்குகின்றார்.

கவிஞர் என்ற முறையில் கம்பம் மாயவனின் ஆளுமையை நான்கு உணர்வுகள் நன்கு ஆட்டிப் படைக்கின்றன; அவரது கவிதை மொழியை அடையாளம் காட்டுகின்றன. முதலாவதாக, ‘நசையோடு நோக்கடா எங்கும் உள்ளாள், நல்லழகு வசப்பட்டால் துன்பம் இல்லை’ என்று பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிடுவது போல், எங்கும் நசையோடு நோக்கி நல்லழகு வசப்படுவது தான் ஒரு கவிஞரிடம் குடிகொண்டிருக்கும் தனிப்பெரும் பண்பு ஆகும். கம்பம் மாயவனிடம் இப்பண்பு சுடர்விட்டு நிற்பதைக் காண முடிகின்றது, உள்ளங்கவர் ஓர் உதாரணம் இதோ:

‘‘ரசிக்கச் சொல்லி வரும்
கிழிந்த கூரையினுள்
முகம் நுழைக்கும் சுரைப்பூ’’ (ப.16)

‘இல்நுழை கதிரின் துன்னணுப் புரைய’ எனத் திருவாசகத்தில் வரும் அழகிய உவமை இங்கே ஒப்புநோக்கி மகிழத்தக்கது.

‘அருட்பெருஞ்சோதி தனிப்பெருங் கருணை’ என்னும் தாரக மந்திரத்தினை உலகிற்கு வழங்கிய வள்ளலாரின் வழியில் வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடும் கருணை மனத்தைப் பெற்றிருப்பதுதான் ஒரு கவிஞரிடம் இரண்டாவதாகக் காணப் பெறும் சிறப்புப் பண்பு ஆகும். இப்பண்பும் பார்வையும் கம்பம் மாயவனின் ஹைகூ கவிதைகளில் களிநடம் புரிந்து நிற்கக்

காண்கிறோம். கயிற்றில் நடக்கும் சிறுமி-பேப்பர் பொறுக்கும் சிறுவன்- அம்மி கொத்தும் கிழவன்- விவசாயி- வெட்டியான்- தோட்டி- பால்காரன்- பாகன்- முதிர்கன்னி- மலட்டுப் பெண்- தெருப் பாடகன்- பூக்காரி என்றாற்போல் சமுதாயத்தின் அடித்தட்டைச் சார்ந்த ஏழைய எளிய மக்களின் வாழ்க்கை நிலைகளையும் உணர்வுக் கோலங்களையுமே பெரும்பாலும் தம் கவிதைகளில் பதிவு செய்துள்ளார் கவிஞர்.

மூன்றாவதாக, இன்றைய நாட்டு நடப்பை நல்ல அங்கதச் சுவையுடனும் மெல்லிய நகைச்சுவை உணர்வுடனும் படம் பிடித்துக் காட்டுவதில் வல்லவராக விளங்குகின்றார் கம்பம் மாயவன்.

''எம்.எல்.ஏ. மகன்
அடிக்கடி வெளிநடப்பு செய்தான்
கல்லூரி வகுப்பில்.'' (ப.51)

- இன்றைய நாட்டு நடப்பை அங்கதச் சுவையுடன் தோலுரித்துக் காட்டும் ஹைகூ இது!

''காவல் நிலையத்தில்
பயமில்லாமல் கன்னிப்பெண்
காணவில்லை படம்.'' (ப.18)

- படிப்பவர் முகத்தில் மெல்லிய நகைச்சுவையை வரவழைக்கும் ஹைகூ இது!

முத்தாய்ப்பாக, தாம் வாழும் காலத்திற்காகக் குரல் கொடுப்பது என்பது ஒரு கவிஞரிடம் காணப்பெறும் முனைப்பான பண்பு ஆகும். இப்பண்பிலும் சிறந்து விளங்குகிறார் கம்பம் மாயவன். இவ்வகையில் குறிப்பிடத்தக்க ஒரு ஹைகூ கவிதை இதோ:

''உயர்ந்த மலைக்குள்
தாழ்ந்த செயல்
மரம் வெட்டும் சப்தம்.'' (ப.46)

கம்பம் 'பள்ளத்தாக்'கில் வாழ்ந்து வரும் கவிஞர் மாயவன் தம் வாசகர்கள் பகுத்தறிவுச் சிந்தனையின் 'உச்சி'க்குச் செல்ல வேண்டும் என விரும்புகிறார்; கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடிப் போகவேண்டும் என்பதில் கருத்தாக இருக்கிறார். கவிஞரின் முற்போக்குப் பார்வைக்குக் கட்டியம் கூறும் இரு ஹைகூ கவிதைகள் வருமாறு:

''மழையென அழும் முதிர்கன்னி
ஊர்கூடி நடத்தியது
கழுதைக்கு மட்டும் கல்யாணம்.''(ப.27)

''காடுகளை வேட்டையாடும்
ஒரே மிருகம்
மனிதன்.'' (ப.34)

வித்தியாசமான பார்வைக்குச் சொந்தக்காரர் கம்பம் மாயவன் என்பதைக் காட்டும் ஹைகூ இது:

''வீதியில் கிடக்கிறது
ஞானம்
பழைய புத்தகக் கடை.'' (ப.30)

சங்க மொழியில் சுட்ட வேண்டும் என்றால் ஒரு கூர்மையான வாசகர் பழைய புத்தகக் கடை மீது வைத்திருக்கும் பற்று- காதல்- 'நிலத்தினும் பெரிதாக, வானினும் உயர்ந்ததாக. கடலினும் ஆழம் மிக்கதாக' இருக்கும். இதனைக் கச்சிதமான சொல்லாட்சியால் ஒரு

ஹைகூவாகச் செதுக்கிக் காட்டியுள்ளார் கவிஞர் மாயவன்.

கவிஞரின் புத்தகப் பற்றைப் பறைசாற்றும் பிறிதொரு ஹைகூவும் இங்கே மனங்கொளத்தக்கது.

''இறந்த அப்பா
இன்னும் வழிகாட்டுகிறார்
அலமாரியில் புத்தகங்கள்.'' *(ப.53)*

அறிவை வளர்ப்பது, வாழ்க்கைக்கு வழிகாட்டுவது- இவற்றோடு புத்தகங்களால் விளையும் மற்றொரு நன்மையும் உண்டு என்கிறார் கவிஞர். என்ன பெரிய நன்மை அது என்று கேட்கிறீர்களா? இதோ கவிஞரே கூறுகிறார், கேளுங்கள்:

''வேண்டாதவர் எதிரில்
தப்பிக்க வைத்தது
கையில் புத்தகம்.'' *(ப.29)*

ஹைகூ எனப்படுவது யாதெனின், சொல்லில் செதுக்குவது; சுண்டக் காய்ச்சிய மொழியால் உருவாவது. நான்கே சொற்களில் கவிஞர் மாயவன் படைத்திடும் நறுக்கான கவிதை இது:

''வெட்டப்படும் மரங்கள்
காயப்படும்
வானம்.'' *(ப.24)*

கூர்ந்து கவனித்தால், மாயவனின் படைப்புலகில் சின்னக் குழந்தையின் வருகை அடிக்கடி நிகழ்கின்றது. அர்த்த ராத்திரியில் அம்மா ரசிக்க உறங்கும் குழந்தை, பால்குடி மறக்க மறுக்கும் குழந்தை, முன்பின் தெரியாவிட்டாலும் பேருந்தில் கையசைக்கும் குழந்தை, புத்தகம் மறந்து சோற்றுத் தட்டுடன் பள்ளிக்குப் போகும்

குழந்தை, பொம்மையைத் தனித்திருக்க விட்டுப் பள்ளிக்குச் செல்லும் குழந்தை, பாதையில் நடக்கும் குழந்தை, துள்ளித் திரியும் தோட்டியின் குழந்தை, பாத்திரம் துலக்கும் வேலைக்காரி யின் தோளில் மூக்கொழுகிக் கிடக்கும் குழந்தை, அன்னையின் அடியை வாங்கிய வலியில் தன்னை மறந்து கிடக்கும் குழந்தை, மழைப்பாட்டுப் பாடும் நர்சரி குழந்தை, பள்ளி விட்டதும் ஓடி வரும் குழந்தை, பிணம் வைக்கும் நாற்காலியில் ஏறி விளையாடும் குழந்தை, கையில் புத்தகம் - கண்ணில் டி.வி. எனப் படித்தலுக்கும் பார்த்தலுக்கும் இடையில் சிக்கித் தவிக்கும் குழந்தை- இப்படி அழகழகாய், விதவிதமாய் அணிவகுத்து வரும் குழந்தைகளை மாயவனின் கவிதைகளில் ஆங்காங்கே கண்டு மகிழ்கிறோம்; மனம் நெகிழ்கிறோம். நிறைவாக ஒரு சொல்:

''விருப்பத்திற்கும் மாறாய்
ஒரு போதும் வருவதில்லை
கவிதை.'' (ப.63)

ஆம், கம்பம் மாயவனே கூறுவது போல், நல்ல கவிதை என்பது எப்போதும் அதை எழுதும் கவிஞரின் விருப்பத்திற்கு ஏற்ப ஓடி வரும்; எந்நாளும் அதை வாசிக்கும் - நேசிக்கும்- சுவாசிக்கும்- ஆர்வலரின் நெஞ்சில் கல்வெட்டாய் நிலைத்து நிற்கும். எதிர்காலத்தில் இத்தகைய உண்மை ஒளியும் உயிர்க்களையும் ததும்பி நிற்கும் கவிதைகளைக் கம்பம் மாயவன் படைக்க வேண்டும் என நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

-கம்பம் மாயவனின் 'மின்மினியின் வெளிச்சத்தில்...'
(2005) என்ற கவிதைத் தொகுதிக்கு நல்கிய அணிந்துரை.

15

வண்டமிழில் கவி பாடும் வட்டாட்சியர்

"கவிதை யெழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன், வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன் - அவனே கவி"

- பாரதியார்*

'**வை**கைவாணன்' என்ற அழகிய புனைபெயரைச் சூடிக் கொண்டிருக்கும் திரு.ப.வே.இராமசாமி, வட்டாட்சியராகப் பணியாற்றும் பொழுதே நல்ல தமிழில் எழுதி முத்திரை பதித்தவர்; கெழுதகை நண்பர் நா. முகம்மது செரீபுடன் இணைந்து 'சமூக நிழல்' என்னும் சிற்றிதழை நடத்தியவர்; நுகர்வோர் அமைப்பு, அரசு ஓய்வூதியர் சங்கம் முதலான அமைப்புக்களில் முனைப்புடன் செயற்பட்டவர்; 'மணக்காத பூக்கள்', 'ஒரே நிலா', 'அந்திமழை', 'ஆரத்தி', 'அலைகளின் மீது கவிதை நெய்து...', 'தேனடைகள்', 'மலர்கள் பேசினால்...' என்னும் ஏழு கவிதை நூல்களின் ஆசிரியர்; 'நிழல்கள்' என்னும் தலைப்பில் சிறுகதைத் தொகுப்பு ஒன்றையும் வெளியிட்டிருப்பவர்; முப்பால் போல் குழல் ஒன்று, யாழ் இரண்டு என அளவான குழந்தைச் செல்வங்களைப் பெற்று அழகாக மனையறம் பேணியவர்; பல்வேறு வானொலி, தொலைக்காட்சி மற்றும் இதழ்களில் படைப்புப் பல படைத்துத் தம் எழுத்துத் திறத்தால் இவ்

---

* பாரதியார் கட்டுரைகள், ப. 261.

வையத்தைப் பாலித்து வருபவர்; அறுபத்தெட்டு அகவையிலும் அன்னைத் தமிழுக்கு ஒல்லும் வகையெல்லாம் ஓயாது உழைப்பதில் மகிழ்ச்சியும் மன நிறைவும் காண்பவர். இப்போது நம் கைகளில் தவழும் 'கவிதையில் ஓர் கடிதம்' கவிஞர் வைகை வாணனின் எட்டாவது கவிதைப் படைப்பு ஆகும்.

'நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப் பொழுதும் சோராது இருத்தல்' எனத் தம் கொள்கை முழக்கத்தை வெளியிட்டார் கவியரசர் பாரதியார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனோ, 'புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட, போரிடும் உலகத்தை வேரொடும் சாய்ப்போம்' என அறுதியிட்டு உரைத்தார். பாரதியின் ஆளுமையிலும் பாரதிதாசனின் படைப்பிலும் ஆழ்ந்த பயிற்சியும் புலமையும் கொண்ட வைகைவாணன்,

''உயிரதனை
அமுதான
தமிழுக்கு ஈவேன்...!

உயிர்போன
பின்கூட
வாழ்ந்திருப்பேன்...!

உலகாளும்
தமிழுக்குள்
ஒளிந்திருப்பேன்...!'' (ப.11)

தமிழால்- தமிழுக்காக- தமிழையே உயிர் மூச்சாகக் கொண்டு- வாழ்ந்து வரும் வைகைவாணன் இக் கவிதைக்குத் தந்திருக்கும் தலைப்பு 'இருப்பேன்...!' என்பதாகும். 'தமிழுக்கு அணிசெய்...!',

'தமிழ் ஞானம்', 'மொழிக் கலப்பு' என இத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் கவிதைகளும் கவிஞரின் தமிழுணர்வுக்குக் சுட்டியம் கூறுவனவாகும்.

'மண் பயனுற வேண்டும்', 'விண் வசப்பட வேண்டும்', 'கண்ணை விற்றுச் சித்திரங்கள் வாங்கத் துடிக்கும் கயவர்கள்', 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்க வேண்டும்', 'அமைதிக்கு ஒற்றுமைதான் மிகப் பெரிய வலிமை, அவனிக்குச் சொல்லும் இதை பாரதியின் கவிதை!', 'தெய்வம் நீ என்றுணர்' - வைகைவாணனின் கவிதை நடையில் பாரதியின் தாக்கம் படிந்துள்ள சில இடங்கள் இவை.

பாவேந்தர் பாரதிதாசனும் வைகைவாணனின் ஆளுமையில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். 'புதுமை நிலை, உனக்கென்றால் எனக்கும் தானே?' என்னும் தலைப்பில் அமைந்த கவிதை, இவ் வகையில் நினைவுகூரத்தக்க ஒன்றாகும். இதில் கவிஞர்,

''திரைப்படத்தின் பெயர்கூடத் தமிழில் இல்லை;
தினந்தோறும் வருகின்ற செய்தித் தாள்கள்
அரைகுறையாய் ஆங்கிலத்தைக் கலந்த வண்ணம்
அருந்தமிழைச் சிதைக்காமல் வருவ தில்லை...
பூந்தமிழே இக்கொடுமை போனால் அன்றி
புதுமைநிலை உனக்கில்லை; எனக்கும் இல்லை!''

(ப.24)

என்னும் வரிகளில் தம் நெஞ்சைத் திறந்து காட்டியுள்ளார்.

'தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்' என்றாற் போல் தம் தாய்மொழியாம் தமிழ்மொழியின் புகழையும் பெருமையை

யும் பறைசாற்றுவதில் ஒரு நாளும் பின்வாங்காதவராக- ஒரு போதும் மறந்தறியாதவராக- வைகைவாணன் விளங்குகின்றார். அவர் 'உவப்பேன்...!' என்னும் தலைப்பில் பாடியிருக்கும் கவிதை இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. ''என் மொழி தாய்மொழி தமிழ்மொழி என்பதை, யானொரு கணமும் மறவேன்... மறவேன்'' என அக் கவிதையைத் தொடங்கும் கவிஞர், ''என் மொழி தாய்மொழி தமிழ் மொழி என்பதை, இலக்கண - இலக்கியச் செழுமையால் உண்வேன்...'' எனப் பெருமிதம் பொங்கத் தமிழின் இலக்கண -இலக்கியச் செழுமையைப் போற்றுகின்றார்; தொடர்ந்து, ''என் மொழி தாய்மொழி தமிழ்மொழி என்பதை, இணைய தளம் வழி ஏற்றிட விழைவேன்.....!'' எனப் பாடி முன்னைப் பழமையைப் போற்றுவதோடு நின்று விடாமல், பின்னைப் புதுமையை வரவேற்கும் மனமும் தமக்கு உண்டு என்பதை நிறுவுகின்றார். முத்தாய்ப்பாக.

''பன்மொழிப் புலமை பெற்றிடும் போதே
பிறமொழிக் கலப்பைப் பதர்எனத் தவிர்ப்பேன்!''(ப.20)

எனத் தெள்ளத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் முழங்கவும் தவறவில்லை கவிஞர். இன்னும் ஒரு படி மேலே சென்று பிறிதோர் இடத்தில்,

''நேரிடையாய்க்
கேட்கின்றேன் தாயே பழந்தமிழைச் செம்மொழியாய்
ஆக்காத பேருக்கோ வாக்கு?'' (ப.26)

என மதுரை மீனாட்சியிடமே வெளிப்படையாகக் கேட்கின்றார் கவிஞர்.

கவிஞர் வைகைவாணனின் நெஞ்சில் தமிழுணர்வுக்கு அடுத்த இடத்தைப் பிடித்திருப்பது சமூக உணர்வு ஆகும். இன்றைய நாட்டு நடப்பு பற்றியும் சமூக நிலை குறித்தும் கவிஞர் தம் கவிதைகளில் ஆழ்ந்த அக்கறையோடும் முதிர்ந்த பொறுப்போடும் பதிவு செய்துள்ளார். 'அகிலம் விழிக்கட்டும்!', 'நதிகள் இணையட்டும்!', 'உலக மயப் பேரலை!', 'புளுகுவோரைச் சாடு!', 'பகைமை நசியும்', 'ஒற்றுமையே வலிமை' முதலான கவிதைகள் இவ்வகையில் மனங்கொளத்தக்கவை.

'உலக மயம் ஆதல்' எனும் உன்மத்தப் பேரலையால் - நுகர்வுக் கலாசாரச் சீரழிவால்- கலங்கித் தவிக்கும் இன்றைய சூழலில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் இதுதான்!

''இந்தியா
வல்லரசாய் மாறுமுன்னே-எங்கள்
வயிற்றுக்குச் சோறிடுங்கள்!
தொல்லையெல்லாம் தீர்ந்திடவே-ஒரு
நல்லவழி காட்டுங்கள்!'' (ப.37)

இதே போல் இன்றைய மண் வறட்சிக்குக் கவிஞர் காட்டும் காரணமும் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. அது வருமாறு:

''அறத்தொடு நீதி
அகத்திலே ஈகை
மறந்ததால்
வாடுவது மண்..!'' (ப.38)

மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதா கிருஷ்ணன், இந்நாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஆ.ப.ஜெ.

அப்துல் கலாம், மாவீரன் பகத்சிங், கவிஞர் மீரா, பேராசிரியர் நா. தர்மராஜன் ஆகிய பெருமக்கள் மீது வைகைவாணன் கொண்டிருக்கும் மதிப்பைச் சங்கத் தமிழ் நடையில் சுட்ட வேண்டும் என்றால் 'நிலத்தினும் பெரிது, வானினும் உயர்ந்தது, கடலினும் ஆழம் மிக்கது' எனலாம். 'ஆசிரியர் ஒருவர் அரசின் தலைவராய், ஆனதன் பெருமை அவனிக்கு உரைத்தவர்' என்பது 'தத்துவ மேதை' இராதாகிருஷ்ணனுக்குக் கவிஞர் சூட்டியுள்ள புகழாரம். 'அணுவியல் மேதை அப்துல் கலாம்' என்னும் கவிதை பாரத மணித்திரு நாட்டின் இன்றைய குடியரசுத் தலைவரைப் பற்றிய அழகிய சொற்சித்திரம் 'அன்னைத் தமிழ் பேசும் அணுசக்தி விஞ்ஞானி' எனப் பிறிதொரு கவிதையிலும் டாக்டர் அப்துல் கலாமைப் போற்றுகின்றார் கவிஞர். கவிஞரின் நோக்கில் வீரன் பகத்சிங் 'விடுதலை வேள்வித் தீயின் வார்ப்படம்!'

''ஓ...
மாவீரனே.... பகத்சிங்!
இந்த மண்ணில் வாழ்ந்த காலம்
வெறும்
இருபத்தி நான்கு
ஆண்டுகள் மட்டுமே...!
ஆனால்
எத்தனையோ கோடி
இதயங்களில் எல்லாம்
நீங்காமல் நிலைத்து விட்டாய்!'' (ப.89)

என்னும் வைர வரிகளால் கவிஞர் பஞ்சாப் சிங்கம் பகத்சிங்கைப் போற்றியுள்ளார். இன்றைய இளைய தலைமுறையினரின் நெஞ்சங்களில் கல்வெட்டாய்ப் பதிய

வேண்டிய கருத்தாழம் மிக்க கவிதை இது. 'வாசிப்பு மீது நம்மை நேசிக்க வைத்த' கவிஞர் மீரா குறித்து வைகைவாணன் பாடியுள்ள இரு கவிதைகளும் உயிரோட்டமும் உருக்கமும் மிக்கவையாக விளங்குகின்றன.

''வலது மணிக்கட்டில்
கடிகாரம் பார்க்கும்
இடதுசாரி என்றேநீ
எல்லார்க்கும் காட்டினையே'' (ப.94)

- படிப்பவர் மனக்கண் முன்னே கவிஞர் மீராவைக் கொண்டு வந்து நிறுத்த வல்ல அழகிய வரிகள் இவை.

'அன்னைக்கு இட்ட தீ' குறித்து அல்லற்பட்டு ஆற்றாது அழுது பட்டினத்தார் பாடியது போல் வைகைவாணனும்,

''கண்ணிமைக்கும் நேரத்தில்
காட்டுப்பசி தீர
அண்ணன் உடலை
'புதுக்கவிதைப் பொன்னுடலை'
தின்று முடித்ததே
தீ...'' (ப.96)

என்று 'மீராவைச் சுட்ட தீ'யைப் பற்றி நெஞ்சுருகிப் பாடியுள்ளார். பாரதப் பிரதமர் நேருவைக் குறித்துக் கவிஞர் கண்ணதாசன் பாடியிருக்கும் கையறுநிலைக் கவிதைக்கு இணையாக இக் கவிதை விளங்குகின்றது எனலாம்.

சிறந்த கவிதையின் இலக்கணம் சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் (Best words in the best order) கையாளுவது ஆகும். இக் கலையும் வைகைவாணனுக்குக் கை வந்ததாக உள்ளது.

''நீ
சொற்பதம் புதுக்கிடும்
புத்தகமோ...? எனைச்
சொக்கிடச் செய்த
வித்தகமோ....?''

-மலரின் மெல்லிய காதலி பற்றிய கவிஞரின் சொற் சித்திரம் இது! பிறிதொரு கவிதையில் 'நச்'சென்ற மொழியில் 'சூடிதாரில் வரும் நிலா' என்று கன்னிப் பெண்ணைக் கவினுறச் சுட்டுகின்றார் கவிஞர்.

''கவிக்கோலம் போடாத கற்பனைகள் இல்லை;
கவிதைக்குள் சிக்காத இலக்கணங்கள் இல்லை;
சுவைக்காத இலக்கியங்கள் உயிர்வாழ்வ தில்லை;
சொக்காத இசைப்பாடல் செவியேற்ப தில்லை''

எனக் கவிதை இலக்கியம் குறித்துக் கவிஞர் கூறியிருப்பது முற்றிலும் உண்மை; முக்காலும் உண்மை!

'வைகறை விடியல்', 'தேடலின் விடியல்', 'காதலின் விடியல்', 'தாய்மையின் விடியல்', 'சுதந்திர விடியல்', 'சிந்தனை விடியல்', 'உறவின் விடியல்' என்றாற் போல் கவிஞர் தம் கவிதையில் தீட்டியுள்ள விடியல்கள் பலவாகும். இக் கவிதையைப் படித்து முடித்ததும் நம் நெஞ்சில் எழும் உணர்வு 'விடியல் எத்தனை விடியல்!' என்பதுதான்!

கவிஞரின் கருத்தில் 'மரங்கள் - மங்கல வரங்கள்' ஆகும். பேராசிரியர் நா. தர்மராஜன் மார்க்சிய நோக்கில் ஷேக்ஸ்பியரைத் தரிசித்தவர் ஆவார்.

இலக்கிய வகைகளில்- வடிவங்களில் - கடிதத்திற்கு என்று தனிப்பட்ட ஓர் ஈர்ப்பு உண்டு; பயில்வார் நெஞ்சை அள்ளும் ஆற்றல் கடிதத்திற்கு நிரம்ப உண்டு. முழுக்க முழுக்கக் கடித வடிவில் எழுதப் பெற்ற புதினங்களும் சிறுகதைகளும் கவிதைகளும் இக் கருத்தை உறுதி செய்யும். 'நான் அனுப்புவது கடிதம் அல்ல- உள்ளம், அதில் உள்ளதெல்லாம் எழுத்தும் அல்ல- எண்ணம்' எனத் தொடங்கும் பழைய திரைப்பாடலும் இவ் வகையில் மனங்கொளத் தக்கதாகும். வைகைவாணன் 'கவிதையில் ஓர் கடிதம்...!' என்னும் தலைப்பில் ஐந்து அருமையான வெண்பாக்களை இயற்றியுள்ளார். பதச்சோறாக, ஓர் அழகிய கவிதை இதோ:

''கள்ளம் கபடின்றிப் பாசப் பிணைப்போடே
உள்ளம் கவரவரும் ஓர்மடலோ-தெள்ளுதமிழ்ச்
சொற்கொண்டு நெய்திட்டால் தேடிப் படிக்கையில்
கற்கண்டு போலினிக்கும் காண்.'' (ப.12)

காகம் கரைந்தால் வீட்டிற்கு விருந்து வருகிறதோ என்னவோ, கடிதம் வர வேண்டும் என விரும்புகின்றார் கவிஞர்; 'கடிதங்கள் வாராக்கால் கண்கலங்கிப் போவேன்' என்னும் கவிஞரின் கூற்று அவரது உள்ளத்தில் கடிதம் பெற்றிருக்கும் தனியிடத்தைப் புலப்படுத்துவதாகும். அவரைப் பொறுத்த வரையில், 'தாகம் எடுத்தவுடன் தண்ணீர் குடிப்பது போலாம், படித்தவுடன் போடும் பதில்.'

'என் நினைவில் வளரும் ஞாபகங்கள்...!', 'பிறந்த ஊருக்கு ஒரு திறந்த மடல்...' என்னும் இரு கவிதைகளையும் கவிஞர் தன்-வரலாற்றுப் பாங்கில் யாத்துள்ளார். இதில் முன்னைய கவிதை,

புதையலைப் போலக் கவிஞரின் நெஞ்சில் புதைந்து கிடக்கும் பழைய- புதிய-இனிய- எளிய- பசுமையான நினைவுகளின் தொகுப்பு. இக் கவிதையில் இடம்பெற்றுள்ள ‘முந்திய நினைவு முடிச்சுகள் அவிழ்ந்ததும்’ என்பது கவித்துவம் மணக்கும் அடி ஆகும். நேயம் வழியும் நெஞ்சில் இருந்து தமது பிறந்த ஊருக்குக் கவிதை வடிவில் எழுதிய ஒரு திறந்த மடலில்,

‘‘தாயாய்ப் பிள்ளையாய்ப் பழகிய மக்கள்
காயாய்ச் சினந்து கடுகடுத் திருத்தல்
தேவைதானா? தெளிவு பெறுவீர்...’’ (ப.56)

என்று ஊர் மக்களுக்கு மாசிலா அன்புடன் வேண்டுகோள் விடுத்துள்ளார் கவிஞர்.

முத்தாய்ப்பாக, கவிஞரின் மொழியிலேயே ‘கற்கண்டு போல் இனிக்கும் சொற்கொண்டு’ கவிஞரை இங்ஙனம் யான் வாழ்த்துகின்றேன். ‘சீர்த்த மதி படைத்த செம்மாந்த நற்கவிஞர்’ வைகைவாணன் எதிர்காலத்தில் தமிழுக்கு அரணாகவும் அணியாகவும் திகழ வல்ல நூல்கள் பலவற்றைப் படைக்க வேண்டும்; சிறப்பான விருதுகளும் சீரிய பரிசுகளும் அவரைச் சென்று சேர வேண்டும்.

-வைகைவாணனின் ‘கவிதையில் ஓர் கடிதம்’ (2005)
என்னும் தொகுப்பிற்கு எழுதிய அணிந்துரை.

16

காதலுக்கு மரியாதை வாழ்வில் உயர்வு

"காதலென்பது ஒரு மகா யக்ஞம். அது முனிவர்களின் தவத்தை விடவும் புனிதமானது. சாதிகளற்ற சமுதாயம் என்றாவது ஒருநாள் காதலினால் மட்டுமே சாத்தியம் ஆகும்."

- தமிழருவி மணியன்*

''காதலினால் மானுடர்க்குக் கலவி யுண்டாம்;
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்;
காதலினால் மானுடர்க்குக் கவிதை யுண்டாம்;
கான முண்டாம்; சிற்ப முதற் கலைக ளுண்டாம்;
ஆதலினாற் காதல் செய்வீர், உலகத் தீரே
அஃதன்றோ இவ்வுலகத் தலைமை யின்பம்;
காதலினாற் சாகாம லிருத்தல் கூடும்;
கவலை போம், அதனாலே மரணம் பொய்யாம்''

(பாரதியார் கவிதைகள், ப.253)

என்று காதலின் புகழ் பாடினார் கவியரசர் பாரதியார். அன்றைய கண்ணபிரான் காலம் முதல் இன்றைய கணினி காலம் வரை மானுடர் அனைவரையும் தன் மந்திர வலிமையால் கட்டிப் போட்டு வைத்திருப்பது காதல். மலரினும் மெல்லிய இந்த உணர்வுக்கு

* ஊருக்கு நல்லது சொல்வேன்!, ப. 159.

உள்ள ஆற்றலோ மலையினும் மாணப் பெரிது ஆகும். இதனை நன்கு உணர்ந்ததாலேயே ஆலங்குடி சோமுவும் தம் புகழ் பெற்ற திரைப்படப் பாடல் ஒன்றில்,

''காதல் என்பது தேன்கூடு அதைக்
கட்டுவதென்பது பெரும்பாடு
காலம் நினைத்தால் கைகூடும் அது
கனவாய்ப் போனால் மனம் வாடும்''

என்று அழகாகவும் அழுத்தமாகவும் பாடியுள்ளார்.

தமிழ் கூறு நல்லுலகிற்கு ஒரு நல்ல ஹைகூ கவிஞராக அறிமுகம் ஆகியுள்ள இரா. இரவி தற்போது மீரா (கனவுகள் +கற்பனைகள்= காகிதங்கள்), மு. மேத்தா (கண்ணீர்ப் பூக்கள்) ஆகிய கவிஞர்களின் வரிசையில் சேர்ந்து காதலைப் பாடுபொருளாக எடுத்துக் கொண்டுள்ளார். 'காதலில் வெற்றி பெற்றவர்கள் சிலர். காதலில் தோல்வியடைந்தவர்கள் பலர். காதல் தோல்விக்காகத் தாடி வளர்ப்பது, தண்ணி அடிப்பது, தற்கொலை செய்து கொள்வது முடத்தனம். காதலிப்பவர்கள் எல்லோரும் காதலில் தோற்று விடுங்கள் என்று சொல்லவில்லை. ஒரு வேளை தோல்வியடைந்த வர்கள் விரக்தியில் மனம் துவளாமல் அந்த இனிய நினைவுகளுடன் தன்னம்பிக்கையோடு உழைத்து வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக வடித்த நூல் இது' (ப.3) என்று தம் நூல் உருவாக்கத்திற்கான காரணத்தையும் கவிஞரே முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழுக்குக் கதி இருவர்: கம்பரும், திருவள்ளுவரும், தமிழனுக்குக் கரு இரண்டு: கடவுளும், காதலும். இந்த இரண்டையும் தமக்கே உரிய பாங்கில் ஒரு கவிதையில் நயமாக முடிச்சுப் போட்டுள்ளார் இரவி. அந்தக் கவிதை இதோ:

''என்னவளே
கடவுள் உண்டு என்று நீ பேச
கடவுள் இல்லை என்று நான் பேச
இவ்வுரையே நம் காதலுக்கு
தொடக்கவுரையானது.'' (ப.57)

கடவுள் உண்டு அல்லது இல்லை என்ற வாதம் ஒரு முடிவுக்கு வந்ததோ இல்லையோ, இவ்வுரையாடலால் இருவருக்கும் இடையே காதல் உதயம் ஆனது. இது உண்மை, வெறும் வார்த்தை இல்லை.

இரவியின் காதல் கவிதைகளில் இடையிடையே வள்ளுவரும் தலைகாட்டுகிறார்; கவிஞரின் அன்பான அழைப்பினை ஏற்று கூப்பிட்ட குரலுக்கு வந்து உற்றுழி உதவுகிறார்; உறுபொருள் சேர்க்கிறார். பதச்சோறு வருமாறு.

''என்னவளே
பிறருக்குத் தீங்கு இல்லாத
பொய்யும் மெய்யென்றார் வள்ளுவர்
என்னை நேசிப்பதாய்
ஒரு பொய் சொல்
உந்தன் ஒரு பொய்
எந்தன் உயிர் வளர்க்கும்.'' (ப.55)

பொய் உயிர் வளர்க்கும் பொய்யாக இங்கே புதுப்பரிமாணம் எடுத்திருப்பதைப் பார்த்தீர்களா?

'பதினெட்டையும் பதினாறையும் கூட்டிச் சொல்வது பாடக் கணக்கு. பதினெட்டு பதினாறைக் கூட்டிச் செல்வது காதல்

கணக்கு' என்பார்கள். இதேபோல் கவிஞர் இரவியும் காதலையும் கணக்கையும் இணைத்து ஒரு சுவையான கவிதை படைத்துள்ளார். அவரது பார்வையில்,

''ஒன்றும் ஒன்றும் இரண்டு இது பாடக் கணக்கு
ஒன்றும் ஒன்றும் ஒன்று இது காதல் கணக்கு'' (ப.52)

கவிஞரின் கற்பனையில் ஒரு பட்டிமன்றம் நடக்கின்றது. தலைப்பு பட்டாம்பூச்சி அழகா, காதலி அழகா? பேசும் பட்டாம்பூச்சியான காதலி தான் அழகு என தீர்ப்புக் கூறுகின்றார் கவிஞர் (ப.15).

'மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன் செவ்வி தலைப் படுவர்' (திருக்குறள், 1289) என்பார் வள்ளுவர். கவிஞர் இரா. இரவி இத்தொகுப்பில் பல இடங்களில் மலரினும் மெல்லிய காதலின் செவ்வியைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். பயில்வார் நெஞ்சை அள்ளும் ஓர் உதாரணம் காண்போமா?

''என்னவளே
எனது பெயர் சொல்லி
யாராவது அழைத்தால்
தாமதமாகத் தான்
கவனிக்கிறேன்.
உனது பெயரை
யாராவது அழைத்தால்
உடனே கவனிக்கிறேன்.'' (ப.40)

காதல் உலகிற்கே உரிய உடைமை உணர்வினை இங்கே கச்சிதமாகப் பதிவு செய்துள்ளார் கவிஞர்.

''சந்திக்காத நாட்கள் உண்டு
சிந்திக்காத நாட்கள் இல்லை'' (ப.37)

''சூரியனை மலர்விக்கும்
சூரியன் நீ'' (ப.11)

''பகலிலும் உலா வரும்
பரவச நிலாநீ'' (ப.42)

-காதல் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடும் இரவியின் கவிதைத் திறத்திற்குக் கட்டியம் கூறும் வரிகள் இவை.

ஒரே நாளில் காலையில் இருந்து இரவுக்குள் எழுதிய சாதனைக் கவிதைகளின் தொகுப்பான இந்நூலினைக் காதலில் தோற்றவர்களுக்குக் காணிக்கையாக்கியுள்ளார் கவிஞர். 'ஆதலினால் காதல் செய்வீர், உலகத்தீரே' என அறைகூவலும் அழைப்பும் விடுத்த பாரதியின் சார்பில் நண்பர் இரவிக்கு ஓர் அன்பான வினாவினை முன்வைக்கின்றேன்.

'காதலில் தோற்கலாம், காதல் தோற்காதல்லவா?' ஆம், உண்மையான காதலுக்கு என்றும் தோல்வி இல்லை,வெற்றியே உண்டு. கவிஞர் வைரமுத்து கூறுவது போல் 'இளைய தலைமுறையே, நீ காதலில் தோல்வியுற்றுக் கவிதை எழுத வேண்டா, காதலில் வெற்றி பெற்று நல்ல வண்ணம் வாழ்ந்து காட்டு'. கவிஞர் இரவி வழிமொழிவது போல் 'காதல் தோல்விக்குத் தாடி வளர்க்காது திறமை வளர்த்து, வாழ்வில் உயர்ந்து காட்டி காதலுக்கு மரியாதை செய்!'

-இரா.இரவியின் 'என்னவள்'(2005) என்ற கவிதைத் தொகுப்பிற்கு எழுதிய அணிந்துரை.

17

கவிதை ஆற்றுப்படை

"பக்கம் பக்கமாய்
வளர்வதல்ல கவிதை
இதயத்தின்
பக்கம் வருவதே கவிதை"

- ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்*

''உள்ளத்தில் உள்ளது கவிதை
இன்பம் உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் உண்மை
தெரிந்து உரைப்பது கவிதை''

எனக் கவிதைக்கு இலக்கணம் வகுப்பார் கவிமணி. இளவல் இல.செந்தூர் பாண்டியோ, ''கவிதை என்பது சொல்ல வருகின்ற விசயம் முழுவதையும் சொல்லாமல், அதன் பொருளை வாசகன் அறியும் வகையில் சிலவற்றை மறைத்துத் தருவது எனலாம்'' (ப.15) எனக் கவிதைக்கு நல்லதொரு விளக்கம் தருகின்றார். அவரது நோக்கில் 'ஒரு செய்தியை நேரடியாகச் சொன்னால் அது உரைநடை. அதே செய்தியைச் சுருக்கிச் சுவைபடச் சொல்லி, அதன் பொருளை வாசகனின் சிந்தனைக்கு விட்டுவிடுவது கவிதை' (ப.15) ஆகும்.

---

* கவிதை மின்னல்கள், ப. 81.

'...ஆதலினால் காதல் செய்வீர்' என இளைய பாரதத்திற்கு அறை கூவல் விடுத்தார் 'பாட்டுக்கொரு புலவர்' பாரதியார். இளவல் இல.செந்தூர்பாண்டியோ '...ஆதலினால் கவிதை செய்வீர்' எனக் கவிதை ஆர்வலர் எல்லோருக்கும் அழைப்பு விடுக்கின்றார்; கவிதை எழுதுவது என்பது கடவுளிடம் வரம் பெற்ற யாரோ ஒரு சிலரால் மட்டுமே முடியும் என்ற கூற்றினை முற்றிலும் மறுத்து, கவிதை எழுதுவது என்பது எல்லோராலும் முடியக்கூடிய ஒன்றே எனத் தக்க உதாரணங்களுடன் இந்நூல் முழுவதும் நிறுவிக் காட்டுகின்றார். முன்பு பைந்தமிழ்க் காவலர் அ.கி.பரந்தாமனார் 'கவிஞராக' என்னும் தலைப்பில் ஓர்அரிய நூலினை எழுதி இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டியது போல் இப்போது இல.செந்தூர்பாண்டி கவிதை எழுதுவது எப்படி என இளையோர்க்கு வழிகாட்டுகின்றார்.

பதச் சோறு ஒன்று இதோ:

மகளிர் கல்லூரிக்கு வரும் மாணவிகளைப் பார்க்கும் பொழுது உள்ளம் மகிழ்ச்சி அடைகிறது. இது உணர்வின் வெளிப்பாடு. இவ்வுணர்வினைக் கவிதையாக்குவது எப்படி?

மகளிர் கல்லூரி

''தினசரி
பூக்கும்
குறிஞ்சிப் பூக்கள்'' *(ப.17)*

என்று எழுதலாம் என்கிறார் செந்தூர்பாண்டி. இதில் ஏன் குறிஞ்சிப் பூக்கள் என்று சொல்லப்படுகின்றது என்பதனையும் அவரே வாசகருக்குத் தெளிவுபடுத்துகிறார். அவர் தரும் நயமான விளக்கம் வருமாறு:

''குறிஞ்சிப்பூ பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் அபூர்வத் தன்மையுடையது. இந்த அபூர்வத் தன்மை கொண்ட பூவினைத் தினந்தோறும் பூக்கும் நிகழ்வாக மகளிர் கல்லூரி உவமை செய்யப்படும்பொழுது அது வாசகனுக்கு ஒரு சிலிர்ப்பை உண்டு பண்ணும்.'' இங்கே ''என்ன உங்களுக்கும் சிலிர்ப்பு உண்டாகிறதா?'' (ப.17)என உரிமையோடு வாசகர்களாகிய நம்மிடம் கேட்டவாறே உயிரோட்டமாக எழுதிச் செல்கின்றார் செந்தூர்பாண்டி.

இயற்கையான நிகழ்வுகளிலிருந்து கவிதைகளை ஆக்குதல், சொந்தக் கருத்துக்களைக் கவிதைகளாக ஆக்குதல், ஏற்கனவே வழக்கத்தில் இருந்து வருகின்ற சொல் வடிவங்களில் இருந்து கவிதைகளை ஆக்குதல் எனக் கவிதையாக்க உத்திகளை நண்பர் செந்தூர்பாண்டி இந்நூலில் மூன்றாகப் பகுத்திருப்பது பொருத்தமாக உள்ளது. இவற்றைத் தக்க சான்றுகளுடன் அவர் விளக்கிச் சென்றிருக்கும் பாங்கும் எளிமையாக உள்ளது. இவ் வகையில் நண்பர் செந்தூர்பாண்டியின் கைவண்ணம் பளிச்சிடும் ஓர் இடம் இதோ:

பொதுவாக யாராலும் விரும்பப்படாதது கள்ளிப்பூ. ஆனால் ஒரு காதலன் அதனை மனமார விரும்புகின்றான். அதன் காரணம் என்ன என்பதை எப்படிக் கவிதையாக்கலாம்? செந்தூர்பாண்டி யின் சொற்களிலேயே அதைக் காண்போமா?

பார்வை

''உன்
தோட்டத்துக் கள்ளிப்பூக் கூட
அழகாயிருக்கிறது

தண்ணீர் விடுவது
நீயாக இருப்பதால்!'' (ப.28)

'கருப்பை' என்பதைக் கவிதை மொழியில் எப்படிச் சுட்டலாம்?'

''அனைவருக்கும் கிடைக்கும்
பத்து மாத
முதல் வகுப்புச் சிறை!'' (ப.29)

என்பது செந்தூர்பாண்டி படைத்துத் தந்திருக்கும் ஓர் அழகிய சொல்லோவியம்.

பாவேந்தர் பாரதிதாசனின் அடிச்சுவட்டில், புதியதோர் உலகம் செய்ய வேண்டும், கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்க்க வேண்டும் என நினைப்பவர்கள் எப்படிக் கவிதை வடிப்பார்கள்? 'சாதீ' என்ற தலைப்பில் செந்தூர்பாண்டி படைத்துத் தந்திருக்கும் கவிதை ஒன்று இதற்குச் சரியான எடுத்துக்காட்டு ஆகும். அக்கவிதையில் இருந்து முத்தாய்ப்பான சில வரிகள் வருமாறு:

''சாதிக்க வேண்டும் - நண்பா
சாதிக்க வேண்டும்...
நாம் சாதிப்பதற்கு
ஏன் சாதி வேண்டும்?'' (ப.37)

'தீயினும் அஞ்சப்படும்' என்றாற் போல் சாதி, 'தீயினும் அஞ்சப்படவேண்டிய ஒன்று' என்பதைச் சுட்டும் வகையிலும், அதனைச் சுட்டுப் பொசுக்க வேண்டியது சமூக உணர்வுள்ள ஒவ்வொரு தமிழனுடைய தலையாய கடமை என்பதை

உணர்த்தும் நோக்கிலும் 'சாதீ' என இக்கவிதைக்குத் தலைப்பிடப் பெற்றிருப்பது நயமானதாகும்.

கவிதையாக்க நெறிகளுள் ஒன்று குறிப்பிடத்தக்க உலக நிகழ்வுகளைக் கருவாகக் கொண்டு கவிதை படைப்பது. இவ்வகையில் 1999 - ஆம் ஆண்டில் நிகழ்ந்த - இந்தியனை இனங் காணச் செய்த - பகைவனைப் பதறி ஓடச் செய்த- கார்கில் போரினை மையமாக வைத்து 'இவன்' என்னும் தலைப்பில் ஓர் அருமையான கவிதையினைப் படைத்துள்ளார் செந்தூர்பாண்டி. 'சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்' என்னும் பழந்தமிழ் அகப்பாடல் மரபினை மனத்தில் கொண்டு இக்கவிதைக்கு 'இவன்' எனப் பெயர் சூட்டியிருப்பது அருமையிலும் அருமை! இக்கவிதையின் முடிவில்,

''சாவுக் கணைகள் தொடுத்த - 'இவன்'
பாரதத்தின் வீர வித்து
பாரத அன்னையின் கழுத்தில்
என்றும்
சுடர் முத்து!'' (ப.50)

என வரும் வரிகள் முத்தாய்ப்பானவை, படிப்பவர் நெஞ்சில் கல்வெட்டாய்ப் பதியும் பான்மை பெற்றவை.

'வாமனனை வென்றவன்' என்னும் கவிதையில்,

''வான்புகழ் வள்ளுவன்
வாமனனை வென்றவன் - ஆம்
இரண்டடிகளில்
இவ்வுலகையே அளந்தவன்'' (ப.51)

எனச் செந்தூர்பாண்டி வள்ளுவருக்குச் சூட்டியிருக்கும் புகழாரம் புதுவது; வித்தியாசமானது.

வாமனன் மூன்றடியை வேண்டினான்; 'முப்பால்' படைத்த வள்ளுவரோ இரண்டே அடிகளில் - ஏழே ஏழு சீர்களில் - இவ்வுலகையே அளந்து காட்டியுள்ளார்.

வல்லவன் கையில் சிறுபுல்லும் வலிமை மிக்க கருவியாகப் பயன்படுவது போல் ஒரு தேர்ந்த கவிஞர், எதையும் கவிதைப் பொருள் ஆக்கலாம்; எங்கிருந்தும் கவிதைக்கான தூண்டுதலைப் பெறலாம். ஓர் எடுத்துக்காட்டு: 'நாமே குழந்தை, நமக்கேன் குழந்தை' என்பது மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அரசு கொண்டு வந்த ஒரு பிரச்சார வாசகம். இதைப் பயன்படுத்தி - காதலிக்குச் சாதகமாகச் சற்றே மாற்றி,

''நீயே கவிதை
உனக்கேன் கவிதை?'' (ப.55)

என்ற அமைப்பில் கவிதை படைக்கலாம் என வழிகாட்டுகின்றார் செந்தூர்பாண்டி.

எளிய நடையில் ஆங்காங்கே வாசகரை முன்னிலைப் படுத்தி நண்பர் இல. செந்தூர்பாண்டி இந்நூலை எழுதிச் சென்றிருக்கும் பாங்கு போற்றத்தக்கதாகும். ஆசிரியரே குறிப்பிடுவது போல் 'நம்மால் கவிதை எழுத முடியுமா?' எனத் தயங்கியும் நாணியும் நிற்கும் இளைய தலைமுறையினருக்கு இந்நூல் ஓர் ஆற்றுப்படையாக - கலங்கரை விளக்கமாக - திகழ்கின்றது.

முதல் நூலையே முத்திரை பதிக்கும் முதல் தரமான நூலாகப் படைத்துத் தந்தமைக்காக இனிய இளவல் இல. செந்தூர் பாண்டியை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

-இல. செந்தூர்பாண்டியின் '...ஆதலினால் கவிதை செய்வீர்' (2006) என்ற நூலுக்கு அளித்த அணிந்துரை.

18

மரணத்திற்கு மரியாதை செய்யும் கவிஞர்

"தமிழில் 'இறத்தல்' என்றால் 'கடத்தல்' என்று பொருள். அதாவது இறப்பவன் உடல் வாழ்க்கையைக் கடந்து செல்கிறான் என்று பொருள். எனவே உண்மையில் நமக்கு மரணம் என்பது இல்லை'.'

- அப்துல் ரகுமான்*

''வெற்றியாளர்கள் என்போர் வித்தியாசமான காரியங்களைச் செய்பவர் அல்லர்; வித்தியாசமான முறையில் காரியங்களைச் செய்வோரே வெற்றியாளர்கள் ஆவர்'' (Winners don't do different things; they do things differently) என்பார் அறிஞர் ஷிவ் கேரா (Shiv Khera). அவரது கருத்திற்கு ஏற்ப,'... மரணம் வரை' என்ற தலைப்பே கெழுதகை நண்பர்ஆ. திருநாவுக்கரசன் வித்தியாசமான சிந்தனைக்குச் சொந்தக்காரர் என்பதற்குக் கட்டியம் கூறி விடுகின்றது. 'வாழ்க்கை' என்னும் முதல் கவிதையும் இக் கருத்தினை உறுதிப்படுத்துகின்றது.

''வாழ்க்கை
ஒரு அற்புதமான இனிப்பு
நீ மட்டும்
சர்க்கரை நோயாளியாய் இராதே'' (ப.19)

* இது சிறகுகளின் நேரம், ப. 219.

என இதமாகவும் பதமாகவும் வாசகருக்கு வேண்டுகோள் விடுக்கின்றார் கவிஞர்.

''வாழ்க்கை கொட்டிக் கிடக்குது
வாரி எடுக்க வாருங்களேன்!'' (ப.19)

என்னும் கவிஞரின் அன்பான அறைகூவலும் இங்கே மனங்கொள்ளத் தக்கதாகும். மேலும், 'வாழ்க்கை ஒரு குளம் போல', 'வாழ்க்கை ஒரு கண்ணாடிக் குவளை போல', 'வாழ்க்கை ஒரு வேட்டை நாய் போல' என அழகிய உவமை வடிவில் தொடங்கிக் கவிஞர் தம் கருத்துக்களை நிரந்து, இனிது கூறிச் சென்றிருக்கும் பாங்கு அருமையிலும் அருமை.

'வாழ்க்கை'யோடு தொடங்கி இருக்கும் இத்தொகுப்பு 'மரணம்' என்னும் கவிதையோடு நிறைவு பெறுவது நெஞ்சை அள்ளும் ஒரு நயம்; சிந்தனையைத் தூண்டும் அழகிய இயைபு. கவிஞர் தாகூரை நினைவூட்டும் விதத்தில்,

''உன் வீட்டுக்கு வந்த விருந்தாளியை
மரியாதை செய்...
அழைக்காதே,
அழையா விருந்தாளியாய் வந்தாலும்
மரணத்தை மரியாதை செய்...'' (ப.79)

என்கிறார் கவிஞர். காதலுக்கு மரியாதை செய்யுமாறு பாடிய கவிஞர் இங்கே மிகப் பலர் உள்ளனர்; நம் கவிஞரோ மரணத்திற்கு மரியாதை செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கின்றார். கவிஞரின் பார்வையில் ''மரணம் கூட ஒரு தர்மம் தான் / அதனால் தான் கடவுளில் / எவனுக்கும் இல்லாத பெயர்/ எமனுக்கு மட்டும் /

'தர்மராஜா' என்று...'' எனவே, ''மரணத்தை மதிக்க/ மனதை/ பக்குவப்படுத்துங்கள்''(ப.80) என்று மனிதர்களுக்கு நல்லதோர் அறிவுரையினை வழங்குகின்றார் கவிஞர்.

கவிஞர் ஆ. திருநாவுக்கரசன் தம் கவிதைகளில் வாழ்வியல் விழுமியங்களுக்குத் (Values) தந்திருக்கும் மதிப்பு மலையினும் மாணப் பெரிதாகும். ஐயிரண்டு திங்கள் அங்கமெல்லாம் நொந்து பெற்றெடுத்து ஆளாக்கிய பெற்றோரைக் கைவிட்டு - காப்பகத்தில் விட்டு- தனியே வாழ்ந்து வரும் இன்றைய இளைஞர்களுக்கு கவிஞர் கூறியுள்ள அன்பான அறிவுரை இது;

''இழந்தால் பெற முடியாதது
காலம் மட்டுமல்ல
பெற்றோரும் தான்...
முதியோர் இல்லங்கள்
மூடல் வேண்டும்
பிள்ளையும் பெற்றோரும்
பிரிதலின்றி - நல்ல
புரிதலோடு
வாழ்ந்திடல் வேண்டும்'' (பக்.23-24)

'எண்ணிய முடிதல் வேண்டும்' என இக்கவிதைக்குப் பாரதியாரின் வாக்கினை அடியொற்றித் தலைப்பினைத் தந்திருக்கும் கவிஞரின் படைப்புத் திறம் போற்றத் தக்கதாகும். இளையோரும் முதியோரும் பிரிதலின்றி நல்ல புரிதலோடு வாழ்ந்திடல் வேண்டும் என்பதும், முதியோர் இல்லங்கள் மூடப் பெறல் வேண்டும் என்பதும் கவிஞரின் ஆழமான எதிர்பார்ப்புகள் ஆகும்.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடும் கருணை மனம் கொண்டவனே கவிஞன் ஆவான். அவனது தாயுள்ளம் - பேருள்ளம்- எல்லா உயிரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியாது. இவ்வகையில் கவிஞர் திருநாவுக்கரசன் புலம் பெயர்ந்த ஈழத் தமிழனின் வாழ்க்கை நிலையை இரு கவிதைகளில் கருணையோடும் கனிவோடும் பதிவு செய்துள்ளார்.

''புலம் பெயர்ந்து வாழ்வதனால்-நான்
தெருவோரப் பாடலாய் தேய்ந்து போனேன்;
போராடி வாழ்கிறாய் - நீ
தேசிய கீதமாய் உயர்வு பெறுகிறாய்'' (ப.52)

என்பது புலம் பெயர்ந்த தமிழன், போராடும் தமிழனுக்குக் கூறும் நம்பிக்கை மொழி ஆகும். 'நிச்சயம் ஒருநாள் விடியும் , நீண்ட போரும் முடியும்' என்பது அக் கவிதையின் முடிவில் கவிஞர் போராடும் தமிழனுக்குத் தரும் அன்பான ஆறுதல் மொழி ஆகும். இதே போல், புலம் பெயர்ந்த ஈழத் தமிழனின் வாழ்க்கை அவலத்தைச் சித்திரிக்கும் பிறிதொரு கவிதையின் முடிவிலும் முத்தாய்ப்பாகக் கவிஞர்,

''வாழ்க்கையின் கதவு மிகப்பெரிது
சமாதானச் சாவி சிறிதென்றாலும்
அது சிறக்கும்'' (ப.55)

எனக் கூறுவது மனங்கொளத் தக்கதாகும்.

'இல்லறமே நல்லறம்' என்பது ஆன்றோர் வாக்கு. 'நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்' என்பார் பாவேந்தர் பாரதிதாசன்.

'நல்ல மனைவி- நல்ல பிள்ளை- நல்ல குடும்பம் தெய்வீகம்' என்பது கவியரசர் கண்ணதாசனின் வைர வரி. குடும்பம் நல்லதொரு குடும்பமாக இல்லாமல், நாளும் போர் நிகழும் குருக்ஷேத்திரமாக மாறுவதற்குக் காரணம் ஆண், பெண் இருவரது உள்ளத்திற்குள்ளும் குடியிருக்கும் அகந்தை தான்; இறுமாப்புத் தான்; மமதையும் பிடிவாதமும் தான்; 'விவாகரத்து' என்னும் கவிதையின் தொடக்கத்தில் இக்கருத்தினை அழகுற எடுத்துரைக்கின்றார் கவிஞர்;

'' ஆண் என்ற அகந்தை அவனுக்குள்
தான் என்ற அகந்தை அவளுக்குள்
வீண் என்று ஆனதென்னவோ
வீட்டில் இருக்கும் குழந்தைகள் தான்.'' (ப.77)

'இரு பேராண்மை செய்த பூசல்' என்று அன்று சங்க இலக்கியம் சொன்னதை இன்று எளிய நடையில் தெள்ளத் தெளிவாகக் கூறுகின்றார் கவிஞர்.

''குறிஞ்சி என்று கொண்டாடும் உறவை
நெருஞ்சி என்று துண்டாடலாமா?
சிறகடிக்கக் கிடைத்த வாழ்வை
சிதறடிக்கலாமா?'' (ப.78)

என்னும் கவிஞரின் வினாக்கள் பொருள் பொதிந்தவை; சிந்திக்கத் தூண்டுபவை; இன்று நீதிமன்றங்களில் மணமுறிவு கேட்டு நிற்போரின் மனங்களிலே அசைவை ஏற்படுத்த வல்லவை.

கவிஞனின் ஆற்றலையும் ஆளுமையையும் அடையாளம் காட்டுவதில் உவமைகளுக்குப் பெரும்பங்கு உண்டு. இவ்

வகையில் ஒரு தேர்ந்த கவிஞனுக்கு அவனது வலது கை போலச் செயல்படுவது உவமை ஆகும். கவிஞர் திருநாவுக்கரசனின் உவமைகள் வித்தியாசமானவையாக - தனித்தன்மை கொண்டவையாக - விளங்குகின்றன; ஒருமுறை படித்தவுடன் படிப்பவரின் நெஞ்ச அரியணையிலே ஏறி அமர்ந்து கொள்ளுகின்றன. சான்றாக சீரிய சில உவமைகள் இதோ

''இல்லறம் என்பது இறகுபோல
விவாகரத்து என்பது தீச்சுடர் போல'' *(ப.78)*

'' படிய வாரிய நெடிய கூந்தல்
பழுத்த மூங்கிலைப் போல்
வெளுத்த தேகம்'' *(ப.71)*

''நேர்மை இன்றைக்கு
நீரில் விழுந்த நிலாப் பிம்பமாய்
ஒளி சிந்தாமல் தள்ளாடுகிறது'' *(ப.34)*

''திருவிழாவில் தொலைந்து போய்
திக்கறியாக் குழந்தை போல
என் வாழ்க்கை இருக்கிறது'' *(ப.27)*

கருதிய பொருளை அழகியல் உணர்வோடும் ஆற்றல் மிகு நடையிலும் புலப்படுத்துவதற்கு இவ்வுவமைகள் கவிஞருக்குப் பெரிதும் கைகொடுத்துள்ளன.

கவிதையின் தொடக்கத்திலோ முடிவிலோ சொற்களை வைத்து விளையாடுவது என்பது கவிஞருக்கு மிகவும் விருப்பமான ஓர் உத்தியாக உள்ளது. இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள பல கவிதைகளை இதற்குச் சான்றுகளாகக் காட்டலாம்.

''காமம்
அடக்க வேண்டியதன்று
கடக்க வேண்டிய ஒன்று;
துய்த்துக் களிக்க வேண்டியதை
நைத்துக் கிழிக்கலாமா?'' (ப.74)

என்பது காமம் என்னும் கவிதையின் எடுப்பான தொடக்கம். 'அடக்க', 'கடக்க', 'துய்த்து', 'நைத்து' - சுவையான சொல்லாடல்.

''பிடிசாம்பல் ஆகும் முன்னே- காதலின்
மடி சாய்ந்து பார்
சொர்க்கம்
இங்கேயே நிச்சயம்'' (ப.73)

என்பது 'நிச்சயமான சொர்க்கம்' என்னும் கவிதையின் முத்தாய்ப்பான முடிவு. 'காப்புரிமை தேவையில்லாக் கட்டழகே' என்றும், 'நிலவு கூடத் தொட்டுவிடும் தூரம்தான், நிதானமான காதலுக்கு' என்றும் காதலைப் பாடும் போது கவிஞர் தனித்துத் தோன்றுகின்றார். அவரைப் பொறுத்த வரையில், 'கண்ணுக்குள் வித்து விழுந்து, கனவுக்குள் முத்து வளரும், அதிசயம் காதல்'(ப.68).

''கல்விக் கடவுளின் ஆண்பால்
காமராசர்...'' (ப.38)

''என் போன்று உணவுக்காக
ஏங்கி இருந்தோர்க்கெல்லாம்
உணவும் அளித்தார்- கல்வியென்ற
உணர்வும் அளித்தார்'' (ப.36)

என்பது 'கர்ம வீரர்' காமராசருக்குக் கவிஞர் சூட்டியுள்ள புகழாரம்.

''தாடி நரைக்கப் பார்த்திருக்கிறேன்
தலைமுடி நரைக்கப் பார்த்திருக்கிறேன்
இதென்ன அதிசயம்
இங்கே வழுக்கையே நரைத்திருக்கிறதே!'' (ப.33)

'முட்டை' என்னும் தலைப்பில் அமைந்த இக்கவிதை படிப்பவரின் உதடுகளிலே மெல்லிய முறுவலைத் தோற்றுவிக்கும் பான்மை பொருந்தியதாகும்.

''மடியில் தொடங்கி
கனலில் அடங்கியது
மனிதன் வாழ்க்கை'' (ப.30)

என்னும் கவிஞரின் வரிகளில் தத்துவ முத்திரை பதிந்திருப்பது நெற்றித் திலகம்.

நிறைவாக,

''இந்த தேசம் மீண்டு வர வேண்டும்
அதற்கு நீ மீண்டும் வர வேண்டும்'' (ப.38)

எனக் 'காமராசர்' பற்றிப் பாடிய கவிதையின் முடிவில் வேண்டுகோள் விடுக்கின்றார் கவிஞர். கவிஞரின் படைப்புலகில் இதுவரை உலா வந்த நமக்கோ இப்படிச் சொல்லலாம் போல் தோன்றுகிறது:

இந்த தேசம் மீண்டு வர வேண்டும்!
அதற்குப் பாட்டுக்கொரு புலவன் பாரதி மீண்டும்
வர வேண்டும்!
அவன் வழியில் அவன் வாரிசாய் திருநாவுக்கரசன் போன்ற
இளங்கவிஞர்கள் மீண்டும் மீண்டும் கவி பாட வேண்டும்!''

- ஆ. திருநாவுக்கரசனின்'....மரணம் வரை' (2006) என்ற கவிதைத் தொகுப்பிற்கு எழுதிய அணிந்துரை.

19

‘பிறவிதோறும் தொடரும் நட்பு’

“இவ்வுலகில் இயற்கையோடு இயல்பாய் முற்றும் இயைந்து போவது நட்பைத் தவிர வேறொன்றில்லை. வாழ்விலும் தாழ்விலும் அதைப் போன்றதொரு முற்றிலும் சரியானதொரு உணர்வும் இல்லை.”

- சிசரோ★

‘பிறவிதோறும் தொடரும் நட்பு’ என்பது இலக்கியங்கள் ஆண்-பெண் உறவில் காலந்தோறும் சிறப்பித்துப் பேசும் ஒரு கலைப் பண்புக்கூறு (Motif) ஆகும். ‘பயிலியது கெழீஇய நட்பு’ (குறுந்தொகை 2) என்றும், ‘பிறப்பிடைக் கொண்டுஞ் சிறப்பொடு பெருகி, நெஞ்சிற் பின்னி நீங்கல் செல்லா அன்பு’ (பெருங்கதை 2.11:39) என்றும் இலக்கியங்கள் விதந்து பேசும் இக் கூறு, காலந்தோறும் பாடப் பெற்றிருக்கும் முறை குறித்து இக் கட்டுரையில் காண்போம்.

நல்ல குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள ஒரு பாடல். அம் மூவனார் இயற்றியது;நெய்தல் திணையில் தலைவி கூற்றாக அமைந்தது. தலைவன் பரத்தையிற் பிரிந்து மீண்டு வந்த காலத்து முன்னிருந்த ஆற்றாமை நீங்கி, அவனோடு பள்ளியறையில் அளவளாவியபடி இருக்கிறாள் தலைவி! அந்நிலையில் அவள்

★ மேற்கோள்: ப. மருதநாயகம், சங்கச் சான்றோர் முதல் சிற்பி வரை, ப. 88.

தலைவனிடம் தனிப்பட்ட தன் உள்ளத்து உணர்வைப் புலப்படுத்துகிறாள். ''தலைவ! இப் பிறப்பு நீங்கப் பெற்று நமக்கு வேறு பிறப்பு உண்டாயினும், என்னுடைய கணவன் நீயே ஆகுக! நின்னுடைய மனத்திற்கு ஒத்த காதலி யானே ஆகுக! நாம் பிறவிதோறும் அன்புடைய கணவனும் மனைவியும் என இருப்போமாக!'' என்பது அத் தலைவியின் கூற்று.

> ''.... .... *சேர்ப்ப*
> *இம்மை மாறி மறுமை ஆயினும்*
> *நீ ஆ கியர்என் கணவனை*
> *யான் ஆ கியர் நின் நெஞ்சுநேர் பவளே*'' (ப.49)

என்பது தலைவியின் கூற்றினைத் தன்னகத்தே கொண்ட குறுந்தொகைப் பாடல், இப் பாடலில் இடம்பெற்றுள்ள 'நெஞ்சு நேர்பவள்' என்னும் தொடர் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது; நுண்ணிய குறிப்பினை உட்கொண்டது. ''நீயாகியர் எங்கணவனை யென்றதற்கேற்ப யானாகியர் நின் மனைவி யென்னாது நெஞ்சு நேர்பவளென்றது, கணவனென்றமையாலேயே மனைவி யென்பது பெறப்பட்டமையாலும், மனைவியாக இருப்பினும் நெஞ்சு நேர்பவளாகும் பேறு பரத்தைக்காவதுமுண்டாதலின் வாளா மனைவியென வாழாமல் நெஞ்சு பொருந்தியவளும் ஆதல் வேண்டும் என்பது நினைவு ஆதலாலும் என்ன... நேர்தல்- கொடுத்தலுமாம்: தலைவன் தன் நெஞ்சைத் தலைவிக்குக் கொடுத்தல் ஆவது எப்பொழுதும் அவளை நினைத்து அன்பு பாராட்டல்'' (குறுந்தொகை மூலமும் உரையும், ப.108) என்னும் உ.வே. சாமிநாதையரின் உரை விளக்கம் இங்கே மனங்கொளத் தக்கதாகும். இல்லறமாம் நல்லற வாழ்வில் ஈடுபடும் கணவனும் மனைவியும் ஒருவருக்கு ஒருவர் மனம் ஒத்து- இப்பிறப்பில் மட்டுமன்றி மறுபிறப்பிலும் மனம் கலந்து

ஒழுகும்- காதலர்களாக வாழ்ந்து சிறக்க வேண்டும் என்பதே சங்கத் தமிழர் போற்றிய இல்லற நெறியாக விளங்கியது. இதனைப் பறை சாற்றும் பாடலாக அவ்மூவனாரின் குறுந்தொகைப் பாடல் விளங்குகின்றது.

'இம்மையில் மட்டுமன்றி மறுமையிலும் கருத்தொருமித்த கணவனும் மனைவியுமாய் எப்பொழுதும் அன்பு வாழ்க்கை வாழ்தல்' என்னும் கருத்தாக்கம் (Concept) சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாம் ஆண்டாளின் நெஞ்சத்தையும் கொள்ளை கொண்டுள்ளது. அவர் இதற்கு ஓர் உயரிய இடத்தினைத் தந்து தம் 'பாவைப் பாட'லில் கையாண்டுள்ளார்.

''*இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!*
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம், உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்'' (29)

எனப் பாவை நோன்பு நோற்கும் இளம்பெண்கள் கோவிந்தனிடம் தங்கள் விண்ணப்பத்தினை முன்வைக்கின்றனர். இவ் விண்ணப்பம் இடம்பெற்றிருக்கும் 29-ஆம் பாசுரம் தனிச் சிறப்பு டையது. திருப்பாவையின் உயிர் மூச்சான பாசுரம் இது. பகவானால் ஏவப்பட்டுச் செய்யும் பணியே அந்தரங்க கைங்கர்யம். இராமாயணத்தில் பரதன் செய்தது பகிரங்கக் கைங்கர்யம். இலக்குவன் செய்தது என்றும் பிரியாத அந்தரங்கக் கைங்கர்யம். இதையே பாவை நோன்பு நோற்கும் இளம் பெண்கள் விரும்புகின்றனர். ''கண்ணா! நாங்கள் வந்திருப்பது அறைபறையைப் பெற மட்டுமன்று. இப் பிறவியிலும் இனி அடுத்து வருகின்ற பிறவிகளிலும் உன்னைச் சேர்ந்தவர்களாகவே, உன் அடியார்களாகவே இருக்க விரும்புகின்றோம். தாழ்ந்த வர்களுக்கு முகம் காட்டும் நீ, எல்லாப் பிறவிகளிலும்

எங்களுடன் இருக்க வேண்டும். உனக்குப் பணி செய்வதே எங்களுக்குச் சுவையானது. இச் சுவை தவிர வேறு எச்சுவை பெறினும் வேண்டோம். பிற இச்சைகளில் எங்கள் உள்ளம் செல்லாவாறு எங்களைக் காக்க வேண்டும்'' என்று பாவை நோன்பு நோற்கும் இளம்பெண்கள் நெஞ்சுருகி வேண்டு கின்றனர். 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோம், உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்ற அடிகளில் திருப்பாவையின் சாரமான பொருள் சொல்லப்பட்டிருப்பதாகக் கருதுவர் வைணவப் பெரியோர் (ஆ.வெ. அரங்காச்சாரி, ஸ்ரீ ஆண்டாள் அருளிய திருப்பாவை, பாசுரங்களும் விளக்கவுரை யும், ப.48). 'இறைவனுக்கும் உயிருக்கும் இடையேயான உறவு என்பது எல்லாப் பிறவிகளிலும் இமைப்பொழுதும் பிரிவின்றி பணி செய்து வாழ்வது' என்பதே ஆண்டாள் திருப்பாவைப் பாசுரத்தில் உணர்த்தும் பக்தி நெறி ஆகும்.

'மறுமையிலும் பிரியாமல் காதலனும் காதலியுமாக எப்பொழுதும் ஒருவர் மீது ஒருவர் ஆழ்ந்த அன்பு பாராட்டி வாழ்தல்' என்னும் கருத்தாக்கம் இருபதாம் நூற்றாண்டுக் கவிஞரான பாரதியாரின் உள்ளத்தையும் ஆட்கொண்டுள்ளது. 'கண்ணன் பாட்'டில் இடம்பெற்றுள்ள பின்வரும் வரிகள் இவ் வகையில் நினைவுகூரத்தக்கவை:

''நேற்று முன்னாளில் வந்த உறவன்றடீ-மிக
நெடும் பண்டைக் காலமுதல் நேர்ந்து வந்ததாம்...
இன்னுங் கடைசிவரை ஒட்டிருக்குமாம் - இதில்
எதுக்கு நாணமுற்றுக் கண்புதைப்பதே?''

(பாரதியார் கவிதைகள்,ப.350)

'கண்ணம்மா- என் காதலி' பாடலில் பாரதியார் படைத்துக் காட்டி இருக்கும் புதிய பரிமாணம் இது! 'கண்ண'னைக் 'கண்ணம்மா'

வாக- காதலியாக - ஆக்கியிருப்பது ஒரு புதுமை; என்றாலும், 'மிக நெடும் பண்டைக்கால முதல் நேர்ந்து வந்த' உறவு என்றும், 'இன்னும் கடைசி வரை ஒட்டியிருக்கும்' உறவு என்றும் பாடுவது வழிவழியாகப் பாடப் பெற்று வந்துள்ள மரபின் தாக்கமே ஆகும்.

திரை இசைப் பாடல் உலகில் தடம் பதித்தவர் கவிஞர் கண்ணதாசன். 'திரை இசைக் கம்பர்' எனப் புகழப் பெற்றவர் அவர். 'பாவாடை தாவணியில் பார்த்த உருவமா?' என்பது 'நிச்சய தாம்பூலம்' என்னும் படத்திற்காகக் கவிஞர் எழுதிய ஓர் அருமை யான பாடல். அப் பாடலின் முடிப்பு வரிகள் இவை:

''இங்கேயே காலமெல்லாம் கடந்துவிட்டாலும் - ஓர்
இரவினிலே முதுமையை நான் அடைந்துவிட்டாலும்
மங்கைஉனைத் தொட்டவுடன் மறைந்துவிட்டாலும் - நான்
மறுபடியும் பிறந்து வந்து மாலை சூடுவேன்!''

(கண்ணதாசன், திரை இசைப் பாடல்கள்: மூன்றாவது தொகுதி, ப.10)

வழக்கமாகப் பெண்கள் தான் மறுபிறப்புப் பற்றிப் பேசுவார்கள்; ஆனால், 'நான் மறுபடியும் பிறந்து வந்து மாலை சூடுவேன்' என ஒரு தலைவனைப் பேச வைத்திருப்பது கண்ணதாசன் செய்து காட்டியுள்ள புதுமை ஆகும்; ஆண் - பெண் உறவில் யாவரும் கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு புதுநெறியும் ஆகும்.

-புதுகைத் தென்றல், நவம்பர் 2006

20

பாரதியார் போற்றும் 'தலைப்படு மனிதர்'

"பாரதியுடன் இருபதாம் நூற்றாண்டு எமது இலக்கியத்திற் புகுகின்றது."

- க. கைலாசபதி *

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை உலகின் தலைமகன் பாரதி. ''தமிழகம், தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும், தலைவனை எண்ணித் தவங்கிடக்கையில், இலகு பாரதிப் புலவன் தோன்றினான்'' (பாரதிதாசன் கவிதைகள், ப.160) எனத் தமிழ்நாட்டின் தவப்பயனாய்ப் பாரதி தோன்றியதைச் சிறப்பித்துக் கூறுவார் பாவேந்தர் பாரதிதாசன். நாமக்கல் கவிஞரும் தம் பங்கிற்கு,

''சுப்ரமண்ய பாரதியை நினைத்திட் டாலும்
சுதந்திரத்தின் ஆவேசம் சுருக்கென்று ஏறும்...
''ஒப்பரிய தமிழன்' எனும் உவகை ஊறும்,
உள்ளமெல்லாம் துள்ளியெழும், ஊக்கம் உண்டாம்''

(நாமக்கல் கவிஞர் பாடல்கள், பக்.233-234)

எனக் கவியரசருக்குப் புகழாரம் சூட்டி மகிழ்வார்; மனம் நெகிழ்வார். 'பாட்டுக்கொரு புலவன் பாரதி' என்பது பாரதியைப்

* பாரதி ஆய்வுகள், ப. 24.

பற்றிய கவிமணியின் மதிப்பீடு ஆகும். இங்ஙனம் கவிஞர்களின் கவிஞராக (Poet of Poets) விளங்கிய பாரதி தம் காலத்தில் 'பாம்ரராய், விலங்குகளாய், உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு. நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திட்ட' மனிதர்களைப் பல்வேறு பெயர்களால் சுட்டிக் கடுமையாகச் சாடியுள்ளார். ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்ப் பொறியற்ற விலங்குகள் போல எவ்விதக் குறிக்கோளும் இல்லாமல் மனம் போன போக்கில் வாழ்ந்து வந்த மனிதர்கள் பாரதியின் கடுமையான கோபத்திற்கும் வசை மொழிகளுக்கும் ஆளாகியுள்ளனர். 'தேடிச் சோறு நிதம் தின்று, பல சின்னஞ்சிறு கதைகள் பேசி, மனம் வாடித் துன்பம் மிக உழன்று, பிறர் வாடப் பல செயல்கள் செய்து, நரை கூடிக் கிழப்பருவம் எய்தி, கொடுங்கூற்றுக்கு இரை எனப் பின் மாயும்' மனிதரைப் பாரதியார் 'வேடிக்கை மனிதர்' (பாரதியார் கவிதைகள், ப.70) எனக் குறிப்பிடுகின்றார். 'நேற்று வந்து இன்று இருந்து நாளை போகும்' சாதாரண மனிதர்களை அவர் ஓர் இடத்தில் 'உண்டு உறங்கி இடர் செய்து செத்திடும் கலக மானிடப் பூச்சிகள்' (ப.228) என்னும் தொடரால் சுட்டுகின்றார். அவர்களை 'மனிதர்கள்' என்ற பட்டியலில் சேர்க்க முடியாது; கூடாது. 'மானிடப் பூச்சிகள்' என அவர்களை அழைப்பது தான் சரியாக இருக்கும் என்பது பாரதியின் கருத்து.

'நெஞ்சில் உரமும் இன்றி, நேர்மைத் திறமும் இன்றி, வஞ்சனை சொல்லித்' திரியும் மனிதர்களை 'வாய்ச்சொல்லில் வீரர்' (ப.196) என்றும், 'அச்சமும் பேடிமையும், அடிமைச் சிறுமதியும் உச்சத்தில் கொண்டு' வாழ்வோரை 'ஊமைச் சனங்கள்' (ப.197) என்றும் 'நடிப்புச் சுதேசிகள்' என்னும் கவிதையில் பழித்துப் பேசுகின்றார் பாரதியார்.

'வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம்' என இன்னமும் கூறிவரும் மனிதரும் உலகில் உள்ளனர். 'பெண்கள் விடுதலைக் கும்மி'யில் இவ் வகையான மனிதரை 'விந்தை மனிதர்' என அழைத்துச் சாடுகின்றார் பாரதியார்.

'யார்க்கும் அஞ்சோம், எதற்கும் அஞ்சோம், எங்கும் அஞ்சோம், எப்பொழுதும் அஞ்சோம்' எனத் தம் வாழ்நாளின் இறுதி மூச்சு வரை அஞ்சாமையோடு வாழ்ந்து காட்டிய ஆண்மையாளர் பாரதியார். அவரது 'புதிய ஆத்திசூடி', 'அச்சம் தவிர்' எனத் தொடங்குவதும் குறிப்பிடத்தக்கது. தம் கருத்துக்கு மாறாக, அவனியில் எதற்கெடுத்தாலும் அஞ்சி அஞ்சிச் சாகும்-செத்துச் செத்துப் பிழைக்கும் மனிதரை 'நிலை கெட்ட மனிதர்' (ப.155) என்னும் தொடரால் குறிப்பிட்டு, நெஞ்சு பொறுக்காமல் வருந்துகிறார் பாரதியார்.

சமுதாயத்தில் இன்னும் சில மனிதர்களும் உண்டு. 'செத்த பிறகு சிவலோகம், வைகுந்தம் சேர்ந்திடலாம்' என்பது இவர்களது எண்ணம். இத்தகையோருக்குப் பாரதியார் சூட்டும் பெயர் 'பித்த மனிதர்' (ப.99) என்பதாகும். அவர்கள் சொல்லும் சாத்திரத்தைப் 'பேயுரை' (ப.99) எனக் கடுமையாகச் சாடுகின்றார் கவிஞர்.

'பாஞ்சாலி சபத'த்தின் ஐந்தாவது பகுதி 'சபதச் சருக்கம்'. இதில் துச்சாதனன் பாஞ்சாலியின் கூந்தலினைக் கையினால் பற்றித் தரதரவெனத் தான் இழுத்து வருகிறான். ஊரவர் வழி நெடுக மொய்த்தவராய் 'என்ன கொடுமை இது' என்று வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர். 'விலங்காம் இளவரசன் தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே,

பொன்னை அவள் அந்தப்புரத்தினிலே சேர்க்காமல்' நின்று புலம்பிக் கொண்டிருக்கும் ஊர் மக்களின் கீழ்மையை நினைக்கும் போது பாரதியின் நெஞ்சில் சினம் பொங்கித் ததும்புகின்றது. 'வீரமிலா நாய்கள்' என அவர்களைப் பழிக்கும் கவிஞர்,

''நெட்டை மரங்கள் என நின்று புலம்பினார்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?'' (ப.443)

என்று காட்டமாகக் கேட்கின்றார். கொடுமை நிகழும்போது வெறுமனே பார்த்துக் கொண்டு இராமல் - பொறுத்துக் கொண்டு போகாமல் - எதிர்த்து நிற்க வேண்டும், வெடிப்புறப் பேச வேண்டும் என்பது பாரதியின் உள்ளக் கருத்து.

இவ்வாறு வெவ்வேறு வசைமொழிகளையும் சொல்லம்பு களையும் கையாண்டு தம் காலத்தில் வாழ்ந்த பாரத மக்களின் பல்வேறு பண்புகளையும் புலப்படுத்திய பாரதியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மாமனிதராக - ஆளுமையாளராக (Personality) - காந்தியடிகள் விளங்குகின்றார்.

''புவிமிசை இன்று
மனிதர்க் கெல்லாம் தலைப்படு மனிதன்,
தர்மமே உருவாம், மோஹன தாஸ
கர்ம சந்த் காந்தி'' (ப.149)

என இரவீந்திர நாத தாகூர் காந்தியடிகளைப் பற்றிக் கூறியுள்ள புகழாரத்தைத் தம் 'பாரதமாதா நவரத்ன மாலை'ப் பாடல் ஒன்றில் எடுத்துக்காட்டுகின்றார் பாரதியார். அவரது கருத்தில் 'மகா பாரதம்' (Great India) உருவாவதற்குப் பெரிதும் உறுதுணை புரிவது காந்தியடிகளைப் போன்ற 'தலைப்படு மனித'ரின்

வருகையும் வழிகாட்டலுமே ஆகும். 'மஹாத்மா காந்தி பஞ்சக'த்தில் அவர்,

''வாழ்கநீ எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மா! நீ வாழ்க! வாழ்க!'' (ப.199)

என வாழ்த்திப் பாடி இருக்கும் வைர வரிகள் மனங்கொளத்தக்கவை ஆகும். 'பாரத தேசந் தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா'வின் வழிகாட்டலைப் பொன்னே போல் போற்றுவோம்; 'தலைப்படு மனித'ராய் உயர்ந்து, ஒளி படைத்த பாரத மணித் திருநாட்டை உருவாக்குவோம்!

-புதுகைத் தென்றல், பிப்ரவரி 2007

21

இராமாநுசக் கவிராயர் எனும் 'நல்லதோர் வீணை!'

"அன்று கவிராஜரும் அவர்கள் தந்தையும் நடந்து கொண்ட முறையைப் பார்த்த போது, மகாத்மாவைப் போன்ற சாந்த சீலர்கள் இவர்கள் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது."

- மகராஜன்*

இராமாநுசக் கவிராயர் எண்பது ஆண்டுகள் (1905-1985) மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த மாமனிதர்; 'ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்' என்னும் வாக்கிற்கு நல்லதோர் இலக்கியமாகத் திகழ்ந்த நயனுடையாளர்; எப்போதும் தூய வெள்ளைக் கதராடை அணிசெய்ய நெற்றியில் திருநாமம் தரித்து எளிமையுடன் காட்சியளிப்பது அவரது வழக்கம். இராமாநுசர் தொழிலால் வழக்கறிஞர்; தூய உள்ளத்தால் - உள்ளத்தில் ததும்பி நிற்கும் உணர்வால் - காந்தியவாதி. தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல் எழுதும் பேராற்றல் படைத்தவர் அவர். அதே போல் பக்திப் பாசுரம் முதல் பெருங்காப்பியம் வரை படைப்புப் பல படைக்கும் பழுத்த தமிழ்ப் புலமையும் பெற்றவர் கவிராயர். பாவேந்தர் பாரதிதாசன் போற்றிப் பாடியது போல் 'தூய உள்ளம்,

* முன்னுரை, இராமாநுசக் கவிராயரின் 'மகாத்மா காந்தி காவியம்', p.ii.

அன்புள்ளம், பெரிய உள்ளம், தாயுள்ளம்' கொண்டு ஏழை எளிய மக்களுக்காக - மகளிர்க்காக- மாணவர்களுக்காகப் பல்லாற்றானும் ஆக்கமும் ஊக்கமும் நிதியும் நல்கிப் பேணிய கொடையாளர் கவிராயர். இங்ஙனம் பல்வகைத் திறன்களும் பாங்குறப் பொருந்திப் பெருவாழ்வு வாழ்ந்த இராமநுசக் கவிராயரைக் குறித்துத் தமிழ் கூறு நல்லுலகம் இன்னும் சரியாக அறிந்து கொள்ளாதது தவக்குறையே ஆகும்; இப்போதேனும் சாகித்திய அகாதெமி, தனித்தமிழ் இலக்கியக் கழகம், நம்மாழ்வார் சபை முதலான அமைப்புக்கள் கவிராயரின் பெருமையைப் பேச முன்வந்திருப்பது உண்மையிலேயே இலக்கிய ஆர்வலர்களின் நெஞ்சங்களிலே இன்பத் தேனைப் பாய்ச்சுவதாகும்.

கவிராயரின் படைப்புக்களிலே மணிமுடியாய்த் திகழ்வது 'மகாத்மா காந்தி காவியம் அல்லது மாகாவியம்' ஆகும். இக்காவியம் இளம்பருவ காண்டம், நேதள காண்டம், சத்தியோதய காண்டம், பாரத காண்டம், உயுத்த காண்டம், மீட்சிக் காண்டம், சுயவாட்சிக் காண்டம், மங்கள காண்டம், அப்ராக்கிருத பூர்வ காண்டம் என்னும் ஒன்பது காண்டங்களைத் தன்னகத்தே கொண்டது; 'கடவுள் வாழ்த்து' முதலாக 'அறிகுறிப் படலம்' முடிய உள்ள 69 படலங்களால் அமைந்தது; நான்கு பாகங்களால் ஆன இக் காவியத்தில் இடம்பெற்றுள்ள மொத்தப் பாடல்கள் 12,285. ''இதுவரை உலகங்கண்ட எந்த காரியத்திலும் பாட்டுடைத் தலைவன் வீரம் முதலியன செயல்பட்டது அவர்களுக்கு ஏற்பட்ட சொந்தத் துயர் தீர்ப்பதற்காகவே நடந்துள்ளது. இராமாயணத்தில் சீதையை சிறை மீட்பதற்கும், பாரதத்தில் இழந்த இராஜ்யத்தை மீட்பதற்கும் நடந்த செயல்களேயாகும். ஆனால் இந்தப் பாட்டுடைத் தலைவனாகிய மகாத்மாஜி

தனது சொந்த நலனுக்காக யாதொரு விதமான செயலும் செய்யாமல் முழுவதும் பரோபகரமான தேச விடுதலைக்காகவே நடத்திய போராட்டம் மிகவும் தன்னிகரற்றது. அந்த போராட்டத்தில் எதிலுமே கோபமில்லாமல் செய்த செயலானது தர்மத்தின் பூரணத்தை பிரதிபலிப்பதாகும். இந்தப் பூர்ணத்துவம் மற்ற இதிகாசங்களில் இல்லையென்பது அடியேனது துணிவாகும்'' (p.i) எனக் கவிராயரே 'மகாத்மா காந்தி காவியம்' மூன்றாம் பாகத்திற்கு எழுதிய 'கருத்துச் சுருக்கம்' பகுதியில் குறிப்பிட்டிருக்கும் கருத்து காந்தியடிகளின் தனிப்பெருந் தகைமையைத் திறம்படப் புலப்படுத்துவதாகும். கவிராயருக்கு அவரது இளமைப் பருவத்திலேயே காந்தியத்தின் மீது ஆழ்ந்த பற்று உண்டானது; மேலும் அவரது ஆசிரியர் டி.பி.பத்மநாப அய்யங்கார் வாயிலாக அந்தப் பற்று பன்மடங்கு உறுதிப்பட்டது. இதன் விளைவாக, காந்தியடிகளின் உயரிய வாழ்க்கை நெறியில் அவரது மனம் முழுவதுமாக ஈடுபட்டு, அவர் மீது நன்மதிப்பு மலையினும் மாணப் பெரிதாக வளர்ந்தது. இதன் உச்சகட்டமாகக் காந்தியடிகளின் வரலாற்றை ஒரு காவியமாக இயற்றும் பணியை முனைப்புடன் மேற்கொண்டார் கவிராயர். ''அதிவிசித்திரமான மகாத்மாஜியின் சரிதத்தை ஒரு காவியமாக இயற்றினால் உலகிற்கு நன்மை பயக்கக் கூடிய செயலென்று கருதி காந்தியடிகள் அமரத்வமான பின்பு இந்தக் காவியத்தை ஆரம்பித்தேன்'' (p.iv) என்று கவிராயரே இப் பணி பற்றிய தம் உள்ளத்து உணர்வினை 'மகாத்மா காந்தி காவியம்' முதல் பாகத்திற்கு எழுதிய முகவுரையில் பதிவு செய்துள்ளார்.

கவிராயரின் 'மகாத்மா காந்தி காவிய'த்திற்கு நீதியரசர் எஸ். மகராஜன் எட்டுப் பக்க அளவில் நல்லதோர் முன்னுரையை எழுதியுள்ளார். அதில் அவர், ''நூலாசிரியரும் காந்திஜியைப் பற்றி எழுதுவதற்குரிய தகுதி பெற்றவர்; மதிக்க வேண்டியதை மதிக்கத் தெரிந்தவர்; பொருளோடு அருளும் தயாளமும் நிறைந்தவர்; உண்மைப் பக்தியாலும் அடக்கத்தாலும் தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டவர். உரிய பக்குவம் இல்லை யென்றால், நாம் சுட்டுக் கொன்று புதைத்துவிட்ட காந்திஜியைப் பற்றிப் பல்லாண்டுகள் தியானம் செய்து உருகி, உருகி, உணர்ச்சி வசப்பட்டுப் பத்தாயிரம் கவிகளை இயற்றியிருக்க முடியுமா? இந் நீண்ட காலத் தவமே மகாத்மாவின் சத் சங்கத்திலிருந்த பலனை ஆசிரியருக்கு நல்கிவிட்டது'' (p.iv) எனக் கவிராயரின் காந்தியப் பற்றினை நெஞ்சாரப் போற்றியுள்ளார்; கவிராயரின் புலமைத் திறத்திற்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

கவிராயர் கம்ப ராமாயணத்திலும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திலும் ஆழங்கால் பட்டவர். எனவே அந் நூல்களின் சாயலை அவரது கவிதைகளில் ஆங்காங்கே கண்டு மகிழ முடிகின்றது. மேலும், 'உண்மையான உணர்ச்சி உள்ளத்திலே தோன்றிவிட்டால், தமிழ்மொழி, நம்மைக் கேட்காமலேயே நம் உள்ளத்தில் புகுந்து, நம் உணர்ச்சிக்குக் கவி வடிவம் கொடுத்து விடும்' என்னும் ரசிக மணியின் கூற்றினை மெய்ப்பிக்க வல்ல இடங்கள் பல 'மகாத்மா காந்தி காவிய'த்தில் பரவலாகக் காணப்படுகின்றன. பதச்சோறு இதோ:

"அறக்கனியே அன்பரசே அருந்துணையே அறிவாற்றல்
சிறந்தொளிருஞ் செந்நலமே செய்வினையின் பயன்அறவே
துறந்தாற்றும் பெருந்துறவே பேயுலகம் புலம்பிவிழ
மறைந்தனையே நிரந்தரமாய் மதியிழந்தார் செய்கையினால்"
(அந்திமப் படலம், பா.229)

சதிகாரன் கோட்ஸேயால் சுடப்பட்டு காந்தியடிகள் அமரரான பேரவலத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத சூழலில் கவிராயர் பாடிய இரங்கற்பா இது. 'பண் சுமந்த பாடல்' என்பது போல் ஆழ்ந்த 'அவலம் சுமந்த பாடல்' இது!

காந்தியடிகளின் வரலாற்றைக் கவிராயர் தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் கவிதை வடிவில் 'Bharath Reborn' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார்.

"ஒழுக்கமில்லாத அஹிம்சை பேடித்தனமாவது. உலகத்தில் சத்தியம் அஹிம்சை ரூபமாகவே யியங்கி தர்மத்தை நிலை நாட்டுவது. உலகத்தில் இதுவரை முதலிற் போரைத் தொடங்கியவர் முடிவில் தோல்வியே யுற்றிருக்கிறார்கள். முதலில் வெற்றி போல் தோன்றினும் கடைசியில் தர்மம் தான் வெற்றி கொள்ளுவது பிரத்யக்ஷம்" (முகவுரை, அராவகன தளம், p.iii) என்னும் கருத்தினை நிலைநிறுத்தும் விதத்தில் கவிஞர் படைத்துள்ள காவியம் 'அராவகன தளம்'. இக் காவியம் ஆரம்ப காண்டம், மத்திம காண்டம், முடிவு காண்டம் என்னும் மூன்று காண்டங்களாலும் பன்னிரண்டு படலங்களாலும் அமைந்தது.

"உணர்வொடு முணர்வுங் காணா உன்னதன் ஒருவன் எங்கும்
கணமொடுங் கணமுங் காணாக் காலமெய் யுருவன் தீரா

அணவுறுஞ் சடத்தினாறா மறிவொடு மறிவுங் காணாக்
குணமொடுங் குணமுங் காணாக் கோனிறை வணக்கஞ்
செய்வாம்!''

என்னும் இக் காப்பியத்தின் கடவுள் வாழ்த்துப் பாடல் திட்பமும் நுட்பமும் ஒட்பமும் வாய்ந்தது.

''பிற மொழிகளில் காணக் கிடையாத தனிச் சிறப்பு ஒவ்வொரு மொழியிலும் உண்டு. பிற மொழிகளில் அரும்பி நிற்பவை ஒரு மொழியில் காய்த்துக் கனிந்து இன்பங் கொழிக்கும். தமிழில் இத்தகைய தனிப்பெருஞ் சிறப்பாக விளங்குவது பக்திப் பனுவலே ஆம். நாலாயிரப் பிரபந்தம் தேவாரம் திருவாசகம்- இவை வேறு எங்கும் நாம் காணாத புத்தம் புதிய இன்பச் சாறு. இவை கடவுட் காதற் பாடல்கள் - திவ்யப் பிரபந்தங்கள். இந்தச் சாற்றை- சாரத்தை நாம் பருக வேண்டாவா''(p.i) என அறிஞர் பி.ஸ்ரீ.யின் 'திவ்யப் பிரபந்த ஸாரம்' என்ற அருந்தமிழ் நூலுக்கு எழுதிய அணிந்துரையில் வினவுவார் பல்கலைச் செல்வர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார். அவர் தமிழ்மொழியின் தனிப்பெருஞ் சிறப்பாகச் சுட்டியிருக்கும் 'கடவுட் காதற் பாடல்' மரபின் அழகிய தொடர்ச்சியினை இராமானுசக் கவிராயரிடம் காண முடிகின்றது. 'துளவன் துதித் தொகுப்பு', 'கோவிந்த பஜனை கீர்த்தனாமிர்தம்' என்னும் கவிராயரின் இரு பக்திப் பனுவல்களும் இவ் வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டக் கவி' பாடுவதில் வல்லவர் கவிராயர் என்பதற்குக் கட்டியம் கூறும் ஒரு பாடல் வருமாறு:

''அற்றவர்க் கருநிதி யன்பி னாலடி
உற்றவர்க் கெளியவன் ஒருவ னொப்பிலான்
மற்றவர்க் கரியவன் மாயன் மாலவன்
நற்றிரு வடிகளை நயந்து வாழ்த்துவாம்''

(தனிப்பாடல், ப.18)

'எம்பிரான் புகழ்' என்னும் தலைப்பில் கவிராயர் பாடியுள்ள 'அருமையில் எளிய அழகான' பாடல் இது! ஒரே பாடலில் - நான்கே வரிகளில் - அற்றவர்க்கு அருநிதி, அன்பினால் அடி உற்றவர்க்கு எளியவன், ஒருவன், ஒப்பிலான், மற்றவர்க்கு அரியவன், மாயன், மாலவன் என இறைவனின் அரும்பெரும் பண்புகளை நிரந்தினிது சொல்லி விடுகிறார் கவிராயர். முடிவில் மாலவன் 'நற்றிரு வடிகளை நயந்து வாழ்த்துவாம்' எனப் பாடி அவன் திருவடிகளைச் சரணடைவதே மானிடர் உய்யும் நெறி என்பதையும் உணர்த்தத் தவறவில்லை கவிராயர்!

''மனிதன் இறைவனைத் தொழுதல் முறைகளில் இங்கிதமும் எளிதுள்ளதுமானது அவன் நாம சங்கீர்த்தனமே'' (முகவுரை, கோவிந்த பஜனை கீர்த்தனாமிர்தம், p.iii) என்பது கவிராயரின் கருத்து. பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற அடிப்படையில் தாம் இயற்றிய கீர்த்தனைகளைக் கவிராயர் இசையில் பெரும்புலமை படைத்த திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களைக் கொண்டு சரிபார்த்த பிறகே வெளியிட்டிருப்பது அவரது பெருந்தன்மையையும் உயர்ந்த புலமைக்குத் தலைவணங்கும் பேருள்ளத்தையும் பறைசாற்றுவதாகும்.

ஆதி தாளத்தில் கீர்வாணி இராகத்தில் கவிராயர் பாடியுள்ள ஒரு கீர்த்தனையில் இருந்து பயில்வார் உள்ளத்தைத் தொடும் சில வரிகள் இதோ:

''பல்லவி

வேலான்டி யவன் வேலான்டி அவன் செந்தூர் வேலான்டி

அநுபல்லவி

மாலான்டி மயில் மேலான்டி கையிற் சூலான்டி! தையற்
கோலாண்டி

சரணம்

மெல்லான்டி மதன்வெல்லான்டியுரு-உள்ளான்டி என
தெல்லாம்டி...''

(கோவிந்த பஜனை கீர்த்தனாமிர்தம், ப.41)

பக்திச் சுவையைப் படிப்பவர் மனத்தில் எளிமையாக ஊட்டும் வகையில் பேச்சுத் தமிழை இங்கே பொருத்தமாகக் கையாண்டுள்ளார் கவிராயர்.

'திருமால் மொழி', 'திருமால் ஒளி', 'திருமால் வழி', 'திருமால் எழில்', 'திருமால் பொழில்' என்னும் ஐந்து பகுதிகளால் ஆனது 'துளவன் துதித் தொகுப்பு.' பேராசிரியர் பா. வளன் அரசு குறிப்பிடுவது போல் இத் தெய்வப் பனுவல், ''திருமாலின் மொழி கேட்டு, ஒளி பெற்று, அவ்வழி நடந்தால் வாழ்வு எழிலாகவும் இன்பப் பொழிலாகவும் திகழும் என்று நிறுவுகிறது'' (இராமாநுசக் கவிராயரின் எழுத்தோ வியங்கள், ப.11).

பாரதியார் படைக்கும் பாஞ்சாலி,

''வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர்தாம்
என்னைமுன் னேகூறி யிழந்தாரா? தம்மையே
முன்ன மிழந்து முடித்தென்னைத் தோற்றாரா?''

(பாரதி பாடல்கள், ஆய்வுப் பதிப்பு, ப.286)

என வெடிப்புறப் பேசுவாள்; தன்னை அழைத்துச் செல்ல வந்த தேர்ப்பாகனிடம் நெஞ்சில் உரத்தோடு கேட்பாள். இதற்கு இணையாகக் கவிராயரின் 'பூகந்த வெண்பா'விலும் ஓர் அருமையான பாடல் இடம்பெற்றுள்ளது. சிந்தனையைத் தூண்டும் அப்பாடலின் தொடக்க வரிகள் இதோ:

'' மற்றப் பொருள்போல மாநிலத்தில் விற்பதற்கு
உற்ற பொருளாமோ ஒண்டொடியார்?''

(பூகந்த வெண்பா, சுயம்வரப் படலம், பா.44)

இங்கே 'பெண் விற்பனைப் பொருளோ?' எனத் தொடுக்கும் கவிராயரின் கேள்விக் கணை இன்றைய பெண்ணியச் சிந்தனையோடு ஒத்துச் செல்வதாகும்.

ஒழுக்கம், அறிவு, சக்தி எல்லாம் போற்றக்கூடிய அளவில் அமையப் பெற்ற பூகந்தன், அவனது வாழ்வைச் சுற்றிச் சுழலும் செம்பாணி, விம்பாணி, வம்பாணி என்னும் மூன்று பெண்கள் ஆகியோரை மையமாகக் கொண்டு கவிராயர் படைத்துள்ள படைப்பு 'பூகந்த வெண்பா'. ''கடவுள் ஒருவரே மாறாத நிலையினர். அவர் சடத்துக்கு மேற்பட்டவர். மற்றவர்கள் சடத்துக்குட்பட்டவர்கள்'' (முகவுரை, ப.2) என்பதே இப் படைப்பின் வாயிலாகக் கவிராயர் உணர்த்த விரும்பும் செய்தி ஆகும். 'மணநூல்' எனச் சுட்டப் பெறும் சீவக சிந்தாமணிக் காப்பியத்தின் நாயகன் சீவகனை நினைவூட்டும் விதத்தில் கவிராயர் பூகந்தனைப் படைத்துக் காட்டியுள்ளார்.

கவிராயரின் ஆளுமை பல்வேறு அரிய திறன்கள் எல்லாம் ஒன்று திரண்டு ஓர் உருவானதாய் விளங்குகின்றது. பொதுவாகக் கவிஞர்களுக்குக் கணக்கில் அவ்வளவு ஈடுபாடு இராது;

பாரதியார் இதற்குச் சரியான உதாரணம். 'கணக்கு, மணக்கு, பிணக்கு, ஆமணக்கு' என்னும் அவரது கூற்று புகழ் பெற்றது. ஆயின் கவிராயரோ 'மனிதனும் கணிதவியலும்' (Man and Mathematics) என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஒரு நூலே எழுதியுள்ளார். பாரதிக்குச் செல்லம்மாள் வாழ்க்கைத் துணையாக அமைந்தது போல் கவிராயருக்கும் செல்லம்மாள் என்ற பெயரில் வாழ்க்கைத் துணைவியார் கிடைத்துள்ளார். பி.ஏ.,பி.எல். பயின்று நீதிமன்றத்தில் வழக்குரையாடும் பணியில் ஈடுபட்டவர்கள் பெரும்பாலும் பெருமிதமும் உயர்வு மனப்பான்மையும் கொண்டவர்களாக இருப்பார்கள்; கவிராயரோ தம்மை 'அடியேன்' என்றும், 'தாசன்' என்றும் மெத்தப் பணிவோடும் அடக்கத்தோடும் குறிப்பிட்டுக் கொள்கின்றார்; காலமெல்லாம் கதராடை அணிந்த ஓர் எளிய காந்தியவாதியாகவே வாழ்ந்துள்ளார். ஒருவர் ஒரு துறையில் தோன்றிச் சாதனை படைப்பது என்பதே அரிது; ஆயின், கவிராயரோ தனிப்பாடல், காப்பியம், நாடகம், பக்திப் பனுவல், தன்னுணர்ச்சிப் பாடல் (ஆங்கிலத்தில்) என்றாற் போல் பல்வேறு துறைகளில் தோன்றி அவற்றில் படைப்புப் பல படைத்துள்ள சாதனையாளராகத் திகழ்கின்றார். இராமலிங்க அடிகளார் ஒன்பது வயதில் 'ஒருமையுடன் உனது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்' என்று பாடியது போல், கவிராயரும் ஒன்பது வயதில் கவி புனையும் ஆற்றலைப் பெற்றவராக விளங்கியுள்ளார். தாமே கவிஞராக இருந்து கவிதை படைத்ததோடு நின்றுவிடாமல் நம்மாழ்வாரின் 'திருவாய்மொழி', ஆண்டாளின் 'திருப்பாவை' ஆகிய பக்திப் பனுவல்களுக்கு உரையும் கண்டுள்ளார் கவிராயர். உரையாசிரியர் என்ற பரிமாணமும் அவரது

ஆளுமையில் சிறப்பாகக் காணப்படுகின்றது. வாழ்வின் கடைசி கட்டத்தில் மரண பயம் கொண்டு நாளுக்கு நாள் செத்துச் செத்துப் பிழைக்காமல் அப்பர் பெருமானைப் போல் ''நான் என் கடமையைச் செய்தாகி விட்டது. இனி நான் உலகில் இருந்து விடை பெற வேண்டியது தான். எனக்கு எதற்காக மருந்தும் சிகிச்சையும்? தண்ணீர் போதும்'' என்று கூறும் அளவிற்கு அஞ்சாமையும் ஆன்ம பலமும் பொருந்தியவராகக் கவிராயர் நிறைவாழ்வு வாழ்ந்திருக்கிறார். முத்தாய்ப்பாக, அரங்கநாயகி அம்மையார் பாடுவது போல் 'சாந்தமே உருவதாகி, சத்திய அணி பூண்டு, மாந்தருள் தலைசிறந்து மாமுனியாக' வாழ்ந்த - 'காந்தியின் அடிச்சுவட்டில் கடமைதனை ஆற்றிய கவி வேந்தர்' இராமநுசக் கவிராயர் தமிழ் கூறு நல்லுலகிற்குக் கிடைத்த 'நல்லதோர் வீணை' என்பது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

-தமிழ் மாருதம், மார்ச் 2007

22

‘தன்னேரிலாத தமிழ் யாப்பு!’

“இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்து அமிழ்தம் என்றாலும் வேண்டேன்!”
- தமிழ் விடு தூது

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர் திருமழிசை ஆழ்வார். இவர் சென்னைக்கு அருகில் உள்ள திருமழிசை என்னும் திருத்தலத்தில் அவதரித்தவர். திருமழிசை ஆழ்வார் அருளிச் செய்த நூல்கள் இரண்டு. 1. நான்முகன் திரு அந்தாதி - 96 வெண்பாக்கள். 2. திருச்சந்த விருத்தம்- 120 விருத்தப் பாக்கள். ஆக மொத்தம் 216 பாசுரங்கள். இவருடைய காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர். இவருக்குப் ‘பக்திசாரர்’ என்ற ஒரு காரணப் பெயரும் உண்டு.

திருமழிசை ஆழ்வார் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த போது கணிகண்ணன் என்ற ஒரு புலவர் அவருக்குச் சீடராகவும் கெழுதகை நண்பராகவும் இருந்தார்; பணிவிடைகளும் செய்து வந்தார். ஒரு தாசியும் அவரிடம் பக்தி பூண்டு அவர் தங்கி இருந்த இடத்தை நாள்தோறும் தூய்மை செய்து மெழுகிக் கோலம் இட்டு வந்தாள். இந்நிலையில் அவளை அந்த நகரத்தை

ஆண்டு வந்த பல்லவ மன்னன் திருமணம் செய்து பட்டத்து அரசியாக்கிக் கொண்டான். அவள் வாயிலாக மன்னன் கணிகண்ணனைக் குறித்தும் திருமழிசையாரைக் குறித்தும் சிறப்பாகக் கேள்விப்பட்டான்.

ஒருநாள் மன்னன் கணிகண்ணனை அழைத்து, ''ஐயா, உமது ஆசாரியரை நம்முடைய அரண்மனைக்கு அழைத்து வாரும்; அந்தப் பெரியவர் என்னை வாழ்த்திப் பாட வேணும்'' என்று வேண்டிக்கொண்டான். அதற்கு மறுமொழியாக, ''திருமழிசையார் மன்னர்களை மதித்துப் பாடார்; மேலும் அவருடைய தமிழ் இறைவனுக்கே உரியது!'' என்றார் கணிகண்ணன்.

உடனே மன்னன் கணிகண்ணனுக்கு முன்னே விலையுயர்ந்த பொன்னையும் இரத்தினங்களையும் குவிக்கச் செய்து, ''நீராவது என் மேல் கவி பாட வேண்டும்'' என்று வற்புறுத்திக் கூறினான். அந்தப் பொருள்களை எல்லாம் ஓடாகவும் கல்லாகவும் மதித்த கணிகண்ணன், 'நாக்கொண்டு மானிடம் பாடேன்!' என்ற தமது குருவின் வாக்கைப் பொய்யாக்குவதில்லை என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். மன்னனோ, உடனே சீற்றம் கொண்டு, ''உம்மை நாடு கடத்தும் படி உத்தரவு பிறப்பிக்கப் போகிறேன்'' என்றான்.

கணிகண்ணன் சடக்கென்று எழுந்து அங்கிருந்து வெளியேறினார்; திருமழிசையாரிடம் சென்று நடந்ததை எல்லாம் எடுத்துரைத்தார்; தமக்கு விடையருள வேண்டும் என்று வேண்டினார். திருமழிசையார் குமிண் சிரிப்போடு, ''நீ போவாயானால், நானும் இங்கு இருக்கப் போவதில்லை'' என்று பதில் கூறினார். பிறகு திருமழிசையார் பெருமாள் கோவிலுக்குப் போய்,

''கணிகண்ணன் போகின்றான்; காமருபூங் கச்சி
மணிவண்ணா! நீ கிடக்க வேண்டா! - துணிவுடைய
செந்நாப் புலவனும் செல்கின்றேன்; நீயும் உன்தன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்!''

என்று பாடி விட்டுத் தமது சீடரான கணிகண்ணனைப் பின்தொடர்ந்தார்.

பெருமாளும் பளிச்சென்று தனது படுக்கையைச் சுருட்டிக் கொண்டு இலட்சுமி தேவியோடு திருமழிசையாருக்குப் பின்னே பயணம் மேற்கொண்டாராம். முன்னே சீடர் , பின்னே குரு, தொடர்ந்து பெருமாள்! இப்படி இவர்கள் மூவரும் வரிசையாகப் போவதைக் கண்டு பக்தர்களும் ஊர்ப் பொதுமக்களும் இவர்களைத் தொடர்ந்து பின்சென்றார்கள்.

இராமனைப் பிரிந்த அயோத்தி போல் ஆகிவிட்டது காஞ்சிபுரம். மன்னன் தன் தவற்றை உணர்ந்து ஓடோடி வந்து கணிகண்ணனை வணங்கினான்; ஊருக்குத் திரும்புமாறு பணிவுடன் அவரிடம் வேண்டிக் கொண்டான். அப்போது திருமழிசையார் பெருமாளைப் பார்த்து,

''கணிகண்ணன் போக்கொழிந்தான்; காமருபூங் கச்சி
மணிவண்ணா! நீ கிடக்க வேண்டும்! - துணிவுடைய
செந்நாப் புலவனும் செலவொழிந்தேன்; நீயும் உன்தன்
பைந்நாகப் பாய்படுத்துக் கொள்!''

என்று தாம் முன் பாடிய பாடலையே சிறிது மாற்றிப் பாடினார்.

பெருமாளும் பக்தர்களும் ஊர்ப் பொதுமக்களும் திரும்பியதும், நகரம் முன் போல் பொலிவு பெற்றது. தாம்

சொன்ன படி செய்த பெருமாளுக்குத் திருமழிசையார் **'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்'** என்ற ஒரு புதிய பெயரைச் சூட்டினார். திருமழிசையாரும் இந் நிகழ்வுக்குப் பிறகு 'திருமழிசை யாழ்வார்' என்று போற்றப் பெற்றார். மன்னனும் ஆழ்வாருக்குத் தொண்டு புரியலானான்.

திருமழிசையாழ்வார் பாடிய இரு பாடல்களையும் அருகருகே வைத்து ஒப்பிட்டுப் பார்ப்போருக்குத் தமிழின் அருமையும் எளிமையும், அழகும் ஆற்றலும் நன்கு விளங்கும்.

கணிகண்ணன் போகின்றான் x கணிகண்ணன் போக்கொழிந்தான்

மணிவண்ணா! நீ கிடக்க வேண்டா x மணிவண்ணா! நீ கிடக்க வேண்டும்

செந்நாப் புலவனும் செல்கின்றேன் x செந்நாப் புலவனும் செலவொழிந்தேன்

நீயும் உன்தன் பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்! x நீயும் உன்தன் பைந்நாகப் பாய் படுத்துக் கொள்!

தமிழ் மொழி எந்தச் சூழலுக்கும் ஈடுகொடுத்து நிற்க வல்ல தனித்தன்மை வாய்ந்தது என்பதைப் பறைசாற்றும் விழுமிய நிகழ்வு இது!

'பாட்டுக்கொரு புலவர்' பாரதியாரின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி. இந் நிகழ்ச்சி 1897க்கு மேல் 1898க்குள் நடந்திருக்க வேண்டும் எனப் பேராசிரியர் ம.ரா.போ. குருசாமி 'பாரதி பாடல்கள் ஆய்வுப் பதிப்'பில் (பக்.4; 933-934)

குறிப்பிட்டுள்ளார். ஆய்வுப் பதிப்பில் பதிவாகியுள்ள அந் நிகழ்ச்சி வருமாறு:

ஒருமுறை தமிழில் சிறந்த புலமை வாய்ந்த சோணாசலம் பிள்ளை அவர்களின் புதல்வர் திரு. காந்திமதிநாத பிள்ளை, வயதில் இளையவரான பாரதியை மடக்கக் கருதி, 'பாரதி சின்னப் பயல்' என்ற ஈற்றடியைக் கொடுத்து, கவி ஒன்று பாடும் படி சொன்னார்.

அப்போது காந்திமதி நாதபிள்ளை அவர்களே நாணித் தலை குனியும் வண்ணம் பாரதியார் பாடிய பாடல் இது:

''ஆண்டில் இளையவனென் றந்தோ, அகந்தையினால்
ஈண்டிங் கிகழ்ந்தென்னை ஏளனஞ்செய் - மாண்பற்ற
காரிருள்போ லுள்ளத்தான் காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயல்.''

சிறிது நேரத்தில் வயதில் பெரியவரான பிள்ளை அவர்களின் மனத்தைப் புண்படுத்தியதற்காக வருந்திய பாரதியார், ''ஐயா, என்ன இருந்தாலும் தாங்கள் எனக்கு வயதில் மூத்தவர், நான் உண்மையில் சின்னப்பயல் தானே? தங்கள் மனம் நோகும் படி செய்ததற்கு மன்னிக்க வேண்டுகின்றேன்'' என்று கூறி, பாட்டை அடியோடு மாற்றியமைத்துப் பாடினார். அப்படி அவர் மாற்றியமைத்துப் பாடிய பாடல் இது:

''ஆண்டி லிளையவனென் றைய, அருமையினால்
ஈண்டின்றென் றன்னைநீ யேந்தினையால் - மாண்புற்ற
காரதுபோ லுள்ளத்தான் காந்திமதி நாதற்குப்
பாரதி சின்னப் பயல்.''

பாரதி முதலில் பாடிய பாடலையும், பிறகு அவரே மனம் மாறி மாற்றி அமைத்துப் பாடிய பாடலையும் அருகருகே வைத்து ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ் மொழி எந்த அளவுக்குப் பாரதிக்கு ஏவல் புரிந்து நிற்கிறது என்பது விளங்கும்.

அந்தோ, அகந்தையினால்	x	ஐய, அருமையினால்
ஈண்டிங்கு இகழ்ந்து என்னை ஏளனஞ்செய்	x	ஈண்டின்று என்னை நீ ஏந்தினையால்
மாண்பற்ற	x	மாண்புற்ற
காரிருள் போல் உள்ளத்தான்	x	காரதுபோல் உள்ளத்தான்
காந்திமதி நாதனைப் பார் அதி சின்னப் பயல்	x	காந்திமதி நாதற்குப் பாரதி சின்னப் பயல்

திருமழிசை ஆழ்வாரின் பாடல்களையும் பாரதியாரின் பாடல் களையும் ஊன்றிப் பயில்வார்க்கு விளங்கும் உண்மை ஒன்று உண்டு. அது வருமாறு: ''தமிழ் யாப்பு அருமையானது; அதே சமயத்தில் அது எளிமையானதும் கூட. அழகானது; அதே வேளையில் அது ஆற்றல் வாய்ந்ததும் ஆகும். இயல்பானது; அதே நேரத்தில் எந்தச் சூழலுக்கும் ஈடு கொடுத்து நிற்கும் வல்லமையும் அதற்கு உண்டு. இடைவிடாத முயற்சியும் முறையான பயிற்சியும் இருந்தால் எவரும் தமிழ் யாப்பினை'' ஏவல் கொள்ளலாம்; எவருக்கும் தமிழ் யாப்பு வசப்படும்.

-புதுகைத் தென்றல், மார்ச் 2007

23

வித்தியாசம்+தனித்துவம்=வெற்றிச்செல்வன்

"ஒரு தொகுப்பு வாசித்த நிறைவை வெகு காலத்துக்குப் பிறகு கொடுத்ததற்காக மனத்தடி நீரை மனதார முத்தமிடுகிறேன்."

- யுக பாரதி *

''இடதுசாரிச் சிந்தனையோடு இயங்குகிற மிகச் சில கவிஞர்களில் தெ.வெற்றிச்செல்வன் தனித்துவமானவர். நாடும் மனிதரும், சமூகமும் அரசியலும், மரபு மீறலும் மீட்டுருவாக்கமும் இவரது விரல்களில் மையம் கொள்கின்றன... நுட்பமான கவனிப்பும் திட்பமான எழுத்து முறையும் நெற்றி மத்திக்கு புருவத்தை இட்டுச் செல்கிறது'' (ப.12) என்னும் யுகபாரதியின் அறிமுகக் குறிப்பு, தெ.வெற்றிச்செல்வனின் கவிதை உலகிற்கு நம்மை அழைத்துச் செல்லும் வல்லமை பொருந்தியதாகும்; வெற்றிச்செல்வனின் ஆளுமைப் பண்பினை அடையாளம் காட்டும் திறமும் தன்னகத்தே கொண்டதாகும். 'மனத்தடி நீர்' (2003) என்னும் தலைப்பே படிப்பவரின் ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டுவதாகத் திகழ்கின்றது. '' 'ஈரத்திலேயே படுத்து, ஈரத்திலேயே உறங்கி, ஈரத்திலேயே கிடந்து உழல்கிறார்கள்

* 'வெளியேற முடியாத மைதானத்துக்குள் பந்தாடப்படுகிற எழுத்து, மனத்தடி நீர், ப.13.

ஜனங்கள். உலர்ந்த தமிழன் மருந்துக்குக் கூட கிடையாது' என்கிற வசன கவிதையில் பாரதிக்கு 'ஈரம்' என்பது அடிமைத்தனத்தின் குறியீடானது போல் ஈரம், ஈவு, இரக்கம், மனித நேயம் எல்லாம் வறட்சியின் குரூரத்தில் சிக்கியுள்ளதை 'மனத்தடி நீர்' என்று குறியீடாக்கியிருக்கிறேன் நான்'' (ப.8) என்னும் கவிஞரின் கூற்று, அவரது உள்ளக் கருத்தைத் தெள்ளிதின் உணர்த்துவதாகும். நிலத்தடி நீர் அற்றுப் போன பூமியின் வறட்சியை மனத்தடி நீர் போக்கக் கூடும். மனத்தில் உள்ள நீரால் தான் இவ் வையகம் சுழல்கிறது. 'நீரின்றி அமையாது உலகு' என்பது இதுதான். வெற்றிச் செல்வனின் 'வெள்ளத்தனையது...' என்ற கவிதை இவ் வகையில் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தது.

''இரண்டு விதைகள் / விதைத்தேன்.

●

ஒன்று இந்த நிலத்தில்.
விதையுறை கிழித்து/ தளிர் மேலே வேர் கீழே
பயணத்தின் முடிவில் / தந்தது பலன்
நிலத்தடி நீர்.

●

ஒன்று உன் மனத்தில்.
மனத்தினூடே ஊடுருவி
முட்டி மோதி / பாறை பிளந்தும்
வாடி வதங்கி / கருக வைத்தது
மனத்தடி நீர்'' (ப.82)

'மனத்தடி நீர்' - பொருள் பொதிந்த சொல்லாட்சி! இதே போல் பிறிதோர் இடத்தில் 'மனங்கொத்திப் பறவைகள்' (ப.72)என்ற அழகிய செல்லாட்சியைக் கையாண்டுள்ளார் கவிஞர்.

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' (திருக்குறள், 34) என அறம் என்பதற்கு இரத்தினச் சுருக்கமாக வரைவிலக்கணம் வகுப்பார் வான்புகழ் வள்ளுவர். வெற்றிச்செல்வன் வள்ளுவரின் கருத்தை நினைவூட்டும் விதத்தில் 'இண்ட்டீரியர் டெக்கரேஷன்...' என்னும் தலைப்பில் (ஆங்கிலத் தலைப்பு படிப்பவர் மனத்தில் ஒரு நெருடலைத் தோற்றுவிப்பது என்பது என்னவோ உண்மை தான்!) ஒரு கவிதை படைத்துள்ளார். இதில் உள் அலங்காரத்தில் வெளிநாட்டுப் பட்டம் பெற்ற ஒரு பெண் வருகிறாள். அவளால் வீட்டினுள் அழகிய கலைக் கூடம் எழுப்ப முடியும். இன்னும் அறைகள், அலமாரிகள், சுவர்ப் படங்கள், வண்ணக் கலவை, கலையம்சம், செய்நேர்த்தி, லொட்டு லொசுக்கு, இத்யாதி இத்யாதி எல்லாம் அவளுக்கு அத்துபடியே. என்றாலும், உதட்டுச் சாயம் கலையாமல் துக்கம் விசாரித்துப் போவதில் கவிஞருக்கு உடன்பாடு இல்லை. எனவே,

''என்ன படித்து என்ன
மனதை
அலங்கரிக்கத் தெரியாமல்'' (ப.90)

என முத்தாய்ப்பாக அக் கவிதையை முடிக்கின்றார் கவிஞர். உண்மையில் 'உள் அலங்காரம்' என்பது 'உள்ள அலங்காரமே' ஆகும். மனதை அலங்கரிக்கத் தெரியாமல் - மனத்துக்கண் மாசு படிய விட்டுவிட்டு- மற்றவற்றை எல்லாம் அலங்காரமாக வைத்துக் கொள்வதில் யாதொரு பயனும் இல்லை. வள்ளுவர் மொழியில் சுட்ட வேண்டும் என்றால் 'ஆகுல நீர பிற'. இதனையே வேறு சொற்களில் 'என்ன படித்து என்ன?' என்று நறுக்குத் தறித்தாற் போல் கேட்கிறார் வெற்றிச்செல்வன்.

யுகபாரதி அணிந்துரையில் குறிப்பிடுவது போல், ''உவமைகளின் மடியில் உறங்க நினைக்கின்ற கவிதைகளை விட உண்மைகளின் தோள்களை உரசிச் செல்கிற கவிதைகளே இவரிடம் (வெற்றிச் செல்வனிடம்) அதிகம்'' (பக்.10-11). வெற்றிச்செல்வனின் கவிதை மொழி வித்தியாசமானது; தனித் தன்மை வாய்ந்தது. 'கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்' என்பது போல், 'வித்தியாசம் + தனித்தன்மை = வெற்றிச்செல்வன்' என நாம் சுட்டலாம். பதச்சோறாக, வெற்றிச்செல்வனின் காதல் கவிதை ஒன்று இதோ:

''தீண்டாமை ஒரு பாவச் செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை ஒரு மனிதத் தன்மையற்ற செயல்
அறிவாய் தானே நீ

வா
தீண்டு (ப.77)

காதல் உணர்வையும் சமூக உணர்வையும் இங்கே அழகாக முடிச்சுப் போட்டுள்ளார் கவிஞர்.

இதுவரை தமிழ்மொழி தான் உயர்தனிச் செம்மொழி (Classical Language)என்று நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் வெற்றிச் செல்வன் படைக்கும் காதலன் ஒருவனோ வேறு கோணத்தில் சிந்திக்கிறான். அவனது கருத்தில் காதலியின் மொழியும் உயர்தனிச் செம்மொழி தானாம்! எப்படி என்கிறீர்களா? இதோ அவனது கூற்று:

''உதடுகளால் கேட்கவும்
கண்களால் பேசவும்
முடியுமென்றால்
உனது மொழி
உயர்தனிச் செம்மொழிதான்'' (ப.28)

'உயர்தனிச் செம்மொழி' என்ற கருத்தாக்கம் இங்கே கவிஞரால் எத்துணை நயமாகக் கையாளப்பட்டிருக்கிறது பாருங்கள்!

மனித வாழ்வில் இருந்து எதை வேண்டுமானாலும் நீக்கலாம்; ஆனால் காதலை மட்டும் நீக்கவே முடியாது. வாழ்வுடன் நீக்கமறக் கலந்திருக்கும் ஓர் அடிப்படை உணர்வே காதல் என்பது கவிஞரின் அழுத்தம் திருத்தமான கருத்து. 'நீக்கமற...' என்ற அவரது கவிதை இவ் வகையில் நினைவுகூரத்தக்கது. அக் கவிதை வருமாறு:

''வாழ்விலிருந்து
கலையை நீக்கிவிட்டால்
கால்வாசி உலகு கரைந்து போய்விடும்

அறிவியலை நீக்கி விட்டால்
அரைவாசி உலகு அழிந்து போய்விடும்

போராட்டத்தை நீக்கிவிட்டால்
முக்கால்வாசி உலகு மூழ்கிப் போய்விடும்

வாழ்விலிருந்து
காதலை...'' (ப.49)

இங்கே காதலின் ஆற்றலைச் சொல்லாமல் சொல்லியுள்ளார் கவிஞர். கலை, அறிவியல், போராட்டம் ஆகிய அனைத்திற்கும்

மேலாக வாழ்வை இயக்கக்கூடிய ஒரு பேராற்றல் காதல் ஆகும். எனவே வாழ்விலிருந்து காதலை ஒருகாலும் நீக்க முடியாது என்பதில் உறுதியாக இருக்கிறார் கவிஞர்.

வெற்றிச்செல்வன் கையாளும் உவமைகள் அவர் வித்தியாசமான சிந்தனைக்குச் சொந்தக்காரர் என்பதற்குக் கட்டியம் கூறுகின்றன. அவை அவரது கூர்பார்வையை மட்டுமன்றி, அடிமனத்தில்- ஆழ்மனத்தில்- குடிகொண்டிருக்கும் சமூக உணர்வையும் புலப்படுத்தி நிற்கின்றன. ஓரிரு சான்றுகள் போதும் இக் கருத்தினை நிலைநிறுத்த:

''பிரசவத் தழும்பு போல
மறைந்து போகாமலே
அலையடிக்கிற ஞாபகங்கள்'' (ப.18)

'' மலர்ந்த உதடுகள் உருகிச் சுருங்குகின்றன
விளக்கில் பட்ட பாலிதீன்பை போல
எதார்த்தத்துக்கு மீள்கையில் '' (ப.40)

'' கூடிக்கொண்டே போகிறது
முதிர்கன்னிகளைப் போலவே,
தரிசு நிலப் பரப்பு'' (ப.71)

'' தடைகளைத் தகர்த்து
திருட்டுத்தனமாக காதலியை
இழுத்துக் கொண்டோடும் காதலனைப் போல....
நானும் ஓடிக் கொண்டிருக்கிறேன்
என் கவிதையை இழுத்துக்கொண்டு'' (ப.94)

-கவிஞரின் ஆளுமைப் பண்பை அடையாளம் காட்டும் அழகிய உவமைகள் இவை:

கவிதைக்கு எது முக்கியம்? உருவமா? உள்ளடக்கமா? உத்தியா? கவிதை எப்போது வெற்றி பெறுகிறது? ஒரு கருத்தைத் திறம்படச் சொல்வதிலா? அல்லது ஒரு கருத்தைச் சொல்லாமல் சொல்வதிலா? குறிப்பாகப் புலப்படுத்துவதிலா? கவிதையின் இலக்கணம் உரைப்பதா? உணர்த்துவதா? கவிதை இயலில் காலங்காலமாகக் கேட்கப்பட்டும் விவாதிக்கப்பட்டும் வரும் இவ்வினாக்களுக்கு எல்லாம் வெற்றிச்செல்வனின் ஒரே ஒரு கவிதையைக் கொண்டு சரியான விடையைச் சொல்லி விடலாம். அவ் விடையை உள்ளடக்கிக் 'கோடிட்ட இடங்களை நிரப்பிக் கொள்க' என்னும் தலைப்பில் கவிஞர் படைத்துள்ள கவிதை வருமாறு:

''அடித்துத் துவை
நுரைக்கக் கும்மு
நீலம் நனை
காய வை
சுடு நெருப்பில்
இஸ்திரி செய்
எல்லாவற்றுக்கும் முன்
துணிகளை மட்டுமல்ல
நன்கு வேகவிடு
.... வெள்ளாவியில்

<u>குறிப்பு</u>

(உங்கள் விருப்பம் போல்
நிரப்பிக் கொள்வதற்கான
விடைகள் சில)

1. துரோகக் காதலை

2. மோசடி நட்பை

3. ஏமாற்று அரசியலை

4. வக்கிர புத்தியை'' (ப.83)

உருவமும் உள்ளடக்கமும் கச்சிதமாகப் பொருந்தி இருக்கும் - கை குலுக்கி நிற்கும் - கவிதை இது. ஒரு நல்ல கவிதையில் உருவம், உள்ளடக்கம், உத்தி என்னும் மூன்றும் சரியான விகிதத்தில் கலந்து நிற்கும். 'கோடிட்ட இடங்களை நிரப்புவது' என்பது நம் கல்வி முறையில் இளமையில் இருந்தே பயின்று வரும் ஒரு முறை. இதனை இக் கவிதையில் திறம்படப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் கவிஞர். அடுத்து, உள்ளடக்கம். இன்று சமுதாயத்தில் அங்கிங்கு எனாதபடி எங்கும் நீக்கமறக் காணப்படுவது - அடிக்கடி அரங்கேறி வருவது - துரோகக் காதலும் மோசடி நட்பும் ஏமாற்று அரசியலும் வக்கிர புத்தியும்தான். இன்றைய சமூகத்தில் மேலோங்கிக் காணப்படும் நான்கு முக்கியமான அவலங்களை இங்கே நிரல்படுத்தித் தந்துள்ளார் கவிஞர். மூன்றாவது, உத்தி. 'இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால்...' என்பது போல் எல்லாவற்றையும் தாமே விரிவாகச் சொல்லி விடாமல், 'குறிப்பு' என்னும் உட்தலைப்பில் வாசகர்களே தங்கள் விருப்பம் போல் நிரப்பிக் கொள்வதற்கான சில விடைகளையும் கவிஞர் தந்திருப்பது தனிச்சிறப்பு.

நம் நாட்டில் கடவுளர் யாவரும் அவரவர்க்கு உரிய இடத்தில் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் உள்ளனர்; அவரவர் ஆற்றும் தொழில்களும் எவ்வித இடையூறும் இல்லாமல் நல்ல வண்ணமே நடைபெற்று வருகின்றன. ஒரு தனிப்பாடல்

நயமாகக் குறிப்பிடுவது போல், சிவபெருமான் சுடுகாட்டில் ஆடிக் கொண்டிருக்கிறார்; திருமால் பாற்கடலில் துயின்று கொண்டிருக்கிறார்; விநாயகர் மரத்தடியில் அமர்ந்த வண்ணம் வருவோர் போவோரைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்; முருகப் பெருமான் மலை மீது குடி கொண்டிருக்கிறார். நாட்டு மக்களின் கதிதான் அதோகதியாக உள்ளது. இதனை 'நச்' சென்ற நடையில் எடுத்துக்காட்டுகிறது வெற்றிச்செல்வனின் 'நாங்கள்...?' என்னும் குறுங்கவிதை:

''வைகையாற்றில்
கள்ளழகர்

காவிரியாற்றில்
ரங்கநாதர்

திருவையாற்றில்
பஞ்சநதீஸ்வரர்

நட்டாற்றில்
ஜனங்கள்'' (ப.63)

'ஆனந்த விகடன்' இதழ் வாயிலாக வெற்றிச்செல்வனை அடையாளம் காட்டிய முத்திரைக் கவிதை இது!

'ஒரு கல்லில் இரு மாங்காய் அடித்தல்' என்பார்கள். வெற்றிச் செல்வன் ஒரே கல்லில் சில சமயங்களில் இரண்டு மாங்காய்களை அல்ல, இரண்டிற்கும் மேற்பட்ட மாங்காய்களைக் குறி தவறாமல் அடித்து விடுகின்றார். 'பாடம்' என்ற கவிதை இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு:

''மம்மி என்கிறது
வரலாறு,
பாடம் பண்ணிய உடலை,

மம்மி என்கிறது
கான்வென்ட் குழந்தை,
தாயை.

பாடம் பண்ணிக் கொண்டிருக்கிறோமோ
உயிருடன் தாயை?'' (ப.73)

இன்றைய கல்வி முறை பற்றிய விமர்சனம், இந்நிலையே நீடித்தால் எதிர்காலத்தில் தாய்- சேய் உறவு எதிர்கொள்ளப் போகும் விரிசல், தாய்மொழி வழியே கல்வியைப் பெறாமையால் இன்றைய இளைய பாரதம் 'இளைத்த பாரத'மாய்க் காணப்படும் அவலம் எனப் பன்முகப் பரிமாணங்களைப் பாங்குடன் வெளிப்படுத்துகின்றது இக் கவிதை.

இன்று எங்கெங்குக் காணினும் 'முன்னாள்க'ளின் ஆதிக்கமே மேலோங்கிக் காணப்படுகின்றது. பத்திரிகையையோ அழைப்பிதழையோ புரட்டினால் 'முன்னாள் குடியரசுத் தலைவர்', 'முன்னாள் பிரதமர்', 'முன்னாள் மந்திரிமார்கள்' - இப்படிச் சில 'முன்னாள்க'ளைப் பார்க்கிறோம். கூட்டங்களுக்குச் சென்றாலோ 'முன்னாள் தலைவர்கள்', 'முன்னாள் செயலர்கள்', 'முன்னாள் அதிகாரிகள்' என்றாற் போல் சில 'முன்னாள்கள்' பேசக் கேட்கிறோம். இந்நிலையில் கவிஞர் நம்மை நோக்கி முன் வைக்கும் சாட்டையடி விமர்சனம் இதுதான்:

''குறையொன்றுமில்லை
எல்லாம் சரி தான்.

கேவலமானது என்னவென்றால்
நாம் வசித்துக் கொண்டிருக்கிறோம்
முன்னாள் மனிதர்களோடு.'' (ப.80)

இப்படி நீக்கமற நம்மை ஆட்டிப் படைக்கும் 'முன்னாள் மோக'த்தில் இருந்து விடுபட்டு நாம் என்று 'சொந்த முக'த்தோடு நடமாடப் போகிறோம்? எந்த 'முகமூடி'யும் அணிந்து கொள்ளாமல் இயல்பான 'முகவரி'யுடன் இயங்கப் போகிறோம்?- இதுவே நம்மை நோக்கிக் கவிஞர் தொடுக்கும் கூரிய கேள்விக்கணை,

காபித் தூளில் - டீத் தூளில் - பாலில் - சமையல் எண்ணெயில் - பானங்களில் - இன்ன பிற பதார்த்தங்களில் கலந்து விட்ட விஷம் பற்றிப் பரவலாகக் கேள்விப்பட்டு வருகிறோம்; வீதி நெடுக நிகழும் விரிவுரைகளும் இதனை உணர்த்தி வருகின்றன. ஆனால், நாம் இன்று உணர்ந்து கொள்ள வேண்டிய ஓர் அடிப்படையான உண்மை என்ன தெரியுமா? இதோ, கவிஞரே அதனைத் தம் கவிதை ஒன்றில் எடுத்துக்காட்டு கின்றார்:

''இதிலென்ன அதிசயம்
குழந்தை கருவில் சுவாசிக்கும்
பனிக்குட நீரையே
விஷமாக்கிவிட்டது
நூற்றாண்டுகளின் ஆட்சி'' (ப.55)

அதையும் இதையும் தொட்டுக் கடைசியில் அடிமடியிலேயே கை வைப்பது போல், நூற்றாண்டுகளின் ஆட்சி குழந்தை கருவில் சவாசிக்கும் பனிக்குட நீரையே விஷமாக்கிவிட்டது! இந்தப் பேரவலத்தில் இருந்து எப்படி மீளப்போகிறது மனித குலம்? இதுவே கவிஞரின் ஆழ்ந்த கவலை.

நீண்ட கால இடைவெளிக்குப்பிறகு தமிழ்ப் புதுக்கவிதை உலகிற்குக் கிடைத்துள்ள நல்வரவு வெற்றிச்செல்வனின் 'மனத்தடி நீர்' தொகுப்பு. அவரே குறிப்பிடுவது போல், 'இந்தக் கவிதைகளின் மடியில் தலைசாய்த்து ஓய்வெடுத்தால், விரல் நீவி தலைகோதி தாலாட்டாய் - பள்ளியெழுச்சியாய் - உற்சாகமாய் - உடல்நலக் குறைவையும் மனநலக் குறைவையும் குணப்படுத்தும் இக் கவிதைகள்' (ப.14).

- புதிய காற்று, ஏப்ரல் 2007

24

நிலவு போல் நிலைத்து நிற்கும் படைப்புப் பல படைக்கும் படைப்பாளி: வெ. இறையன்பு

"அவரவர்
பின்னைப் பிராயம்
அவரவர்க்கும் வாய்ந்த
அற்புதக் கவிதை"

- கந்தர்வன்★

பாரதி, புதுமைப்பித்தன், மு.வரதராசன், ஜெயகாந்தன் ஆகியோர் வரிசையில் இடம்பெறத் தக்க தரமும் திறமும் வாய்ந்த படைப்பாளி வெ.இறையன்பு. அவர் நல்லதோர் படைப்பாளி மட்டுமல்லர்; ஓயாத படிப்பாளியும் கூட, சுருங்கக் கூறின், 'ஐ.எஸ்.ஐ' (I.S.I.) முத்திரை பெற்ற 'ஐ.ஏ.எஸ்.' (I.A.S.) அதிகாரி அவர். அவரது ஆளுமை பன்முகப் பரிமாணங்கள் கொண்டது. அவர் எழுத்திலும் பேச்சிலும் வல்லவர்; அவரால் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒருங்கே திறம்பட எழுதவும் பேசவும் முடியும். ஜெயகாந்தனுக்கும் கண்ணதாசனுக்கும் பிறகு சிரிக்கவும் சிந்திக்கவும் சிலிர்க்கவும் வைக்கும் குறுங்கட்டுரைகள் படைப்பதில் முத்திரை பதித்து வருபவர் இறையன்பு. 'ஐ.ஏ.எஸ்.

★ கந்தர்வன் கவிதைகள், ப.190.

தேர்வும் அணுகுமுறையும்' (1996), 'ஐ.ஏ.எஸ். வெற்றிப் படிக்கட்டுகள்' (2005) என்பன அவரது பட்டறிவின் பயனாய்த் தோன்றிய இரு அரிய நூல்கள். அவரது நோக்கில் 'படிப்பது சுகமே!' (2000). 'ஏழாவது அறிவு' (மூன்று பாகங்கள்: 1999, 2002,2005). 'உள்ளொளிப் பயணம்' (2000), 'ஓடும் நதியின் ஓசை' (இரு பாகங்கள்:2001,2002), 'மென்காற்றில் விளை சுகமே!' (2002), 'வேடிக்கை மனிதர்கள்' (2005) ஆகியவை இறையன்புவின் சிந்தனைத் திறத்தைப் பறைசாற்றும் கட்டுரை நூல்கள், 'சுயத்தை உணர்வதே உண்மையான சுய முன்னேற்றம்' (ஓடும் நதியின் ஓசை, முதல் பாகம், ப.4) என்பது இறையன்புவின் அழுத்தம் திருத்தமான கருத்து; 'நான் பகிர்ந்து கொள்ள விரும்புபவை என் அனுபவங்களை' (ப.4) என்பது அவரது ஒப்புதல் வாக்குமூலம். 'அரிதாரம்', 'ஆத்தங்கரை ஓரம்' ஆகிய இரண்டும் இறையன்புவின் புனைகதைத் திறனுக்குக் கட்டியம் கூறும் படைப்புக்கள். 'சின்னச்சின்ன வெளிச்சங்கள்' (1979) இறையன்பு படைத்துள்ள அழகிய தத்துவக் கதைகளின் தொகுப்பு; ஓர் எளிய வாசகரின் கடிதமே இந் நூலுக்கு அணிந்துரையாக இடம் பெற்றிருப்பது தனிச்சிறப்பு. தி.லீலாவதி, அப்துல் ரகுமான், தமிழன்பன், சுஜாதா ஆகியோர் வரிசையில் ஹைகூ கவிதைக்கு அரணும் அழகும் சேர்த்து வருபவர் இறையன்பு. 'முகத்தில் தெளித்த சாரல்' (2001) இவ் வகையில் நினைவுகூரத்தக்க நூல். 'வாய்க்கால் மீன்கள்' என்னும் தலைப்பில் முன்னர் (1995) ஒரு கவிதை நூலைப் படைத்த இறையன்பு, தற்போது 'பூபாளத்திற்கொரு புல்லாங்குழல்' (2006) என்ற அண்மைப் படைப்பின் வாயிலாகத் தமக்குக் கவிதைக் கலையும் கைவந்த ஒன்றே என்று மீண்டும் தரணிக்குக் காட்டியுள்ளார்.

'நியூ செஞ்சுரி புக் ஹைவுஸ் (பி) லிட்' நிறுவனத்தார் வெளியிட்டுள்ள இந் நூலில் 73 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. ஓவியர் கோபனின் கை வண்ணத்தில் உருவான அழகிய வரைபடங்கள் இந் நூலில் சேர்க்கப் பெற்றுள்ளன. இவை கவிதைகளுக்குக் கூடுதல் மெருகினைத் தருகின்றன. இனி, ஒரு கவிஞர் என்ற நிலையில் இறையன்புவிடம் குடிகொண்டிருக்கும் படைப்புத் திறனும் ஆளுமைப் பண்பும் குறித்துச் சுருங்கக் கண்டோம்.

பாரதியின் வழியில் 'பாட்டுத் திறத்தாலே இவ் வையத்தைப் பாலித்திட வேண்டும்' என்பதே கவிஞர் என்ற முறையில் இறையன்புவின் தலையாய நோக்கமாக உள்ளது. அதே நேரத்தில் பாரதிதாசனை அடியொற்றிக் 'கெட்ட போரிடும் உலகினை வேரொடும் சாய்த்து, புதியதோர் உலகம் படைக்க வேண்டும்' என்ற முனைப்பும் இறையன்புவிடம் மேலோங்கிக் காணப்படுகின்றது. பதச் சோறாக, சாதிக் கொடுமைக்கு எதிராக அவர் தம் கவிதைகளில் ஆங்காங்கே வெளியிட்டுள்ள கருத்துக்களை இங்கே சுட்டிக்காட்டலாம். இட்டார், இடாதார் எனச் 'சாதி இரண்டொழிய வேறில்லை' என ஆணித்தரமாகப் பறையறைந்தார் தமிழ் மூதாட்டி ஔவையார். 'சாதி ஆவது ஏதடா?' என ஆவேசமாகக் கேட்டார் சித்தர் சிவவாக்கியார். 'சாதிகள் இல்லையடி பாப்பா!' எனப் பாடி வளரும் தலைமுறைக்கு வழிகாட்டினார் பாரதியார். 'சாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே' என நெஞ்சு பொறுக்காமல் தம் வேதனையைப் பதிவு செய்தார் பாரதிதாசன். இறையன்புவும் தம் பங்கிற்கு 'விரலைக் கிள்ளும் நகம்' என்னும் கவிதையில் அங்கதச் சுவையோடு சாதிக் கொடுமைக்கு எதிரான தம் கருத்தினைப்

பதிவு செய்துள்ளார். நகைச்சுவை இழையோடும் அக் கவிதை இதோ:

''சுப்ரமணிய செட்டியார் / நகரில்
கோவிந்தசாமி முதலியார் / தெருவில்
ராமசாமி நாயக்கர் / சந்தில்
குப்புசாமி ஆசாரி / மண்டபத்தில்
நடக்கும் / கவிதைப் போட்டி
தலைப்பு / 'சாதிகள் இல்லையடி பாப்பா!' ''
(ப.32)

'எங்கெங்குக் காணினும் சக்தியடா!' என்று பாடினார் பாரதிதாசன்; இன்றைய சூழலோ நகர்- தெரு- சந்து- மண்டபம் என 'எங்கெங்குக் காணினும் சாதியடா!' என்னும் சொல்லத் தக்க அளவில் சாதிப் பேயே எங்கும் தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றது. இதனை வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவது போல் இக் கவிதையில் அழகுற எடுத்துக்காட்டியுள்ளார் இறையன்பு.

'மற்ற நாட்டினர் / செவ்வாய்க்கும், புதனுக்கும் / வியாழனுக்கும்/ செல்ல / ஆயத்தமாகி விட்டார்கள் / நாம் மட்டும் / சாதியை ஆராய்ந்து கொண்டு / சனியிலேயே இருக்கிறோம்' (ப.67) என 'எதிர்காலச் சூரியன்' என்னும் பிறிதொரு கவிதையிலும் சாதிக் கொடுமைக்கு எதிரான தம் கருத்தினை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார் கவிஞர்.

'தூங்கிக் கொண்டிருக்கின்ற தமிழன், தாலாட்டு பாடினால் இன்னமும் குறட்டை விட்டுத் தூங்கத் தொடங்கி விடுவான்' என்று கருதியோ என்னவோ பாரதியார் தாலாட்டு பாடவில்லை;

அவர் வழி வந்த பாரதிதாசனோ 'ஆண் குழந்தை தாலாட்டு', 'பெண் குழந்தை தாலாட்டு' என்று தனித்தனியே ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் பாடினாலும், அவற்றில் சமுதாய மறுமலர்ச்சியையும் முற்போக்குச் சிந்தனையையும் பாடுபொருளாக அமைத்துக் கொண்டார். பாரதிதாசனை அடியொற்றி இறையன்புவும் விழிப்புணர்வைப் பாடுபொருளாகக் கொண்டு 'விழிக்க ஒரு தாலாட்டு' என்னும் தலைப்பில் ஒரு கவிதை பாடியுள்ளார். அதில் தாய்மார்களுக்குக் கவிஞர் விடுக்கும் அன்பான வேண்டுகோள் இதுதான்:

''தாய்மார்களே!...
உங்கள் குழந்தைகளுக்கு/ அயோத்தி ராமனைப் பற்றிக்
கூறுவதோடு / நிறுத்திக் கொள்ளாதீர்கள்
சர் சி.வி. ராமனைப் பற்றியும் / ஆழமாய் விதையூன்றுங்கள்.

ஐயப்பனின் / கதையை மட்டுமல்ல
ஐன்ஸ்டினின் / ஆய்வைப் பற்றியும்
அறிவைப் புகட்டுங்கள்'' (பக்.97-98)

'இலட்சியத் தீ/ இதயம் முழுவதும் வியாபித்து / ஏதாவது / சாதித்துத் தீர வேண்டும் / என அவர்களைத் / தீர்மானிக்கச் செய்யுங்கள்' (ப.98) என்பதே கவிஞர், தாய்மார்களுக்கு இடும் அன்புக் கட்டளை. 'தூங்கும்பொழுது கூட / இதயத்தில் / விழிப்புணர்வு விரவ வேண்டும்' (ப.99) என அறுதியிட்டு உரைக்கும் கவிஞர், குழந்தைகளின் பிஞ்சு நெஞ்சங்களில் விழிப்புணர்வை விதைக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளார்; உறுதியாகவும் உள்ளார்.

இன்றைய ஆணாதிக்கச் சமுதாயம் பெண் குலத்திற்கு இழைத்து வரும் பல்வேறு கொடுமைகளுக்கு எதிராக அழுத்தமாகவும் ஆழமாகவும், பரிவுடனும் பொறுப்புடனும் தம் கவிதைகளின் வாயிலாகக் குரல் கொடுக்கத் தவறவில்லை இறையன்பு. 'பெண் பார்க்கும் படலம்', 'பனித்துளியில் பாற்கடல்', 'விசாரிக்கப்படாத விலாசங்கள்', 'விழியில் விரிசல்களா?' ஆகிய கவிதைகள் இவ் வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

''பெண்ணின் / உடலில்
ஐ.எஸ்.ஐ. முத்திரை/ இருக்கிறதா
என்பது தவிர / அனைத்தும்
ஆராயப்பட்டது'' (ப.51)

என்பது 'பெண் பார்க்கும் படலம்' பற்றிய கவிஞரின் கூர்மையான விமர்சனம்.

கவிஞரின் கருத்தில் பெண்கள் 'பெயர் வெளியாகாமல் / கதை பிரசுரமாகும் / கதாசிரியர்கள்' (ப.64) போன்றவர்களாம். அவர்கள் 'விளம்பரமில்லாமல் / செய்கிற / தியாகங்கள் ஆயிரம்/ யாகங்களை / அர்த்தமற்றதாக்கிவிடுகின்றன'வாம்! (ப.65)- கவிஞரின் முற்போக்குப் பார்வைக்குக் கட்டியம் கூறும் இடம் இது!

''ஆறாக ஓடி சலசலப்பை / ஏற்படுத்தியது போதும்;
கடலாகப் பொங்கி எப்போது/போராட்டப் புயல்களைத்
தோற்றுவிக்கப் போகிறீர்கள்?'' (ப.87)

எனக் கவிஞர் இன்றைய பெண் இனத்தை நோக்கித் தொடுத்திருக்கும் கேள்விக் கணை பொருள் பொதிந்த ஒன்றாகும்.

புதுக்கவிதையின் தனிப்பெரும் பண்புகள் இரண்டு. ஒன்று, இன்றைய சமுதாயத்தையோ மனிதனையோ நோக்கிக் கூர்மையான கேள்விக் கணைகளைத் தொடுப்பது; இன்னொன்று, இரண்டையும் ஆழமாக விமர்சனம் செய்வது. புதுக்கவிதைக்கே உரித்தான இவ்விரு பண்புகளும் கவிஞர் இறையன்புவிடம் சுடர்விட்டு நிற்கக் காண்கிறோம். உள்ளங்கவர் உதாரணம் ஒன்று இதோ:

''பக்தர்களே! / ஒரு நிமிடம்.
நைவேத்தியம் செய்தவற்றை/ எல்லாம்
சாமியே/ சாப்பிடுமென்றால்
படைப்பதால் / பரவசமடைவீர்களா
சொல்லுங்கள்?'' (ப.68)

இங்கே பக்தர்களை நோக்கிக் கவிஞர் கேட்டிருக்கும் வினா காரசாரமானது; நேரடியாகச் சென்று தொடர்புடையவர்களைத் தாக்கும் வல்லமை பொருந்தியது.

'முதிர்ச்சி' என்ற கவிதை இன்றைய இளைய தலைமுறையைப் பற்றிய கவிஞரின் விமர்சனத்தை முன் வைத்துள்ளது. அக் கவிதை வருமாறு:

''இன்றைய இளைஞர்கள்/நடைமுறை/வாழ்க்கையைப்
புரிந்து கொண்டவர்கள்/ அதனால் தான்
காதல் கடிதங்களைப் / பகிர்ந்து கொண்டவர்கள்
கல்யாணப் பத்திரிகையையும்/பரிமாறிக் கொள்கிறார்கள்''
(ப.88)

'செம்புலப் பெயல் நீர் போல் அன்புடை நெஞ்சம் தாமாகக் கலந்த' காலமெல்லாம் இன்று மலையேறி விட்டது! காதல் கடிதங்களைக்

கணக்கினறிப் பகிர்ந்து கொண்டவர்களே கணக்குப் பார்த்துக் கல்யாணப் பத்திரிகையையும் பரிமாறிக் கொள்ளும் கலிகாலமே இன்று நடந்து வருகிறது!

எந்த விதமான பாசாங்கும் பூச்சும் இன்றிப் போகிற போக்கில் இயல்பான மொழியில் இன்றைய நடைமுறையைச் சுட்டிக் காட்டுவது- சில நேரங்களில் தட்டிக் கேட்பது - இன்னும் சில வேளைகளில் குத்தியும் காட்டுவது புதுக்கவிதையின் தனித் தன்மைகளுள் ஒன்று ஆகும்.

''சுருக்கிக் கூப்பிடுவதற்கு / ஏன்

நீளமாய்ப் / பெயர் வைக்கிறார்கள்?'' (ப.89)

என்னும் குறுங்கவிதை இவ் வகையில் மனங்கொளத் தக்கதாகும். பிறிதோர் எடுத்துக்காட்டு:

''மௌனத்தைப் பற்றி / மணிக்கணக்காய்ப்

பேசினான்'' (ப.60)

'உன்னிலிருந்து தொடங்கு' எனக் கவிஞர் இக் கவிதைக்குத் தந்திருக்கும் தலைப்பு படிப்பவர் சிந்தனையைத் தூண்டுவதாகும்.

'காதலைப் பாடாத கவிஞன் இல்லை; காதலைப் பாடாதான் கவிஞன் இல்லை' என்பார்கள். இக் கூற்று இறையன்புவுக்கும் பொருந்துவதாகவே உள்ளது. சமூக அவலங்களைச் சாடும் போது வல்லினமாக இயங்கும் இறையன்பு, காதலைப் பாடும் போது மெல்லினமாக மாறிவிடுகின்றார்; கற்பனையும் முருகியலும் கை கோர்த்துச் செல்லும் வண்ணம் கவிதை படைக்கின்றார். 'நெடுநாள் சந்தேகம்' என்பது கவிஞர் படைத்துள்ள ஒரு காதல் கவிதை, அதில் வரும் காதலனுக்கு நெடுநாளாக ஒரு சந்தேகம். என்ன சந்தேகம் அது என்று கேட்கிறீர்களா? இதோ கவிஞரே கூறுகிறார், கேளுங்கள்:

''கண்ணே
உன் விழிகளோ / மீன்கள்
இதழ்களோ / பவளங்கள்
பற்களோ /முத்துகள்
கழுத்தோ / சங்கு
கூந்தலோ /அலைகள்
எனக்கொரு / சந்தேகம்
உன்னை உன்/ பெற்றோர்
கடற்கரையோரம்/கண்டெடுத்தார்களா
என்ன?'' *(ப.1)*

'மாசறு பொன்னே, வலம்புரி முத்தே' என்று காதல் மொழி பேசிய சிலப்பதிகாரக் கோவலனின் மறுபதிப்பாக விளங்குகின்றான் இக் கவிதையில் வரும் காதலன்.

கவிஞர் படைக்கும் பிறிதொரு காதலன், 'உனது பெயரை/ மீண்டும் மீண்டும்/ உச்சரித்த பொழுதுதான் / இனிப்புக்கு இன்னொரு அர்த்தம் / இருப்பதையே / எனது நா உணர்ந்து கொண்டது' (ப.130) எனக் காதல் உணர்வு ததும்பி நிற்கும் ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்குகின்றான்.

சமூக, பொருளாதார, அரசியல் நடப்புகளையும் நிகழ்வுகளை யும் இறையன்பு தமக்கே உரிய பாணியில் தம் கவிதைகளில் ஆங்காங்கே பதிவு செய்துள்ளார். 'இங்கே / எல்லாரும் பொதுவுடைமைவாதிகளாய் / மாறுவது / தம்மை விடப் / பணக் காரர்களைப் / பார்க்கும் போது மட்டும் தான்' (ப.66) என்பது 'பொதுவுடைமை' என்னும் தலைப்பில் கவிஞர் படைத்திருக்கும் ஒரு குறுங்கவிதை. இதே போல் 'திட்டம்' என்னும் தலைப்பில்

கவிஞர் தீட்டியுள்ள பிறிதொரு குறுங்கவிதையும் சிந்தனையைத் தூண்டுவது. அக் கவிதை இதோ:

''இங்கே புல்லுக்குப் / போய்ச் சேர
வேண்டுமென்பதற்காகவே
நெல்லுக்கு/நீர் திறந்துவிடப் படுகிறது''

(ப.30)

'நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடி, புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்' என்னும் பழங்கவிதையே இக் கவிதை யில் காலத்திற்கு ஏற்ற புதுக் கோலத்தினை எடுத்துள்ளது.

எப்போதும் அதிரடியே- ஆர்ப்பாட்டமே- ஆரவாரமே எல்லோரையும் எளிதாகவும் விரைவாகவும் சென்று சேரும்; ஆனால், சென்று சேர்ந்த வேகத்திலேயே அவை உடனடியாக மறைந்தும் போய்விடும். அமைதியோ மெதுவாகவே நடை பயிலும்; ஆனால், காலமெல்லாம் நிலைத்து நிற்கும். இக் கருத்தினைப் புலப்படுத்தும் விதத்தில் 'வாய்மை' என்னும் தலைப்பில் இறையன்பு படைத்துள்ள கவிதை வருமாறு:

''அமைதியாக / வருகின்ற நிலவல்லவா
இரவெல்லாம் / நிலைத்து நிற்கிறது
இடி என்னும் / தண்டோரா
போட்டுக் கொண்டு / வரும் மின்னல்
நொடியில் / மறைந்து விடுகிறது'' *(ப.17)*

நிலவு- இடி- மின்னல் என்னும் மூன்றையும் கொண்டு கவிஞர் இங்கே வாசகர்களுக்கு உணர்த்தி இருக்கும் செய்தி விழுமியது. ஆழ்ந்து நோக்கினால், இக் கவிதை இறையன்புவின் படைப்புத் திறத்திற்கும் ஆளுமைப் பண்புக்கும் பொருந்தி வருவதே ஆகும்.

எழுத்திலோ பேச்சிலோ தனி வாழ்விலோ இறையன்பு ஒரு போதும் தண்டோரா போட்டுக் கொள்வதே இல்லை; முழு நிலவு போல் அமைதியாக இருந்து காலமெல்லாம் நிலைத்து நிற்க வல்ல படைப்புக்களை உருவாக்குவதே அவரது குறிக்கோளும் கொள்கையும் ஆகும்.

- புதிய காற்று, மார்ச் 2007

மதிப்புரை மாலை

I

பேராசிரியர் இரா. மோகனின் 'கலைஞர் தமிழ்' நூலுக்கு மூதறிஞர் நா. பாலுசாமி 'செந்தமிழ்' இதழில் எழுதிய மதிப்புரை:

முனைவர் மோகனால் தொகுத்தும் வகுத்தும் படைக்கப்பட்டுள்ள 'கலைஞர் தமிழ்' என்னும் நூல் திறனாய்வுத் துறையில் இணையற்றது எனல் மிகையாகாது. வாழ்க்கை வரலாறுகள் எழுவதிலும், திறனாய்வு நிகழ்த்துவதிலும் வல்லவரான திரு. மோகன் தமிழறிஞர்களின் பாராட்டுக்கு உரியவர். செம்பாகமான நடை, தூய தமிழ், கருத்துத் தெளிவு, எளிமை முதலியன இவரது இலக்கிய ஆழத்தைப் புலப்படுத்துகின்றன.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் தமிழுக்குச் செய்துள்ள - செய்து வரும் பணிகள் பலப்பல. கலைஞர் ஒரு பல்கலைக் குரிசில், நாவலர், பாவலர்; புதுமை விருப்பினர்; தமிழுக்குப் பாதுகாவலர். இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம். தமிழகத்திற்கு வாய்த்த - கிடைத்தற்குரிய கருவூலம் கருணாநிதி அவர்கள். சங்க இலக்கியம் தொடங்கி இக்காலக் கவிதை வரை அவர் தொடாத துறையே இல்லை எனலாம்.

முனைவர் மோகன் கலைஞரைப் பல முனைகளில் படம் பிடித்துள்ளார். தக்க சான்றுகள் தரப்பட்டுள்ளன. தமிழறிந்த தமிழ்ப் பாதுகாவலர் தமிழ்நாட்டின் முதல் அமைச்சராக வாய்த்திருப்பது தமிழ் அன்னையின் தவமே ஆகும். 'இனியொரு கம்பனும் வருவானோ? இப்படியும் கவி தருவானோ?' என்று நாமக்கல் கவிஞர் பாடியது போன்று, இனியொரு முதல்வரும் வருவாரோ இப்படியும் தமிழ் தருவாரோ? என வியக்கத் தோன்றுகிறது. கலைஞரைப் பற்றிப் பாராட்டியோர் பலர். ஆயின் முனைவர் மோகனின் படப்பிடிப்பு தனிச் சிறப்பு வாய்ந்தது. சுருங்கக்கூறின், பேரறிஞர் சாமுவேல் ஜான்சனுக்கு ஒரு பாஸ்வெல் கிடைத்தது போலவும், சேக்ஸ்பியருக்கு ஒரு பிராட்லி கிடைத்தது போலவும், மில்டனுக்கு ஒரு லூயி கிடைத்தது போலவும் கலைஞருக்கு ஒரு மோகன் கிடைத்துள்ளார் என்றே கூறிவிடலாம் போல் தோன்றுகிறது. இளம்தலை முறையினரும், எழுத்தாளரும், ஆட்சியாளரும், 'அறிஞரும் படித்துப் பயன் பெறத்தக்க கருத்துக் கருவூலமாகத் திகழ்கிறது கலைஞர் தமிழ்.'

II

பேராசிரியர் இரா. மோகனின் 'விரல்கள் பத்தும் மூலதனம்' நூலுக்கு அமெரிக்க நாட்டு அனைத்துலகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த டாக்டர் செல்வின் குமார் எழுதிய கருத்துரை:

Dr. Selvin Kumar M.A, Ph.D.,
Editor in Chief, *The Maryland Reportor,*
President, International Tamil University USA
1219 White Sands Drive
Lusby Maryland 20657

சனவரி 11, 2007

தங்களின் 'விரல்கள் பத்தும் மூலதனம்' மற்றும் மடல் கண்டு மகிழ்கிறேன்.

நீண்ட இடைவேளைக்குப் பிறகு நல்லதொரு தமிழ் நூலை .இரசித்த பெரும் நிறைவு. இன்றைய வாழ்விற்கு இது ஒரு இனியவை அறுபது!

தங்குதடையற்ற இலக்கிய நடை. ஆழமான கருத்துக்கள் மிக நகைச்சுவையோடு அணுகப்பட்டதால் ஆரம்பம் ஒரு பேரின்பம். பின்பாதி நூல் இளைஞர்கள் எப்படியெல்லாம் சாதிக்க வேண்டும் என்பதற்கு உங்கள் வாழ்வே ஓர் உயர்ந்த கலங்கரை விளக்கமாய் மிளிர்கிறது. மாபெரும் தமிழ் அறிஞர்களை நினைவூட்டியபடியே உலகளவில் மிக பரிச்சயமற்ற பல இன்றைய படைப்பாளர்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து தமிழ் சிந்தனைக்குப் பொட்டு வைத்து உங்களோடு தவழ விட்டிருப்பது இனிமை.

நிறைவு செய்யப்பட்ட கருத்து உழைப்பே உயர்வு; அதற்கு வானமே எல்லை என்பதற்குத் தங்களின் வாழ்வும் வளனும் சான்றாய் அமைய வாழ்த்துகிறேன்.

தங்கள் துணைவியாரையும், பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களையும், தம்பி சோலை மற்றும் நண்பர்களையும் அன்புடன் கேட்டதாகச் சொல்லவும்.

அன்புடன்

வாழ்த்துக்கள்.

S Selvin Kumar

எஸ்.செல்வின்குமார்

III

பேராசிரியர் இரா. மோகனின் 'இன்பமே எந்நாளும்' நூலுக்கு மாணவி பா. தமிழ்மலர் எழுதிய மகிழ்வுரை:

மதிப்பிற்குரிய திரு. இரா. மோகன் ஐயா, அவர்களுக்கு, தங்களுடைய 'இன்பமே எந்நாளும்' என்ற தன் முன்னேற்ற நூலைக் கடந்த ஆண்டுதான் படிக்க நேர்ந்தது. தங்களைப் பற்றிச் சரிவரத் தெரியாத நிலையில் 'என்னதான் செய்தி இருக்கிறது' என்று பார்ப்போமே?' என்ற மனநிலையில்தான் படிக்க ஆரம்பித்தேன். ஆரம்பமே ஆடம்பரமற்ற வார்த்தைகளினால் இயல்பாய் ''மு.வ.வின் 3 இன்பங்களை'' எடுத்துக் கூறியிருப்பது பற்றிச் சிந்தித்தேன். தொடர்ந்து படித்தேன். படித்தேன். படித்தேன். இறுதியில் ''இந்தியா வளரும் நாடு என்ற நிலையில் இருந்து மாறி வளர்ந்த நாடு என்ற தகுதியைப் பெற வேண்டுமெனில் அதற்கு நாம் தான் உழைக்க வேண்டும்'' என்று நிறைவாக முடித்திருப்பது கண்டு பல உண்மைகளை உணர்ந்து ரசித்தேன். வியந்தேன். ஒவ்வொன்றையும் ருசித்தேன். ஏனென்றால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ''படித் தேன்''.

''வாளின் முனையை விட எழுதுகோலின் (பேனாவின்) முனை கூர்மையானது'' என்பதை நிரூபித்திருக்கிறது தங்களுடைய தன் முன்னேற்ற நூல். வாழ்வியல் நெறிமுறைகளை 60 படிக்கட்டுகளாக்கி ஒவ்வொரு படியையும் ஏறுவதற்குக் கற்றுக் கொடுக்கும் நூலாக அமைந்திருக்கிறது 'இன்பமே எந்நாளும்'. 60 கட்டுரைகளும் ஒன்றுக்கு ஒன்று சளைத்தது இல்லை. படிப்பவரின் உள்ளத்தில் உவகையையும், ஊக்கத்தையும் நிலைபெறச் செய்யும் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு 'பலாச் சுளை'.

சோதனைகளைக் கண்டு எதிர்கொள்ளாமலேயே தளர்ந்து போகும் மனிதர்களுக்கு உள்ளத்தில் உறுதியையும், சோதனைகளை எதிர்கொண்டு காயம்பட்டவர்களுக்குச் சாதனைகளை சந்திக்க வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது 'இன்பமே எந்நாளும்'. எடுத்துக்காட்டாக, எனக்குச் சில சமயங்களில் ஏற்படும் மனச்சோர்வின் போது என் மனம் அடைக்கலம் புகும் நூல்களுள் ஒன்றாக இருக்கிறது. இந்த 'இன்பமே எந்நாளும்'. யாருக்கும்

வலிக்காதவாறும், யாரும் சலித்துக் கொள்ளாதவாறும் அமையப் பெற்றதே இந்நூலின் சிறப்புக்களுள் முதன்மை வாய்ந்தது.

வாழ்க்கையை வாழ்க்கையாக வறியவர்களும் வாழ்வதற்காகப் பல அறிஞர்களின், மாமனிதர்களின் வாழ்வியல் தொடர்புகளோடு தாங்கள் கூற வந்த கருத்துகளை எளிமையாக அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் திருக்குறளையும், பல கவிஞர்களின் பாடல்களையும், பல மாமனிதர்களின் வார்த்தைகளையும், வாழ்க்கைகளையும் மேற்கோள் காட்டியிருப்பது மற்றொரு வகையில் சிறப்பாக இந்நூலுக்கு வலிமையை மேலும் சேர்த்துள்ளது.

தமிழ்த்தாயின் மடியில் பிறந்து, தவழ்ந்து, அவள் கொடுத்த தமிழ்ப்பாலை உண்டு, வளர்ந்து, அவளுக்குட்பட அனைவருக்கும் 'தமிழ்த் தொண்டினை' தரணியெங்கும் மேற்கொண்டு வாழ்ந்து வரும் தங்களைச் சிரம் தாழ்த்தித் தலைவணங்குகின்றேன்!

''இன்பமே எந்நாளும் -
எந்நாளும் இன்பமாய் வாழ''

நன்றி!

இப்படிக்கு,
தாங்கள் எழுதிய நூல்களுள்
ஒன்றினை மட்டுமே படிக்க முடிந்த
வருத்தத்துடனும், ஒன்றினையாவது
படிக்க முடிந்ததே என்ற மகிழ்வுடனும்,



பா. தமிழ்மலர்
24.02.2007

A.P.J. Abdul Kalam

Rashtrapati Bhavan
New Delhi - 110004

பிப்ரவரி 22, 2007

பேரா. திரு. மோகன் அவர்களுக்கு,

வணக்கம்.

தாங்கள் எழுதிய கடிதமும், அனுப்பிவைத்த தங்களது 'கலைஞர் தமிழ்' என்ற நூலும் கிடைக்கப் பெற்றேன். நன்றி.

பக்கம்-137-இல், தாங்கள் மேற்கோள் காட்டியிருக்கும், தெய்வப் புலவராம் திருவள்ளுவர் அருளிய திருக்குறளின் 'ஆள்வினை உடைமை' எனும் தலைப்பிலான 62-ஆம் அதிகாரத்தின் கீழ்வரும் 619-ஆம் பா-வுக்கான, கலைஞர் அவர்களின் உரையில் இடம் பெற்ற விளக்கம், அருமையான கருத்துள்ள விளக்கமாகும்.

உங்களுக்கு என் வாழ்த்துக்கள்.

அன்புடன்,

ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்

(ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்)